னானால், அவன் பெருத்த காரியங்களைச் செய்து பிரபலமான சித்தியடைந்திருப்பான். அவன் அநேகம் வியாபாரங்களைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தானாயினும் ஒன்றையும் செய்யவில்லை. அதுகண்டு, எல்லாரும் அவனைப் புத்தி நிலையில்லாதவனென்று சொல்லத் தலைப்பட்டார்கள். அவன் தடையறப்பெருகும் நீரோட்டத்துக்கு ஒப்பாக கம்பீர நடையுள்ள கிரந்தங்கள் எழுத வல்லவன்; கிரந்தங்கள் எழுத வேண்டுமென்னும் பேராசையும் அவன் நெஞ்சிற் குடிகொண்டிருந்தது. எழுதியிருப்பானானால், அந்தக்கிரந்தங்களை அழிந்துபோகவிட உலகத்தார்க்கு ஒருபொழுதும் மனம் ஒப்பாது. ஆனால், கான்ஸ்தந்து சிறந்த சித்தவிருத்திகளை நாடினானாயினும், ஜீவனத்திற்கு மிகவும் நீசமான வியாபாரங்களையே செய்யப்பழகி வருத்தப்பட்டான். அவன் எழுதிய கிரந்தங்களின் மேம்பாடு அவனுடைய இழிந்த ஒழுக்கத்தை மறக்கடிக்கவில்லை. மதசம்பந்தமாய் ஒருபுஸ்தகம் எழுதி வரும்பொழுது அவன் அடிக்கடி சூதாடப்போவான். 'அடால்பி' எனும் கிரந்தம் எழுதுகையில் அவன் மானத்தாழ்வுறச் சோர வியாபாரம் செய்துகொண்டு வந்தான். அவனுக்குப் புத்தி பலம் மெத்தவும் இருந்தும் நற்குண நற்செய்கைகளில் அபிமான மில்லாமையால் அது அவனுக்குச் சிறிதும் பலமாகாமற் போய்விட்டது. "போ! கௌரவமும் மேம்பாடும் இருந்தாலென்ன? எனக்கு வயது ஏற ஏற அவைகளில் ஒன்றும் இல்லையென்று மேலுமேலும் எனக்குத் தெளிவாய்த் தெரிகின்றது." என்று அவன் மொழிந்தான். இது மிகவும் துர்ப்பாக்கியனான ஒருவன் ஒன்றும் அறியாமல் ஊளையிடுகிற வாக்கியமே யன்றி வேறல்ல. பின்பு ஒரு தடவை அவனே "நான் ஒன்றுக்கும் உதவாத சாம்பலும் தூசியும் ஆனேன்" என்றும், "துன்பமும் வருத்தமும் துணை கூடிய நிழலுக்குச் சமானமாக நான் உலகத்தில் சஞ்சரிக்கிறேன்" என்றும் அவன் தன்னைச் சுட்டி உரைத்தான். வால்தேயருக்கு உள்ள ஊக்கம் தனக்கு இல்லையே என்று அவன்

குறைப்பட்டான். அவ்வூக்கம் தனக்கு அமைந்திருக்குமா
னால், தன் புத்தியின் பெருமையைப் பார்க்கிலும் அதுவே
தனக்கு மிக்க உபயோகமாயிருக்கு மென்று எண்ணினான்.
ஆயினும் அவனுக்குப் புத்தி நிலை இல்லை. எதற்கும் ஆசைப்
பட்டானே யொழிய மற்றொருபயனையும் அவன் பெறவில்லை.
கடைசியாய் அவனுடையதேகம் நியாயமாய் வலிமைகுன்ற
வேண்டிய காலத்துக்கு வெகுநாள் முன்னமே வலிமைகுன்
றிக் காரியத்திற்குச் சிறிதும் உதவியற்றதாகிவிட்டது. அவன்
தன்னை அந்தரத்தில் ஓரடியும் தரையில் ஓரடியுமா யிருப்பவ
னென்று சொன்னான். மேலும் அவன் தனக்கு நீதி நியாயம்
ஒன்றும் இல்லையென்றும், சன்மார்க்க ஒப்புரவு இல்லையென்
றும் ஒப்புக்கொண்டான். ஆனதுபற்றியே, புத்தி சாமர்த்தி
யம் விசேஷமாயிருந்தும் அவன் ஒருகாரியமும் செய்ய உபா
யம் தேடவில்லை; மிகவும் துர்ப்பாக்கியனாகவே வெகுவருஷ
காலம் இப்பூமியில் பிழைத்திருந்து, கடைசியில் மிகவும் ஈன
னா யிறந்துபோனான்.

'நோர்மானியர் ஜயசரித்திரம்' எனும் கிரந்தம் எழுதிய
ஔகஸ்தின் தியரி (Angustin Thierry) என்பவனுடைய
ஒழுக்கம் காலஸ்தனின் ஒழுக்கத்திற்கு இருளுக்கு ஒளி
போல வியக்கத்தகு மாறு வேறுபட்டிருந்தது. அவனுடைய
சரித்திர முழுதும் விடாமுயற்சி, ஊக்கம், தற்பயிற்சி, எப்
போதும் ஓயாமல் கல்வி கற்பதிலேயே கருத்துடைமை முத
லிய நற்குணங்களுக்குச் சிறந்த திருஷ்டாந்தமா யிருந்தது.
கல்விமுயற்சியில் அவன் தன் கண்களையும் இழந்தான்; தேக
சவுக்கியத்தையும் போக்கடித்துக்கொண்டான். ஆயினும் சத்
தியத்தில் நாட்டத்தைமட்டும் அவன் ஒருபொழுதும் கைவிட
வில்லை. தேகபலம் மிகவும் குன்றி, தாதி கையில் அறியாக்
குழந்தைபோல், அறைக்கறை எடுத்துக்கொண்டு போய்வி
டும்படி நேர்ந்தகாலத்திலும், அவன் மனோதைரியம் குன்ற
வில்லை; கண்கெட்டுத் திக்கற்றிருந்தும், அவன் பின்வருமாறு
உதாரபுத்தி விளங்க மொழிந்து கல்வி முயற்சியை முடித்

நான். அதாவது: — "தேசத்திற்கு அனுகூலமான நன்மைகள் பலவற்றுள் சாஸ்திரங்களாலாகிய நன்மையும் ஒன்றென நான் நினைத்திருக்கிறேன். அவ்வண்ணமே அனைவராலும் மதிக்கப்படுகிறபக்ஷத்தில், சேனாவீரர்கள் போர்க்களத்தில் போராடித் தமது தேசத்துக்கு எவ்வளவு நன்மை விளைவிப்பார்களோ, அவ்வளவு நன்மையை நானும் என் தேசத்துக்கு விளைவித்திருக்கிறேன் என்று உறுதியாய்ச் சொல்லலாம். நான் படுகிற பிரயாசை எப்படியாக முடிந்தாலும், இந்த விஷயம் ஒருபோதும் தவறாதென்று எண்ணுகிறேன்; மேலும் இக்காலத்தவர்களுக்குப் பெரிய ரோகமாயிருக்கின்ற மனோதைரிய மின்மையை விலக்கவும், தமக்கு ஒன்றிலும் நம்பிக்கை இல்லையென்று முறையிட்டுச் செய்வது ஏதென்று அறியாமல், பூசித்துப் போற்றத்தகும் பரப்பொருளை எங்கெங்கும் தேடியும் காணாதிருக்கும் மனோபலம் குன்றியவர்கள் சிலரை நேர்மையான பிரபஞ்சமார்க்கத்தில் மீளவும் கொண்டுவந்து சேர்க்கவும் அது உதவவேண்டுமென்று விரும்புகிறேன். சமஸ்தமான மனிதர்க்கும் தக்கதொழில் இல்லையென்று இத்தனை மனம் கசந்து சொல்வானேன்? அது சுவாசாசய மனைத்திற்கும் ஏற்கும் வாயு இல்லையென்று சொல்வதுபோலல்லவோ இருக்கின்றது. கருத்தும் பொறுமையுமாய்க் கற்கத்தகும் கல்வி யில்லையா? அது நம்மெல்லோருக்கும் சாத்தியமானதும், எந்த அபேக்ஷையையும் பெறுவதற்கு ஏற்ற அடைக்கலமும் அல்லவா? அதைக்கொண்டு கஷ்டகாலத்தையும் அதன் கொடுமை நமக்குத் தெரியாதபடி சுகமாய்க் கழிக்கலாம்; ஒவ்வொருவனும் தன் அதிர்ஷ்டத்தைத் தானே தேடிக்கொள்ளக்கூடும்; ஒவ்வொருவனும் தன் வாழ்நாளைப் பெருமையாகவே கழிக்கக்கூடும். நான் செய்துவந்தது இதுவே; மறுபடியும் நான் இப்பூலோக வாழ்க்கையைத் துவக்கும்படி யிருந்தால் அப்பொழுதும் இவ்வண்ணமே செய்வேன்; என்னை இப்பதவியில் வருவித்தது எதுவோ அதையே ஸ்ரேஷ்டமென்று நான் தெரிந்துகொள்வேன். கண்கெட்டுத் திக்

கற்று ஓயாது வருந்துகிற நான் அடியில் வருகிற விஷயத்தை
எவர்க்கும் திருஷ்டாந்தமாய் எடுத்துரைக்கலாம்; நான் சொ
ல்வதனால் இது ஒருபோதும் சந்தேகத்திற்கு இடமாகாது.
இவ்வுலகில் சிற்றின்பநுகர்ச்சி, செல்வம், தேகசுகம், இவை
களைப்பார்க்கிலும் சிறந்தது ஒன்று உண்டு; அதாவது வித்தி
யாவிரதமாம்" என்பதாம்.

பலவிஷயங்களில் கோலரிட்ஜ்(Coleridge) என்பவர் கான்
ஸ்தந்துக்குச் சமானராயிருந்தார். கான்ஸ்தந்தைப்போல் அவ
ர்க்குச் சிறந்த சாமர்த்தியங்கள் இருந்ததோடுகூட, அவரைப்
போலவே காரியங்களில் மனவுறுதியுமில்லாதவரா யிருந்தார்.
புத்திசக்தி அவருக்கு விசேஷமாய் அமைந்திருந்தும் உழைப்
பின்ஊக்கம் சிறிதும்அமைந்திருக்கவில்லை. ஆனதுபற்றி இடை
யறாதுழைப்பது அவர் மனதிற்கு வெறுப்பாயிருந்தது. சுவா
தீனமாயிருப்பதின் பெருமையும் அவருக்குத் தோன்றவில்லை.
லண்டன் நகரிலே ஜனங்களின் இரைச்சலும் ஓங்கி யெழுகின்ற
புகைகளும் மிகுந்துள்ள தொழிற்சாலைகளில் நேர்மையாய்
நடந்தேறும் கவுரவமான வியாபாரங்களை இழிவென்று சிறக்
கணித்துத் தாம் ஹைகேட்சோலைக்குப்போய்ச் சிஷருக்கு
ஞானோபதேசஞ் செய்துகொண்டு, புத்தியால் உழைத்துச்
சம்பாதிக்கும் ஸௌதியென்பவரிடத்தில் தன்பெண்சாதி
பிள்ளைகளைப் பிழைக்கும்படி விட்டிருந்தார்; இது இழிவென்
று அவருக்குத் தோன்றவில்லை. பாட்டுக்குத் தக்கபயன் தரும்
வேலை தமக்குக் கைவசமாயிருந்தும், அவர் அதைச்செய்வதை
விட்டு இஷ்டரிடத்தில் இரந்துண்ணும் எளிய துறையில்
இறங்கினார்; தத்துவஞானவிஷயத்தில் அவர்க்குள்ள மனோ
பாவங்கள் உயர்ந்தவைகளா யிருந்தும், அன்றன்று கூலிக்கு
வேலைசெய்யும் பாட்டாளியும் இழிவென்று பின்னடையும்
அற்பமான வியாபாரங்களில் அவர் எண்ணமற்று இறங்கினார்.
இவர் குணம் ஸௌதியின்குணத்திற்கு எவ்வளவோவேறுபட்
டதா யிருந்தது. அவர் தம் மனதிற்கு இனிதென்று தெரிந்து
கொண்ட வேலைகளோடு கூட, வெகுவாய் வருத்தமானதும்

வெறுப்புண்டாக்கத் தக்கதுமான பிறர்குறித்த வேலைகளையும் செய்துகொண்டுவந்தது மாத்திரமேயன்றி, தமக்கு அறிவின் மீதுள்ள ஆசையால் அறிவை மிக்க ஆவலோடு இடையறாது தேடிக் களஞ்சியத்திற் கட்டிவைத்தார். பிரதிதினமும் நாழிகைதோறும் செய்யவேண்டிய வேலை இன்னின்னதெனக் குறித்துக்கொண்டு அதன்படி நடந்துவந்தார். புஸ்தகம் அச்சிடுவிப்பவர்க்குச்செய்யும் உடன்படிக்கைகளை அவர் காலவரம்புப்படி தவறாமல் நிறைவேற்றி வந்தார். தம்பெருங்குடும்பத்திற்கு மிகுதியாய்ச் செல்லும் தினச்செலவை முறைமையாய்ச் சேகரித்துக் கொடுத்தார். அவர் எழுதும் இறகு சுழலாது சும்மா இருக்கும்பொழுது அவர்க்குப் பிழைப்பிற்கு விளைபயிர்மற்றொன்று மில்லை. "என் ஜீவனோபாயமார்க்கம் ராஜமார்க்கம்போல் அகன்றவைகள்; என் ஜீவனோபாயமெல்லாம் ஒரு மைக்கூட்டினுள் அடங்கியிருக்கின்றது." என்று அவர் தாமே சொல்வது வழக்கம்.

"கோல்ரிட்ஜின் நினைவு" எனும் கிரந்தத்தை வாசித்தபின் ராபர்ட் நிக்கல் (Robert Nicoll) என்பவர் தம் இஷ்டர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், சிறிதளவு முயற்சியும் மனவுறுதியும் இல்லாததுபற்றி இந்த மனிதனுக்கு இருந்த அத்தனை சிறந்தபுத்தி வலிமையும் வீணாய்ப்போயிற்று!" எனக் குறிப்பித்தார். நிக்கல் என்பவரோ சத்தியமும் நிரகுணமு முள்ளவர். அவர் வாலிபவயதிலேயே இறந்துபோனாராயினும், அதற்குள்ளே இவ்வுலகவாழ்வில் உள்ள பல பெருஞ்சல்லியங்கள் அவர்க்கு நேர்ந்தன, அவை யெல்லாவற்றையும் அவர் அலட்சியமாய் ஒதுக்கிவிட்டார். அவர் ஆதியில் சிறுகப் புஸ்தகவியாபாரம் செய்துவரும்பொழுது இருநூறு ரூபாய் கடன்சுமை அவர் தலையிற் பொறுத்தது. அது தமக்குக் கழுத்திற்கட்டிய எந்திரக்கற்போலப் பாரமாயிருந்தது என்றும், அதை இறுத்துத் தீர்த்துவிட்டால் பின்பு தாம் ஒருபொழுதும் மனுஷரிடத்தில் கடன்படுவதில்லை யென்றும் அவர் சொன்னார். அச்சமயத்தில் தாய்க்கு எழுதியகடிதத்தில் அவர்சொல்லியதாவது:—

அருந்தாயே, என்னைக்குறித்து விசாரப்படவேண்டாம். எனக்கு நாளொருவண்ணம் மனவுறுதியும் கோரிக்கையும் பெருகுகின்றன. இப்பொழுது என் வேலை வாசிப்பதல்ல, சிந்திப்பது. சிந்தித்து விஷயங்களை ஆராய ஆராய, மேலுமே லும் திரவியவானானாலும் ஆகாதிருந்தாலும் அறிவு மிகுந்தவன் ஆகிறேனென்று எனக்கு நன்றாய்த் தெரிகின்றது; திரவியத்திலும் ஞானமே மிகவும் சிறந்தது. வாழ்நாளில் பிறருக்கு மிகுந்த திகில் உண்டாக்குகின்ற துன்பம், தரித்திரம் முதலியவைகளாகிய துஷ்ட மிருகங்களனைத்திற்கும் நான் சிறிதும் பின்னடையாமல் எதிர்த்துச் செல்லக் கூடுமென்று எனக்கு மிகவும் தைரியமிருக்கின்றது. அதனோடுகூடத் தன்மானம், தெய்வ பக்த்தி முதலியவைகளையும் இழக்கமாட்டேனென்பது என் துணிவு. மனதினால் வெகு சிரமப்பட்டு மிக வருத்தினாலன்றி அடையக்கூடாத பதவி ஒன்றுண்டு. அப்படியே பின்வாங்காமல் பாடுபட்டு அப்பதவியை ஒருவன் பெற்றுக்கொள்வானானால், பின்பு அவனுக்கு இவ்வுலகமெல்லாம், ஓர் உயர்மலைச் சிகரத்தின்மேலேறி வினோதமாக மந்தமாருதம் வீசக் களித்திருப்பவனுக்குக் கீழே கம்பம் புயலில் அல்லாடுகிற பூமியெல்லாம் எவ்வண்ணம் தோன்றுமோ, அவ்வண்ணமாகத் தோன்றும். இப்போது அந்தப் பதவி எனக்கு அமைந்திருக்கிறதென்று நான் துணிந்து சொல்வதற்கில்லை யாயினும், நாளைக்குநாள் அது கிட்டி வருகிறதென்பது மட்டும் நன்றாய்த் தெரிகிறது'' என்று சொல்லியிருக்கிறார்.

மனிதனை ஆளாக்குவது செயலற்றிருப்பதல்ல, பிரயத்தனப்படுவதாம்; சவுக்கியமல்ல, கஷ்டங்களாம். உலகத்தில் இடையூறுகள் நேரிடாத நிலை ஒன்றுமில்லை. அந்த இடையூறுகளை யெதிர்த்து விலக்கினாலல்லது எந்தக் காரியத்திலும் நிச்சயமாய்ப் பயன் பெற முடியாது. ஆனாலும் அத்தடைகள் நமக்குச் சிறந்த ஆசிரியன்போல நல்லறிவு கொளுத்துகின்றவையாம். இவ்வண்ணமே நாம் செய்யும் பிழைகள் நமக்கு நல்ல அநுபவ முண்டாக்கும். "செய்தகாரியம் சித்

தித்து மேலெழுந்த வாரியாய்த் தொழில் செய்பவனைப் பார்க்கிலும் செய்த கருமம் சிதறியும் இளைக்காமல் பின்னும் கருமத்திற் கண்ணுயிருப்பவனே அதிகம் சாதிக்கமாட்டுவான்" என்று சார்லஸ் ஜேம்ஸ் பாக்ஸ் (Charles James Fox) என்பவர் சொல்லிவருவார். அவர் பின்னும் சொல்வதாவது, "வாலிபன் ஒருவன் முதல்முதல் பிரபலமாய்ப் பிரசங்கஞ்செய்து பிரசித்திபெற் றிருக்கிறானென்பது வாஸ்தவமே. அவன் பின்னும் பிரபலனாகக் கருதி மேன்மேலும் முயன்றுவரினும் வரலாம், அப்படியன்றி முதலிற் பெற்ற ஜயம் போதுமென்று திருப்திகூர்ந்து அம்மட்டில் விட்டுவிடினும் விடலாம். முதல் முறை கருமம் சிதறியும் அதை மனம் சலித்துக் கைவிடாமல் செய்துகொண்டு வரும் வாலிபன் ஒருவ னிருப்பானுனல்; முதல்முறை சித்திபெற்றவர்களிற் பெரும்பாலாரைக் காட்டிலும் அவ்வாலிபனே அதிக சமர்த்தன் ஆவானென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்" என்றார்.

நாம் செய்யும்காரியம் உடனே கைகூடி வருவதனால் நமக்கு எவ்வளவு அறிவு உண்டாகுமோ அதைப்பார்க்கிலும், காரியம் தவறிப்போவதனால் அதிகமான அறிவுண்டாகும். எப்படியெனில், செய்தொழில் சித்தியாமல் போவதனால் காரியத்திற்கு உதவாதது இன்னதென்று தெரியவருமாதலால் அதைக்கொண்டு நாம் பெரும்பாலும் அதற்கு இன்னது உதவுமென்று அறிகிறோம் ; ஒருபொழுதும் மோசம்போகாதவன் நூதனமாய் ஒன்றையும் கண்டுகொள்ளமாட்டான். மேலே எழும்பவேண்டிய நீர்மட்டத்திற்குமேல் முப்பத்து மூன்றடிக்கு அதிகமான தூரத்தில் இறைசால் இருந்தபொழுது, நீரிறைக்கும் யந்திரத்தைக்கொண்டு நீரிறைக்கும்படி பார்த்த முயற்சி தவறிப்போன காரணத்தாலேயே தத்துவ விசாரிகள் வாயு அழுத்துவதின் பிரமாணத்தைச் சூழ்ந்தறியவும், கலிலியோ, தாரிஸெல்லி, பாயில் என்னும் நிபுணர்களுடைய விமரிசைக்கு நூதனமான விஷயங்கள் வெளிப்படவும் வழியுண்டாயிற்று. "ரணவைத்தியர்கள் தாம்பெற்ற காரியசித்தி

களோடு கூடக் காரியத்தில் தமக்குநேர்ந்த கெடுதிகளையும் துணிந்து பிரசித்தப் படுத்துகிறவனையில் ரஸவைத்திய வித்தை விருத்தியாவதில்லை" என்று ஜான் ஹன்டர் சொல்லி வருவார். "யந்திர சிற்பவித்தையை நடத்துவதற்கு வேண்டியவை பலவற்றுள்ளும் மிகவும் முக்கியமாய்த் தெரியவேண்டியது செய்த எத்தனம் சிதறிய வரலாறே" எனவும், "கண்டுதவிர்த்த வழுக்களை உணர்த்தும் புஸ்தகம் ஒன்றுநமக்குவேண்டும்" எனவும் உவாத் என்னும் சிற்பி சொல்லியிருக்கிறார். அஸ்தலாகவத்துடன் செய்த பரீக்ஷை ஒன்றை ஒருசமயத்தில் ஸ்ரீ ஹம்ப்ரிடேவிக்குக் (Sir Humphry Davy) காட்டியபொழுது அவர், 'இயற்கையில் நான் அஸ்தலாகவ முள்ளவனாகப் படைக்கப் படாம லிருப்பதற்காகக் கடவுளைப் போற்றுகிறேன். ஏனெனில், இப்போது நான் கண்டறிந்துகொண் டிருக்கிற விஷயங்களுள் மிகவும் முக்கியமானவைகளெல்லாம், செய்யத் துவக்கியகாரியம் சித்திபெறாமல் தவறிப் போனதனாலேயே தெரியவந்தன." எனமொழிந்தார். பிரகிருதி தத்துவவிசாரத்தில் மிகவும் பிரசித்திபெற்றவரான மற்றொருவர் தாம் வியரிசைசெய்து வரும்பொழுது மேல்பார்வைக்கு வெல்லக் கூடாதது போலத் தடை ஏதாவது ஒன்று நேரும் சமயந்தோறும் ஏதாயினும் நுட்பம் ஒன்றை நூதனமாய்க் கண்டறியுந்தருணம் பெரும்பாலும் தமக்கு வாய்த்ததென்று எழுதிவைத் திருக்கிறார். சிறந்த அபிப்பிராயங்கள், நூதனமாகக் கண்டவிஷயங்கள், கற்பனைகள் முதலிய மிகப் பெருத்தவிஷயங்கள் யாவும் சாதாரணமாய்க் கஷ்டங்களும் கிலேசங்களும் அனுபவித்துச் சாதித்தவைகளேயன்றி வேறல்ல.

ரோஸ்ஸினி (Rossini) என்பவன் சிறுவனாயிருந்தபொழுது நன்றாய் மாத்திரம் அடிபட்டிருப்பானானால் சிறந்த சங்கீத வித்துவானா யிருப்பானென்றும், கஷ்டமின்றி எளிதில்கானம்பாடியதனால் பழுதாய்ப்போயின னென்றும் பீதோவென் (Beethoven) அவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறான். தமக்

குள் இருக்கும் திராணியை நெஞ்சார அறிந்தவர்கள் அதைப்
பற்றிப் பிறர் பிரதிகூலமாய் அபிப்பிராயப்படுவார்களென்று
அஞ்ச ஒருபோதும்நிமித்தம் இல்லை. தமது திராணியைப் பிறர்
தகுமளவிற்கு மிஞ்சப் புகழ்ந்து குற்றம் குறைகளைத் திட்ட
மாய்க் கண்டிக்காமல் கடைக்கணித்து விடுவார்களென்று அஞ்
சுவதற்கு அதிகநியாயம் உண்டு. மென்டெல்ஸன் (Mendels-
sohn) பெர்மிங்ஹமில் சங்கீதசாலையிற் பிரவேசிக்க எத்தன
மாய் 'இலைஜா' எனும் கீர்த்தனையை முதல்முதற் பாடியபொ
ழுது தன் இஷ்டர் ஒருவருக்கும், குற்றங்களைக் கண்டிப்பவர்க
ளுக்கும் "என் உடலில் உங்கள் நகம் ஏறும்படி செலுத்துங்
கள்; உங்கள் மனதிற்கு இதமா யிருப்பதைச் சொல்லவேண்
டாம், இதமல்லாததைச் சொல்லுங்கள்!" என நகைத்துக்
கொண்டு சொன்னான்.

வெற்றியைப்பார்க்கிலும் தோல்வியே தளபதியை அதிக
மாய்த் தெளியப்பண்ணுகிறதென்று ஒருவர் சொல்லியது
வாஸ்தவமே. உவாஷிங்டன் வென்ற சண்டைகளைப்பார்க்கி
லும் தோற்றசண்டையே அதிகம்; ஆயினும், அறுதியில் அவர்
எடுத்த கருமம் சாய்ந்தது. பாசறையிருந்து நெடுநாள்வரை
யும் படைத்தொழில் செய்து வெற்றியடைந்த உரோமர் முத
லில் சண்டை யனைத்திலும் தோற்றவர்களே. அடித்தா லன்
றிப் பேரிகை ஓசைப் படாதல்லவா? மொரூ (Moreau) என்
பவனை அவன் தோழர்கள் அப்படிப்பட்டபேரிகைக்குச் சமா
னமென்று சொல்வார்கள். உவெலிங்டனுக்குச் சேனைகளை
யடக்கி யாளுந் திறமை முதிர்ந்தது, தலை நிமிரவொட்டாமல்
மடக்கி அழுத்துமெனத் தோன்றிய கஷ்டம் தடை முதலிய
வைகளுக்கு இளைத்துப் பின்னடையாமல் எதிர்த்து நின்றத
னாலேதான்; எதிர்க்க எதிர்க்க அவருக்கு மனவுறுதி திடப்ப
ட்டு ஆண்டகைக்கும் தளபதிக்கும் உரிமையாய் அவர்க்குள்ள
மகத்தான லக்ஷணங்கள் விசேஷமாக வெளிவந்தன. இவ்
வாறே, சமர்த்தனான மாலுமிக்குப் புயலிலும் பெருங்காற்றி
லும் அகப்பட்டு வருந்தியபிறகுதான் அநுபவம் முதிர்ச்சி

பெறும்; அதனாலேதான் அவனுக்குத் தன் பலம் தனக்கு உதவுமெனு நம்பிக்கையும், தைரியமும், நல்ல கைப்பழக்கமும் உண்டாகும். பிரித்தானிய கடலோடிகளை நன்றாய்ப் பண்படுத்தியவைகள் அலை பொங்கி எழுகின்ற கடலும் மாரிகாலத்து அள்ளிருளிரவுகளுமேயாம்; இவ்வுலகில் இத் தொழிலில் அவர்களை வென்றவர் எவரும் இல்லை.

இல்லாமையானது நமக்கு வெகு கண்டிப்பான உபாத்தியாயர்போலிருப்பினும், பெரும்பாலும் அதுவே நமக்கு நன்மையை பயக்குவதாகும். வறுமை எனும் கடும் சோதனைக்கு நாம் இயற்கையாய் அஞ்சிப் பின்னிடுவது வழக்கமாயினும், அது வரும்பொழுது ஆண்மையோடு தீரமாய் நாம் அதற்கு எதிர்நிற்கவேண்டும். இதைப்பற்றி பரன்ஸ் (Burns) சொல்வதாவது, கஷ்ட நஷ்டங்கள் மிகவும் கண்டிப்பான பாடங்களானாலும் அவைகளால் நல்ல நீதிகள் விளங்கும். அதனால் உனக்குப் புத்திவரும். அப்புத்தி மற்றெதனாலும் உண்டாகாது'' என்பதாம்.

வறுமையால் விளையும் பயன் இவிதே. அது நமது திறமையை நமக்குத் தெரியக்காட்டி நம் உற்சாகத்தை வெளிவருத்தும். நடக்கையில் உண்மையான பெருந்தகைமை இருந்தால், வாசனைப் பூண்டுகளைப்போல், அதைக்கசக்க, இவ் வியபரிமளம் வீசும். "இடர்கள் மோட்சபதவிக்கு ஏறிப்போகும் ஏணிகள்''என்றொரு பழமொழியும் உண்டு. "தரித்திரந்தானும் என்ன? தரித்திரத்திற்கு வசப்பட்டவன் முறுமுறுப்பானேன்? தரித்திரம் என்பது கன்னிக்குக் காதுகுத்தும் வருத்தம்போலாம். குத்தின துவாரத்தில் விலையேறப்பெற்ற பூஷணங்கள் தரிப்பீர்களே'' என ரிக்தர் (Richter) கேட்கிறார். திடசித்த முடையவர்களுக்கு வறுமையால் சாதாரணமாய்த் தம்மைத்தாம் காத்துக் கொள்ளத்தக்க திறமை உண்டாகின்றதென லோகானுபவத்தால் தெரியவருகின்றது. வறுமையை மனம் சலிக்காமல் தைரியமாய்த் தாங்கவும்,

எதிரிடும்தடைகளை உல்லாசமாய் நின்று விலக்கவும் வல்ல வர்களென்று காணப்பட்டவர்கள் அனேகர், பிற்பாடு செல் வம்வந்துற்றபோது அதனால் உண்டாகும் அபாயகரமான கெடுதிகளுக்கு இளைக்காமல் உரங்கொடுத்துநிற்க வல்லவர் களல்லவென்று காணப்பட் டிருக்கிறார்கள். மெலிந்தவனு டைய அங்கியைத்தான் காற்று அடித்துக்கொண்டுபோகும்; ஆயினும், ஒருவாறு தேகபலமுள்ளவன் சவுக்கியத்திற்கு மிக வும் அனுகூலமான ஆதித்த கிரணம் எனும்அம்புமாரி இறைக் கும்பொழுது அந்தத் தேகபலத்தை விரைவில் இழந்திடும் அபாயஸ்திதியில் வந்துவிடுகிறான். ஆகவே, தரித்திரமுதலிய குறைகளால் விளையும் வினையினும் செல்வமுதலிய நிறைக ளால் விளையும் வினைகளைத் தவிர்த்து மனம் சலிக்காது தீர மாய் நிற்கப் பெரும்பாலும் உயர்ந்த சிக்ஷையும் விசேஷ வலிமையுள்ள நெறியும் வேண்டும். உதாரப் பிரகிருதியுள் ளவர்கள் சிலருக்குச் செல்வம்வர மனம் கசிந்து உள்ளன்பு உருகும். ஆயினும் செல்வம் வரும்பொழுது இந்த இயற்கை இல்லாதவர்கள் அனேகர் உண்டு. புன்னெஞ்சைச் செல்வம் கன்னெஞ்சாக்கும், அற்பரும் எளியவரு மானவர்களை அற்ப ரும் அகந்தையுடையோருமாக்கும். இவ்வண்ணம் செல்வம் மனதை அகந்தையில் அழுத்திவிடுவதா யிருக்க, வறுமையா னது சித்த நிர்ணயமுள்ளவனுக்கு அந்நிர்ணயத்தை மனவலி யாக முதிர்விக்க உதவும். "கஷ்டம் என்பது தந்தைதாயோடு ஒத்த சம்ரக்ஷகராகிய பரமகுருவின் அனுக்கிரகத்தால் நமக்கு அமைந்த மிகக்கண்டிப்பான சிறந்தசிக்ஷகராம். நம்மிடத்தில் நமக்குள்ள அன்பைப்பார்க்கிலும் அப்பரமகுருவிற்கு அதிக அன்பு உண்டாதலால், நம்மைப்பற்றி நமக்கு எவ்வளவு தெளி வாய்த் தெரியுமோ அதைப்பார்க்கிலும் அவர்க்கு அதிகதெளி வாகத் தெரியும். நம்முடன் மல்லாடுவோன் நமது நரம்பிற் குப் பலம் ஏற்றி நமது சாமர்த்தியத்திற்கும் கூர்மை உண் டாக்குவான்; இவ்வண்ணம் நமது பகைஞன் நமக்குத்துணை வன் ஆவான்" என பர்க் மொழிந்திருக்கிறார். மல்லாடிக்

கஷ்டத்தைவெல்ல நிமித்தம் இல்லாவிடின் பிரபஞ்சகாரியம் மிக எளிதானாலும் ஆகுமாயினும், அப்போது மனுஷருக்கு இத்தனை பெருமை இராது. ஏனெனில், கஷ்டங்கள்சேர்ந்து அவற்றை விலக்கி விருத்தியடைய விவேகத்தோடு பாடுபடுவோமானால் அப்போது நல்லொழுக்கமும் தன்பலம் கொண்டு அம்பலம்ஏறும் வகையும் நன்றாய் விளங்கும். இவ்வண்ணம் பெரும்பாலும் துன்பங்களே நமது க்ஷேமத்திற்கு மிக அனுகூலமான சிக்ஷையாகும். ஆயினும் நாம் இதைக்கண்டறியா திருக்கவுங்கூடும். இந்தியாவில் தளாதிகாரி உத்தியோகத்தினின்று அநியாயமாய் விலக்கப்பட்ட வீரமுள்ள வாலிபராகிய ஹாட்ஸன் (Hodson) நிர்நிமித்தமாய்த் தமக்குவந்த அவதூறையும் நிந்தையையும் நினைந்து மிகு துன்பம் அடைந்தபொழுதும் தீரம் குன்றாதிருந்து, எல்லாவற்றுக்கும் நியாயம் உண்டென்றும், அனுப்பு உண்டாக்கும் கடமைகளையும் செம்மையாகச் செய்தால் அவைகளுக்கு உரியபயன் விளையுமென்றும், விளையாவிடினும் அவைகள் கடமைகளே யென்றும் உள்ளம்தேறி, கொடிய ஆபத்தைச் சமர்க்களத்தில் மாற்றானைப் பார்ப்பதுபோல் அச்சமற்றுக் கண்ணெதிரே காணவும், குறித்தவேலையை மனவுறுதியோடும் என்னால் இயன்ற சாமர்த்தியத்தோடும் செய்யவும் முயன்று வருகிறேன் என்றும் இஷ்டர் ஒருவருக்குச் சொன்னார்.

இப்பூலோகவாழ்வென்பது பெரும்பாலும் மலைமேலேறிச் செய்யும் சண்டைபோலாம். அதில் கஷ்டமின்றி வெல்வது ஒருவேளை கௌரவமின்றி வெல்வதாகும். கஷ்டம் இல்லாவிடில் காரியசித்தி இல்லை. வருந்தி மலைந்து பெறத்தக்க பயன் ஏதும் இல்லாவிடில், அருந்தொழில் ஒன்றும் இராது. கஷ்டமானது மனவலி யற்றவர்களுக்குத் திகில் உண்டாக்கினாலும் உண்டாக்கும்; மனவுறுதியும் வீரியமு முள்ளவர்களுக்கோ முயற்சிசெய்யத் தூண்டுகோலாகும்; இடையூறு ஒன்றும் செய்யாது. மனிதர்களுடைய விருத்திக்கு இடையூறாக நேரும் பிரதிபந்தகங்களைப் பெரும்பாலும் நெறி திறம்பா நல்

லொழுக்கத்தாலும், உண்மையான சூரதையாலும், பிரவிர்த்தியாலும், கடைப்பிடியாலும், எல்லாவற்றிலும் மேலாய்க் கஷ்டத்தை மேற்கொண்டு கலிக்கு அஞ்சாமல் ஆண்மையோடு எதிர்நிற்கும் திட சித்தத்தோடு கூடிய சங்கற்பத்தாலும் வெல்லலாகுமென உலகத்தில்காணும் அனுபவங்கள் யாவும் தெளிவாய் விளக்கும்.

கஷ்டத்தில் உழல்வதாகிய பாடசாலையானது ஒருவனைப் போல ஊருக்கெல்லாம் உலகநீதி சிக்ஷை பயிற்றும் உத்தம பாடசாலையாம். கஷ்டத்தின்வரலாறுவது இதுவரையில் மனிதர் சாதித்த அருந்தொழில் பெருந்தொழில் நற்றொழில் இவையனைத்தின் வரலாறே தவிர மற்றப்படி அல்ல; இது வாஸ்தவம். சீதளம் அதிகரித்த வடதேசத்தார்க்கு அங்குள்ள நீரியற்கையும் நிலவியற்கையும் எவ்வளவும் சுகமேயல்ல, வேளைக் கொரு கோலம் கொள்ளும். ஆதியில் அத்தேசத்து நிலம் பயிர் பச்சை ஒன்றும் முளைக்காத பாழ்நிலமாயிருந்தது. பாழ்நிலமா யிருந்ததனாலேதான் அவர்கள் விசேஷ முயற்சி செய்து முன்னுக்கு வரலாயிற்று. அது நிற்க, வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் அவர்கள் கஷ்டப்பட்டுழன்று வருந்தும் வருத்தத்தைப்பற்றி உஷ்ணம் அதிகரித்த தேசத்தில் உள்ளவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இவ்வகைப் பல பிரதிகூலங்களாற் பீடிக்கப்பட்ட அவர்கள் சுகம் பெறுவதற்கு எத்தனை பாடுபட்டு வருந்தி யிருப்பார்களோ? இது சொல்வது அரிது. இவ்வண்ணம், நமது விளைபொருள் வர்க்கத்தில் சிறந்தவைகள் ஆதியில் அன்னியதேசத்தினின்று வரப்பெற்றவைகளா யிருந்தும், அவைகளை உண்டாக்க ஆவசியகமா யிருந்த சாமாத்தியத்திலும் முயற்சியிலும் இந்தப் பூலோகத்தில் எவருக்கும் இளைக்காத மனுஷர் அங்கே உற்பத்தியானார்கள்.

கஷ்டம் உள்ள இடந்தோறும் ஜயித்தாலும் தோற்றாலும் அவனவன்தானே வெளிவரவேண்டும். ஒருவன் கஷ்டத்திற் குச்சலிக்காமல் எதிர்நின்று போராடுவானானால், அவன் பலம்

நன்றாய்ப் பண்படும், புத்தி சாமர்த்தியமும் நன்றாய்ச்
சிக்ஷிக்கப்படும்; விரைந்து மலையேறப் பயில்வோனுக்கு
எளிதில் ஓட வல்லமையுண்டாவதுபோல, பின்பு முயற்சி
செய்ய அவன் மனதில் உற்சாகம் பிறக்கும். சித்திபெறச்
செல்லு மார்க்கம் மலையேற்றம்போலச் செங்குத்தாயிருந்தா
லும் இருக்கும். அதன் சிகரம்சேர மனங்கொண்டு ஏறு
வோன் தன் மனவலி முழுதும் செலுத்தி மூச்சுப்பிடித்து
ஏறவேண்டும். நேருந் தடைகள் கைகலந்து மல்லாடியே
நிவிர்த்தி செய்யத்தக்கவையாகுமென்றும், அச்சமறப்பிடித்
தால், செந்தோட்டி பட்டுப்போலக் கைக்கு மிருதுவா யிருக்
குமென்றும், எடுத்த காரியத்தை முடிக்காது விடுவதில்லை
யென்னும் மனவுறுதியே கருதித் தொடங்கிய கருமத்தை
முடிக்க எள்ளளவும் தவறாத பெருந்துணையாகுமென்றும்
இவைகளை எவனும் அனுபவத்தால் விரைவில் அறிந்துகொள்
வான். இவ்வாறே, கஷ்டத்தை வெல்லும் சித்த நிர்ணயத்
திற்கு எதிரில் எவ்வகைக் கஷ்டங்களும் வலிய நிலைகுலைந்து
விழுந்துபோம்.

கருமம் செய்ய முயல்வோமானால் மெத்தவும் சாதிக்
கலாம். எத்தனிக்கிறவரையில் நான் சாதிக்கக் கூடியது
இன்னதென்பது எவர்க்கும் தெரியாது. ஒரு தொழிலைச்
செய்யும்படி நிர்ப்பந்தமாய் நேருகிறவரையில் ஒருவரும்
ஒன்றும் செய்ய முயல்வதில்லை. மனவுறுதி யழிந்த வாலி
பன் ஒருவன் "இன்னின்ன காரியங்களைச் செய்ய மாட்டுவே
னானால்" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவான். விருப்
பம் மாத்திரம் இருந்தாலும் ஒன்றும் முடியாது. விருப்
பம் முதிர்ந்து மனவுறுதியாகி அது எத்தனமாய்க் கனியவே
ண்டும்; மனவலியோடு எத்தனிக்கும் ஒரு எத்தனம் ஆயி
ரம் விருப்பத்திற்கு ஈடாகும். பெரும்பாலும் சாத்தியம்
எனும் கழனிக்கு வேலிவளர்ந்து, ஒன்றையும் செய்யவும் எத்
தனிக்கவும் விடாமல் தடுப்பவைகள் வீரிய மின்மையும் மன
த்தளர்வும் முணுமுணென்று சொல்லும் மூன்றுக்குச் சமா

ணமாகிய சந்தேகங்களுமேயாம். "வெல்லவேண்டுவது தொல்லை" யென்று லிண்ட்ஹாஸ்த் பிரபு (Lord Lyndhurst) மொழிந்திருக்கிறார். முன் பின் பாராமல் உடனே அதனோடு மல்லாடு; விடாமுயற்சியால் எதுவும் எளிதாகும், மேலு மேலும் எத்தனிக்கவலிமையும் வீரமும் உண்டாகும். இவ்வாறே, புத்தியையும் நெறியையும் பூர்த்தியாய்த் திருந்திக் களைதெளியப் பண்படுத்தினுல் அவை இவ்வகைச் சிக்கல் இல்லாதவர்களுக்குக் கிடைத்தற்கரிய சிறப்போடும் தீரத்தோடும் சுதந்தரத்தோடும் இயல வல்லவைகளாம்.

நாம் கற்றறிந்துகொள்ளும் ஒவ்வொன்றும் ஒவ்வொருகஷ்டத்தை வெல்லவலதாம்; முதலில் ஒன்றை வெல்வோமாகுல் அதனுலாப வெற்றிமற்றவைகளை வெல்லத்துணையாகும். வழங்காதொழிந்த பாஷை முதலியவைகளையும், கணிதநூலைச்சேர்ந்த ரேகை உடரிதலம் இவைகளின் சம்பந்த முதலியவைகளையும் கற்பது மேற்பார்வையில் அந்தனை உபயோகமானவைகளல்லவெனத் தோன்றினும் தோன்றுமாயினும், ஆழ்ந்து பார்க்குமளவில் அவை மிகவும் உபயோகமானவைகளெனத் தெளிவாகும், ஆயின் அவைகளுக்கு விசேஷமாய் அருமை உண்டாவது அத்தனையும் அவைகளால் அறியப்பெறும் அறிவி னிமித்த மல்ல, அவைகள் நமக்குச் செய்விக்கும் நல்ல பயிற்சியின் நிமித்தமேயாம். இக் கல்விகளைக் கசடறக் கற்று வல்லமை உண்டானுல், அது நமக்குள்ள முயலுந் திறமையை வெளிவருத்திக் கருக்குச் செலுத்தும் திராணியைப் பண்படுத்தும். முயற்சி இல்லாவிடில் அத்திராணி பயிற்சியின்றி வெளிவரா தடக்கமாயிருந்துவிடும். இவ்வாறே ஒன்று ஒன்றுக்கு வழிகாட்ட, அது மற்றொன்றுக்கு வழியாக, ஜீவன் உள்ளளவும் இந்தக் கிரமம் ஒழியாது நடந்தேறும்; பிராணனும் பயிற்சியும் முடியும் பொழுதே கஷ்டத்தோடு கைகலந்து போராடும் போராட்டமும் முடியும். ஆனல் அதைரியத்திற்கு இடங்கொடுத்து வந்தவன் எவனும் கஷ்டத்தை ஒருபொழுதும் வென்றதில்லை.

கணிதவித்தியையின் மூலாதாரங்களைக் கற்றுத் தெளிய முயன்றும் தெளிவு பிறக்கவில்லையென்று முறையிட்ட வித்தியார்த்தியைப் பார்த்து டி' அலெம்பர்ட் (D' Alembert) என்பவர், "அப்பா, விடாமுயற்சியாய்ப்படித்துக்கொண்டுவா, வரவர அதினிடத்தில் அபிலாஷையும் ஊக்கமும் உண்டாகும்" எனப் புத்தி புகட்டினார்.

பெருவிரல் ஊன்றி விரைந்தாடும் அபிநயமுள்ளவனும் அரியகானம் பாடும் இன்னாரனும் பலமுறை பிழைசெய்தும் பதைப்பற்றுப் பொறுத்துப் பலகாற் பயின்று கைதேர்ந்தவர்களே. உனக்குச் சாரீரம் எத்தனை சுலபமாயும் சுத்தமாயுமிருக்கிறதென்று தன்னைப் புகழ்ந்து பேசினவர்களைப் பார்த்துக் கரிஸ்ஸிமி (Carissimi) என்பவர், "அம்மம்மா! இவ்வளவு சுலபமாக வரப் பெற நான் எத்தனை கஷ்டப்பட்டிருப்பேனோ அது உங்களுக்குத் தெரியாதே" என மொழிந்தார். இந்தப் படம் எழுதி முடிக்க உமக்கு எத்தனைநாள் சென்றது என்று ஒரு சமயத்தில் ஸ்ரீ ஜாஷுவா ரேனல்ட்ஸ் (Sir Joshua Reynolds) என்பவரை எவரோ கேட்டதற்கு, அவர் "என் வாழ்நாள் முழுதும்" என்று மறுமொழி பகர்ந்தார். அமெரிக்காவில் பிரசங்கஞ் செய்பவராயிருந்த ஹென்றி க்ளே (Henry Clay) என்பவர் வாலிபர்களுக்குப் புத்தி மதி சொல்லும்பொழுது தாம் வித்தைப் பயிற்சியில் சித்திபெற்ற மர்மத்தைப் பின் வருமாறு விரித்துரைத்தார். அதாவது, "நான் காரியசித்தி பெற்றதற்குக் காரணம் முக்கியமாய் ஒன்று. இருபத்தேழு வயசு தொடங்கி வெகு வருஷகாலம் சரித்திர புஸ்தகம், சாஸ்திர புஸ்தகம் எதானாலும் சரி நித்தமும் வாசித்து, அதன் உள்ளுறை பொருளைக் குறித்துப் பேசிக்கொண்டு வந்தேன். முற் சிந்தனையின்றி இம் முயற்சி செய்தது சிலவேளை வயற்காட்டில், சிலவேளை வனத்தில், பெரும்பாலும் வெகு தூரத்திலுள்ள யாதாயினும் ஒரு களஞ்சியவீட்டிலாம். அங்கு என் பிரசங்கம் கேட்கும் சபையார் அங்குள்ள குதிரைகளும் குண்டைகளுமாம். வித்தை யபி

த்தினும் அரிய இவ்வித்தையை இளமையில் அப்பியசித்து வந்ததனாலேயே என்னை மேலு மேலும் முயற்சி செய்யத் தூண்டி எனது பின்னிலையமைதியைச் சாங்கோபாங்கமாய் உருப்படுத்துவதற்கு மூலாதாரமான முக்கிய ஏதுக்கள் எனக்கு உண்டாயின" என்பதாம்.

அயர்லாந்து நாவலனாகிய கரனுக்கு (Curran) இளமையில் அக்ஷரங்களைத் தெளிவாகப்பேசுந் திறமை சற்றாவது இல்லை. பள்ளிக்கூடத்தில் அவனுக்குத் "திக்குவாயன்" எனச் சிறப்புப்பெயர் வழங்கியது. அவன் தர்மசாஸ்திரம் கற்றுத் திக்குவாய் இருந்தச் செய்யாதனத்தனம் எல்லாஞ் செய்து மல்லாடும்பொழுது, பிரசங்கஞ்செய்யும் சபை ஒன்றில் சேர்ந்து ஒருநாள் கௌபர் (Cowper) என்பவனைப்போலப் பிரசங்கம் செய்ய எழுந்து ஒரு வார்த்தையும் வாய்திறந்து சொல்ல மாட்டாதவனாக நின்றான். அதுகண்டு அச்சங்கத்தில் ஒருவன் அவனை "ஊமை நாவலன்" என்று பரிகாசமாய்ச் சொன்னான். இவன் சொல் தேள் கொட்டினதுபோல் அவன் மனதை வருத்த அவன் வெகு ஆக்கிரகங்கொண்டு சாமர்த்தியமாய்ப் பிரசங்கித்து வடுச்சொன்னவன் வாயை அடக்கினான். இவ்வண்ணம் இருந்தாற்போலத் தனக்குள் சாமர்த்தியம் பிறந்தது கண்டு மனம் தேறி அவன் மிகுந்த மனவலிமையுடன் கல்வி பயின்றுவரத் தலைப்பட்டான். அவன் பிரதிதினமும் சில நாழிகைநேரம் இலக்கிய புஸ்தகங்களில் சிறந்த வாக்கியங்களைத் தெரிந்து குரல் எழுப்பிச் சொற்களை நிறுத்தித் தீர்க்கமான உச்சாரணத்தோடு வாசித்து வந்தான்; வரவர அவன் திக்குவாய்திருந்தியது. பேசும்பொழுது நிலைக் கண்ணாடிக்கு எதிர்முகமாய் நின்று முகக்குறிப்பைப்பார்த்து, சற்று அந்தம் கெட்டு அவலட்சணமாயிருந்த தன் உருவத்தின் நலமின்மையை மறைவிக்கத்தக்க இங்கிதத்தை அனுசரித்துப் பயின்று வருவான். அன்றியும், அவன் சில வியாச்சியங்களைக் கற்பித்து மத்தியஸ்தருக்குப் பிரசங்கிப்பவன்போல் அத்தனை கருத்தும் காதலுமாய் நியாயம் எடுத்துக் காட்டி

வாதிப்பான். நியாயவாதி பிரபலனாவதற்கு முக்கியமாய் இருக்கவேண்டிய யோக்கியதை ஒன்று அரைக்காசுக்கும் வழியில்லாதிருப்பதே என எல்டன் பிரபு (Lord Eldon) குறிப்பித்த யோக்கியதை, நியாயவாதம்செய்யத் தொடங்கியபொழுது, கரனுக்குப் பூர்த்தியாய் அமைந்திருந்தது. முன் விசாரம்செய்யும் சபையில் தலைப்பட்டிருந்த சபைக்கோழையால் அப்போதும் பீடிக்கப்பட்டிருந்தும் அவன், சபையில் வருந்தி உழைத்து நியாயவாதம் செய்துவருகையில், ஒரு சமயத்தில் ராபின்ஸன் (Robinson) என்னும் நீதியதிபதி கரனுக்குக் கடுப்பு உண்டாக்கத்தக்க சொல் ஒன்று சொல்ல, கரன் சற்றுப் பதைப்புடன் கடுவிடைபகர்ந்தான். ஒரு வழக்கு விசாரணை நடந்தேறும்பொழுது நீதியதிபர் மொழிந்த குறிப்பு ஒன்றைச்சுட்டிக் கரன் "என் புஸ்தகங்களுள் எதிலும் தாங்கள் சொல்லியபடி சட்டம் ஒன்று இருக்கக் காணவில்லையே" என்றுசொல்ல, அதுகேட்டு நியாயாதிபதி "காணாதிருந்தாலும் இருக்கும்; ஆயினும் உன்னிடத்தில் புத்தகங்களோ அதிகமாயில்லையென்று எண்ணுகிறேன்" என்று ஏளனமாய்ச் சொன்னார். நீதியதிபரோ சாமானியரல்ல, அரசாட்சிவிஷயத்தில் மிகுந்த அபிமான முள்ளவரென நாடறியப் பெற்றவர்; பெயர் குறிக்காமல் அபூர்வமான வல்லடியும் குரங்குப்பிடியுமே குறிப்பாய் விளங்குகின்ற சிலபுத்தகங்கள் இயற்றியவர். பொருள் வருவழியின்றித் தான் துன்பப்படுவதைச்சுட்டி நீதியதிபர் இவ்வண்ணம் மொழிந்ததை அறிந்து, கரன் தூங்கினசர்ப்பம் விழித்தாற்போல் முறைத்து, "தர்மதுரையே, நான் வறிஞன் என்பது மெய்தான்; ஆனதுபற்றி என் புஸ்தகங்களும் மிதமாகவே யிருக்கின்றன ; என் புஸ்தகங்கள் தொகைகுறியவைகளல்லவாயினும் பொறுக்கானவைகள். அப்புஸ்தகங்களெல்லாவற்றையும் நான் மனவிகாரமின்றி முறைமையாக வாசித்திருக்கிறேனென்று எண்ணுகிறேன். நான் இவ்வுயர் தொழிலுக்கு யோக்கியதையுள்ளவனா யிருப்பது உதவாத கிரந்தங்களைத் திரளாய் எழுதியல்ல, ஆணித்தரமான சில கிரந்தங்

களைத் திட்ப நுட்பமாய் வாசித்ததனுலேயே. வறுமையை ப்பற்றி எனக்கு வெட்கம் உண்டாகவில்லை; பணியாதவர் களைப் பணிந்து பரிதானம் வாங்கித் திரவிய சம்பாத்தியம் செய்திருப்பேனுனல், அந்த திரவியத்தைக் குறித்துத்தான் எனக்கு வெட்கம் உண்டாகவேண்டும். நான் குலத்தில் தரம் உயராவிடினும் சத்தியத்தில் உயர்ந்தவனுயிருப்பேன். எப்பொழுதேனும் சத்தியம் தவறி நடப்பேனுனல், அநியாய மாய்ப் பெரும் மேம்பாடு என்னை நால்வருக்கும் விளங்கத் தோற்றுவித்து இவன் ஊர் அறிந்த துச்சனென்று யாவரும் என்னை இகழும்படி செய்யுமெனப் பல திருஷ்டாந்தங்க ளால் அறிவேன்'' எனப் பிரதியுத்தரம் சொன்னுன்.

தம்மைத் தாம் பண்படுத்தும் வேலையில் அதிக ஆவலை யுள்ளவர்களுக்கு மிக்கதரித்திரமும் ஓர் இடையூருகவில்லை. பலபாஷைகளில் பயிற்சியுள்ள அலெக்ஸாந்தர் மரே பண்டி தர் (Professor Alexander Murray) கையெழுத்து எழுதப் பயின்ற காகிதம் ஆட்டுரோமச் சிக்குவாங்கி, இலேகினி மூனை கருகிய சம்பம்புற்ருள். ஏழை இடையனுகிய அவர் பிதாவ சம் இருந்தது ஒரே யொரு புஸ்தகந்தான்; அது நாலு துட்டு க்கு விற்கும் வினுவிடைச்சுருக்கம்; ஆயினும் எப்பொழுதும் கையாடினுல் அவ்வரியபுஸ்தகம் பழுதாய்ப் போகுமென்று அதை மிகவும் பந்திரமாக வைத்திருந்து ஞாயிற்றுக்கிழமை யில் பாடம் கேட்க வெளியே போகும்போது மாத்திரம் எடுப்பார்கள். மூர் என்னும் பண்டிதர் (Professor Moor) வாலிபராயிருந்தபொழுது ந்யூற்றன்செய்த கணிதபாட புஸ் தகம் ஒன்று வாங்க வழியின்றி, ஒரு பிரதி இரவலாக வாங்கி அதைமுற்றும் தமது கையால் எழுதி முடித்தார். அன்ருடம் ஜீவனத்திற்குப் பாடுபடும் ஏழை வித்தியார்த்தி கள் பலருக்குப் பாடம்படிக்க அவகாசமே கிடைத்ததில்லை. வயற்காடெல்லாம் உறைந்த பனி நிறைந்திருக்கும் மு[illegible] காலத்தில் பக்ஷிகள் இரைக்கு அவஸ்தைப்பட்டு அங்க[illegible] சிறுக அகப்படுவதைப் பொறுக்குவதுபோல் அவர்கள் தம[illegible]

வேலையில் ஒழிவுகண்டு அங்கும் இங்கும் அனுவனுவாய்க் கல்வி யறிவை மிகவும் அருமையாய்ப் பெற்றார்கள்; அதைரியப்பட்டு விட்டுவிடவில்லை; மல்லாடி வருந்த வருந்த அவர்களுக்கு நம்பிக்கையும் ஆசையும் பிறந்தன. கிரந்த கர்த்தாவென்றும் கிரந்தங்களைப் பிரசுரஞ் செய்தவரென்றும் பிரக்கியாதரான எடின்பர்க் நகரவாசியாகிய உவில்லியம் சேம்பர்ஸ் (William Chambers) அந்நகரில் வாலிபர் கூடிய சபையிலே பிரசங்கம்செய்யும் சமயத்தில், அவர்களுக்குத் திடஞ்சொல்லும் வண்ணம் ஆதியில் தமது எளிய நிலையைப் பின்வருமாறு சுருக்கி விளக்கினார். அதாவது:—"உங்களுக்கு எதிரில் இங்கே நிற்கும் நான் என் முயற்சித் திறத்தால் கல்வி பயின்று தெளிந்தவன். நான் பள்ளியிற் கற்றதெல்லாம் கூடி ஸ்கொத்லாந்தின் நாட்டுப் பாடசாலைகளிற் கற்பிக்கப்படும் சாமானிய பாடங்களே. ஏழைச் சிறுவனாக எடின்பர்க் நகரத்திற்கு வந்தபின்புதான் பகலிலேயே ஒழிந்து இரவில் ஆறியிருக்கும்பொழுது எல்லாம் வல்ல கடவுள் எனக்குத் தந்த அறிவைப் பண்படுத்தும்படியாயிற்று. புஸ்தகம் விற்கும் ஒருவரிடத்தில் தொழில் பயில ஏற்பட்ட நான் காலையில் ஏழு எட்டுமணி தொடங்கி இராத்திரி ஒன்பது பத்து மணிவரையும் அவர் வேலையைச்செய்துவிட்டு, அதன்பின்புதான் நித்திரைசெய்யாமல் சற்றுநேரம் விழித்திருந்து கல்வி பயின்றேன். அதுதவிர வேறு சமயம் அகப்படவில்லை. கற்பித கதைகள் நான் வாசிக்கவில்லை. தேசதத்துவ சாஸ்திரத்திற்கும் வேறு உபயோகமான கல்வித் துறைகளுக்கும் என் சிந்தையைத் தத்தஞ்செய்தேன். பிரெஞ்சு பாஷையும் வருந்திப் பயின்றேன். அக்காலத்தை நினைத்தால் இப்போதும் என் மனம் களிகூருகின்றது. ஆயினும் திரும்பவும் அந்தப் பாடுபட நிமித்தம் இல்லையே யென்று எண்ணிச் சற்றுப் பரிதபிக்கின்றது; ஏனெனில், இப்பொழுது சிங்காரமும் சவுக்கியமும் நிறைந்துள்ள மாளிகைகளில் உட்கார்ந்திருக்கும் சமயத்தில் என் மனதிற்கு உண்டாகும் இன்பத்திலும், முன்பு கையில்

கால் ரூபாய்க்கும் வழியின்றி எடின்பர்க்கில் ஓர் மேன்மாடத்தில் படித்துவரும்பொழுது இருந்த இன்பழ் அதிகம்'' என்பதாம்.

உவில்யம் காப்பெத் (William Cobbett) என்பவர் தாம் அங்கிலேயபாஷை இலக்கணம் கற்ற வகையைக் குறித்துச் சொல்லிய வரலாறு தரித்திரத்தால் இடர்படும் வித்தியார்த்திகள் அனைவருக்கும் நல்லறிவு கொளுத்துவதாயும் இன்பந் தருவதாயு மிருக்கின்றது. அவர் வாய்மொழியாவது, ''முன்னே தினம் ஒன்றுக்குக் கால் ரூபாய் சம்பளத்திற்குச் சாமானிய ராணுவசேவகம் செய்தபொழுது இலக்கணம் வாசித்தேன். நான் உட்கார்ந்து படித்த ஆசனம் என் கட்டில் விளிம்பு அல்லது காவற்படுக்கை ஓரம்; புஸ்தக பீடம் எனது சாமான்மூட்டை; எழுதும்பீடம் மடியில்வைக்கும் ஒரு துண்டு பலகை. நான் தொடங்கிய கருமம் முடிக்க ஒருவருதவும் செல்லவில்லை. வர்த்தியாவது எண்ணெயாவது வாங்க என் வசம் பணம் இல்லை; மாரிகாலத்தில் குளிர்காய மூட்டியிருக்கும் நெருப்பன்றி வேறு இராவிளக்கு வெளிச்சம்அகப்படுவது அரிது. நெருப்பு வெளிச்சமும் என் முறைக்கு மாத்திரம் அகப்படும். இவ்வகைச் சங்கடங்கள் இருக்க, எனக்குப் புத்தி புகட்டவும் தேறுதல் சொல்லவும் தந்தை பந்து மித்திரர் எவருமின்றி இந்தக் கருமத்தைச் சாதித்தேனென்றால், எத்தனை ஏழையாயிருந்தாலும், வேலை ஒழிவில்லாமல் எவ்வளவு வருத்தினாலும், ஏற்ற அறைவீடு முதலிய வசதிகள் இல்லாதிருந்தாலும், கல்வியை அசட்டைபண்ணும் எந்த இளைஞனும் சொல்லித் தப்பிக்கொள்ள என்ன சாக்கு இருக்கக் கூடும்? எனக்கு அகப்படுவது அரைவயி றுண்டி. எழுதும் இறகாவது ஒரு தாள் காகிதமாவது வாங்குவதற்காக அவ்வுண்டியிற் சிறிதை விட்டுவிடவும் நேர்ந்தது; எனக்கு க்ஷணப்பொழுதும் அவகாசம் கிடைத்ததில்லை. சற்றும் சிந்தனையற்றவர்கள் அதமம் பத்துப்பெயர் அதிகார வசத்தினின்றும் நீங்கி ஸ்வாதீனரா யிருக்கும்வேளையில் காதடைக்கும்படி

உரக்கப்பேசி நகைத்துப் பாடிச் சிக்கல்போட்டு வாதாடிக் கொண்டு பக்கத்தில் கூச்சலிடுவார்கள். அந்தப் பீடையை எண்ணாமல் நான் என்பாட்டில் வாசிப்பதை வாசிக்கவும் எழுதுவதை எழுதவுமே பாத்தியப்பட்டு அதையே எனக்குக் கடமையாகக் கொண்டிருந்தேன். அடிக்கடி எனக்கு மை, இறகு, கடிதம் வாங்கச் சென்ற துட்டை அற்பமென்று இலேசாய் எண்ணவேண்டாம்! அந்தத் துட்டு அடா அப்பா, எனக்குப் பெருந்தொகையாயிருந்தது! என் உயரம் அப்பொழுதும் இந்த உயரமே; தேக சௌக்கியமும் தேகாப்பியாசமும் மாத்திரம் மிகுதி. வாரந்தோறும் எங்களுக்குத் தலைக்கு ஒரு அணா நாலு பை கிடைக்கும். ஒருசமயத்தில் நான் ஆவசியகமான பலசெலவும் செய்து ஒரு வெள்ளிக்கிழமை இரண்டுதுட்டு உபாயமாய் மிச்சம் பிடித்து வைத்திருந்து, மறுநாட் காலையில் அதற்கு ஏதாவது தின் பண்டம் வாங்கவேண்டுமென் றிருந்தேன்; ஆனால் இராத்திரி கடும் பசி யுபத்திரவம் தாங்க ஆற்றாதவனாகி உடுத்த ஆடையைக் களைந்தபொழுது அங்கி யுறையில் இட்ட இரண்டு துட்டைக் காணவில்லை! கந்தை துப்பட்டியாலும் கம்பளியாலும் தலையை நன்றாய் மூடிக்கொண்டு சிறு பிள்ளையைப்போலக் குரலெடுத் தழுதேன்! சொன்னதை மீளவும் சொல்லுகிறேன்! இவ்வகை ஆபத்துக்களுக்கு ஆளாகி அவஸ்தைப்பட்டும், நான் எடுத்தகருமத்தை இளைக்காமல் எவ்வகைத்தடையும் அறுத்து முடிக்க வல்லவனா யிருந்தேனாயின், செய் கருமத்தைச் செய்யாது விடுவதற்கு நியாயம் காட்டித் தப்பவல்ல வாலிபன் இவ்வுலகில் எங்கேயாவது உண்டா, இருக்கக்கூடுமோ?

பிராஞ்சுதேசத்து அரசாட்சியாரால் அத்தேசத்து எல்லைக்கு அப்பால் துரத்தப்பட்டு லண்டனில் வந்திருந்த ஒருவன் கல்வியில் இவ்விதமாகவே வியக்கத்தகும் கடைப்பிடியும் கருத்து முன்னவனாயிருந்தானென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் ஆதியிற் செய்ததொழில் கொல்லத்துவேலை. சிறிது காலம் அவனுக்கு அவ்வேலை அகப்பட்டது; பின்பு வேலை

தளரவும் அவன் நிலையிழந்தான். பிழைக்க வகையின்றித் தரித்திரம் வந்தடுத்தது. இருதலைக்கொள்ளிமத்தியில் எறும்புபோல் இருந்து அவஸ்தைப்படும் சமயத்தில் அவன், தன்னைப்போலச் சுதேசத்தினின்றும் அகற்றப்பட்டு, பிரஞ்சு பாஷை கற்பித்துப் பிழைத்துவரும் கூட்டாளி ஒருவனைப் போய்க்கண்டு, முட்டின்றிப்பிழைக்க என்ன செய்யவேண்டுமென்று யோசனைகேட்டான். அதற்கு அந்த உபாத்தியாயன் "பண்டிதன் ஆகவேண்டும்" என்று உத்தரம்சொல்ல, அது கேட்டு இவன் "பண்டிதன் ஆகவா! கொச்சை வார்த்தை பேசும் சாமானிய வேலைக்காரனாகிய நானா பண்டிதன் ஆக! நீர் என்னைப் பரிகாசமா பண்ணுகிறீர்?" என்றான். இதற்கு அவன் "பரிகாசமல்ல, வாஸ்தவந்தான். சொன்னபுத்தியை மீளவும் சொல்லுகிறேன்: பண்டிதன் ஆகு; என் சொற் கேட்டபடி; பிறருக்குக் கல்விகற்பிக்கும் முறையை நான் உனக்குக் கற்பிப்பேன்" என்று சொல்ல, கொல்லன் "கூடாது, கூடாது, அது அசாத்தியம்; நான் கல்விகற்கும் பருவம் கடந்துபோயிற்று; நான்கற்றதும் அற்பம், நான் பண்டிதனாக மாட்டேன்" எனப் பிரதியுத்தரம் மொழிந்து போய்விட்டான். போய்த் திரும்பவும் கொல்லத்து வேலையில் அமரப்பார்த்தான். லண்டன் நகரத்தைவிட்டு நாட்டகத்திற்கு நானூறு ஐந்நூறு மயில்தூரம் பிரயாணம்போயும், அவன் நாடிப்போன கருமம் கைகூடவில்லை; எங்கும் அவனை வேலைக்கு வைத்துக்கொள்வாரில்லை. ஆனதுபற்றி, லண்டனுக்குத் திரும்பி, முன்பு நற்புத்திபுகட்டினவரிடத்திற்குப் போய், "எங்கெங்கும் வேலை விசாரித்துப்பார்த்தேன், எங்கும் படியவில்லை; இனிப் பண்டிதனாகும்படி எத்தனிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லி, அந்தக்ஷணமே அவனிடத்திற் கல்விபயில ஆரம்பித்தான். மிக்க அவதானமும், குசலையும், திடமான அறிவுமுடையவனாதலால் அவன் இலக்கண மூலாதாரங்களையும், சொற்றொடர் வாக்கியத்தொடர் விதிகளையும் முன்சற்றும் பயின்றிராத பிரெஞ்சுபாஷையின் கா

யச்சொற்களை வழுவற உச்சரிக்கும் முறையையும் விரைவில் கற்றுத்தெளிந்தான். பிறருக்குக் கற்பிக்கத்தக்க கல்வித்திறம் அவனுக்கு அமைந்ததென்று அவன் உபாத்தியாயரும் இஷ்டரும் எண்ணமிட் டிருக்கும்பொழுது, காலியாயிருப்பதாக விளம்பரம்செய்த உத்தியோகம் ஒன்றை அவன்கேட்டுப் பெற்றுக்கொண்டான். ஆதியில் கொல்லத்துவேலை செய்தவன் அறுதியில் இவ்வண்ணம் பண்டிதனானான்! அவனுக்கு உபாத்தியாய உத்தியோகம் படிந்த சாஸ்திர பாடசாலை முன்பு அவன் கற்றச்சுவேலை செய்த லண்டன் நகரத்தின் உபகிராமம் ஒன்றில் இருந்தது; நித்தமும் காலையில் முதல்முதல் அவனுக்கு உடை உடுக்கும் அறையின் பலகணிவழியாகத் தோன்றியவைகள் முன்பு அவன்கையாற் சமைந்த சில புகைக்கூடுகள்! அவன் உபாத்தியாய உத்தியோகம்பெற்ற பாடசாலையோ உயர்ந்த பாடசாலை. முன்பு கொல்லத்துவேலை செய்தவன் இவனென்று அங்கெவராயினும் அறிவாராயின் அப்பாடசாலைக்கு அபகீர்த்தி உண்டாகுமென்று சிறிதுகாலம் அவன் உள்ளத்தில் அச்சம்பிறந்தது. ஆனால் அவனுக்கு இவ்வகை அச்சம் உண்டாக நிமித்தம் இல்லை. அவன் போதனாசக்தி முதிர்ந்த உபாத்தியாயனென்று திருஷ்டாந்த பூர்வமாகத் தெரியவந்தது. அவன் மாணாக்கர்கள் பிரெஞ்சு பாஷையில் உண்டான விற்பத்தியைக்குறித்துப் பகிரங்கத்தில் ஒரு முறையல்ல, பலமுறை புகழ்ச்சி பெற்றார்கள். இதன் இடையில், இதர பண்டிதர்களும் வித்தியார்த்திகளுமாகிய அவனை அறிந்தோர் எல்லோரும் அவனைச் சம்மானித்து அவனுக்கு அநுகூலர்களானார்கள்; முன்பு அவனுக்குநேர்ந்த போராட்டத்தையும், அவன் பட்ட கஷ்டத்தையும், மற்றுமுள்ள அவன் வரலாறனைத்தையும் அவர்கள் கேட்டறிந்தபின் அவன்மீது அவர்களுக்குப் பின்னும் அதிக வியப்பு உண்டாயிற்று.

தம்மைத்தாம் பண்படுத்திய ஸ்ரீ ஸாம்யுயெல் ராமிலி (Sir Samuel Romilly) என்பவர் சோர்விலா முயற்சியில் இவனுக்கு இளைத்தவரல்ல. அகதியாய் அடைக்கலம்புகுந்த பிராஞ்சு

தேசத்தான் ஒருவன்சந்ததியில் தோன்றிய அவர்பிதா பணித்தட்டான். ஆகவே, இளமையில் அவருக்குக் கல்விப்பயிற்சி இல்லை ஆயினும், பின்பு சலிப்பறமுயன்று நினைந்த காரியத்தில் சித்தமும் பிரயத்தனம் செய்துவந்ததனால் அவர் குறையனைத்தையும் எளிதில் வென்றார். தம்மைக்குறித்து அவர் எழுதியசரித்திரத்தில் சொல்லியதாவது:—“எனக்குப் பதினைந்து வயதாகிப் பதினாறு ஆகுமுன் உண்மையாய் லத்தீன் பாஷை கற்கத்தீர்மானித்தேன். அப்பொழுது எனக்கு அந்தப்பாஷையில் சில சாதாரண இலக்கண விதிகளன்றி மிஞ்ச ஒன்றும் தெரியாது. கருத்தாய்க் கற்கத்தொடங்கி நாலு வருஷமாகுமுன், லத்தீன் பாஷை கலப்பறவழங்கிய காலத்தில் பிரசுரமான வசன கிரந்தங்களில் முக்காலே மூன்றுவீசமும் வாசித்துமுடித்தேன்; வாரோ, கலுமெல்லா, ஸெல்ஸஸ் என்னும் சாஸ்திர புஸ்தகங்கள் மாத்திரம் நான் வாசிக்கவில்லை. லிவி, ஸாலஸ்த், தாஸிதஸ் இம்மூன்று கிரந்தங்களை முழுமையும் மூன்றுமுறை வாசித்து முடித்தேன். ஸிஸரோவின் பிரசங்கங்களில் பிரபலமானவைகளை வாசித்து, ஹோமர் காவியத்தில் வெகு பாகம் மொழிபெயர்த்தேன். டிரென்ஸ், வர்ஜில், ஹாரேஸ், ஆவிட், ஜுவினல் இவைகளைத் திருப்பித்திருப்பி வாசித்தேன்.” என்பதாம். மேலும், அவர் பூகோள சாஸ்திரம், சராசரநூல், பதார்த்த இலக்கணம் இவைகளிலும் பயின்று, சாதாரணமாய் ஸகல விஷயங்களிலும் விசேஷமாகப் பயிற்சிபெற்றிருந்தார் பதினாறு வயதில் அவர் உயர்ந்த தர்ம சபையில் ஒரு நியாயவாதியினிடத்தில் தொழில்பழக அமர்ந்து, தர்மசாஸ்திரம் வருந்திக்கற்று, நியாயவாதம் செய்ய இடம்பெற்றார். இத்துறையில் முயற்சிசெய்து கருமம் கடைப்பிடித்துத் தவறாமற் சித்திபெற்றார். 1806-ம் வருஷம் பாக்ஸ் மந்திரியாயிருந்த காலத்தில் அவர் ஸொலிஸிற்றர் ஜெனரல் எனும் பிரதான நியாயவாதி ஆகி, இளைப்பற உழைத்து அத்துறையில் மிகவும் பிரக்கியாதரானார். ஆகியும், தமக்குள்ள குறைகளை நினைந்து அவர்மனம் எப்பொழுதும்

துயரப்பட்டு வருந்தியது. அக்குறைகளுக்கு அவர் ஒரு பொழுதும் பரிகாரஞ்செய்யா தொழிந்ததில்லை. அவர் எழுதிய சுயசரித்திரமானது அறிவு உணர்த்தும் சங்கதிகளாலாகிய சிறந்தபாடம் போன்றது. அது ஒன்று நற்கருத்து மிகுந்துள்ள புஸ்தகங்கள் அனேகத்திற்குச் சமானம், அது எவரும் அவதானமாய் வாசித்துப்பார்க்க மிகவும் ஏற்றதாகும்.

விடாமுயற்சிக்குத் தாம் அறிந்த திருஷ்டாந்தம் அனைத்திலும் மிக வியக்கத்தகும் திருஷ்டாந்தமென்று ஸ்ரீ உவால்த்தர்ஸ்காட் தமது வாலிபநேசனாகிய ஜான் லேடெனுடைய (John Leyden) சரித்திரத்தை வழக்கமாய் எடுத்துச்சொல்வார். ஜான் லேடென் ராக்ஸ்பர்க்ஷீயர் என்னும் மாகாணத்தில் காடு செடி அடர்ந்து பண்படாத பள்ளத்தாக்கு ஒன்றிலிருந்த ஒரு ஆட்டிடையன் மகன்; அவர் முக்காலே மூன்றுவீசம் தன் முயற்சியால் கல்விபயின்று தெளிந்தவர். ஸ்கொத்திலாந்திலுள்ள இடையர் குமாரர் பலரைப்போலும்; குன்றின் பக்கத்தில் ஆடு மேய்க்கப்போய்ப் படுத்திருக்கையில், அச்சுப்புஸ்தகம் ஒன்றைப் பார்த்தெழுதி எழுதிக் கையெழுத்துப்பயின்ற ஹாக் என்பவரைப்போலும்; லாம்மர் சதப்புநிலத்தில் ஆடு மேய்க்கும் தொழிலைவிட்டு, கருத்து முயற்சி இவைகளின் திறத்தால் கற்றுத்தெளிந்து உயர்ந்த பண்டிதனாகி இப்பொழுது அவ்வுத்தியோகத்தை யோக்கியதையோடு நிர்வகித்துவரும் கேயரன்ஸைப்போலும்; மரே, பர்கஸன் முதலிய பின்னும் பலரைப்போலும் லேடெனுக்கு இளமையில் கல்வியறிவின்மேல் அதிக ஆவல் மூண்டிருந்தது. எளிய இளைஞனாயிருக்கையில் அவர்வாசிக்கப்பயில நித்தமும் கெர்க்தன் கிராமத்துச் சிறிய பாடசாலைக்குப் பாதரக்ஷையின்றிச் சதுப்புநிலம் தாண்டிப்போகவர ஏழு எட்டு மைல் தூரம் நடப்பார். அவர் பள்ளியிற் கற்றதெல்லாம் இம்மாத்திரந்தான். மிச்சமெல்லாம் அவர் சுயமாய் சம்பாதித்துக்கொண்டது. அவர் ஏழைமையால் வருந்தும்பொழுது அதற்கு எள்ளளவும் அஞ்சாமல் வித்தியாசாலையில் கலைபயில எடின்பர்க் நகரத்திற்

குப்போனார். அவர் அங்கொரு சிறு புஸ்தகக்கடைக்கு அடி
க்கடி போய்வருவதாக முதலில் தெரியவந்தது. அக்கடைக்
காரன் பின்னாளில் நூல்களை அச்சிடுவிப்பவனென்று உலகறி
யப்பெற்ற ஆர்ச்சிபால்ட் கன்ஸ்டேபில் (Archibald Cons-
table) என்பவனும். லேடென் கேடுகெட்ட விடுதியில் சிறு
கப் புசிக்கத் தனக்கு வைத்திருக்கும் ரொட்டியையும் தண்
ணீரையும் மறந்து வெட்டவெளியில் ஏணிப்படியில் உட்கா
ர்ந்து பெரும்புஸ்தகம் வைத்திருந்து வெகு நாழிகைநேரம்
வாசித்துக்கொண்டிருப்பார். அவருக்கு இருந்த ஆசை எல்
லாம் கூடிப்படிக்கப் புஸ்தகமும், கேட்கப்பிரசங்கமும், எளி
தில் அகப்படவேண்டுமென்பதே. இவ்வண்ணம் அவர் கல்
விக்கோட்டை வாசலில் பாடுபட்டுழைத்துப் போராடிவர,
எதற்கும் மடங்காத அவர் சடைப்பிடி எதிரிடும் இடையூறு
அனைத்தையும் வாரியுருட்டித் தள்ளிக்கொண்டு போயிற்று.
பத்தொன்பது வயது ஆகுமுன் அவர் கிரீக்கும் லத்தீனும்
ஆழ்ந்து அறிந்திருந்ததைப்பற்றியும், பொதுக் கல்விப்பொ
ருள் பூர்த்தியாய்ச் சம்பாதித் திருந்ததைப்பற்றியும், எடி
ன்பர்க் பண்டிதர் எல்லோருக்கும் அவரைக்குறித்து வெகு
ஆச்சரியம் பிறந்தது. அவர் அபிப்பிராயம் இந்தியாவின்
மீது திரும்ப, அவர் வழியில் உத்தியோகம்பெற முயன்றார்.
ஆயினும் அந்த எத்தனம் கடைத்தேறவில்லை. ஆனால், ரண
வைத்திய சகாயர் உத்தியோகம் கேட்டால் அமையுமென்று
அவருக்குச்செய்தி எட்டிற்று. அவரோ ரணவைத்தியரல்ல,
ரண வைத்தியத்தைக்குறித்து ஒரு குழந்தை அறிந்ததற்கு
மிஞ்ச அவருக்கு ஒன்றும் தெரியாது. தெரியாதிருந்தும்
கற்க நினைத்தால் கற்கலாம். அந்த உத்தியோகம் பெற்றுக்
கொள்ளவேண்டில் ஆறு மாசத்திற்குள் பரீட்சைகொடுத்துக்
கடைத்தேற வேண்டுமென்று அவர் செய்திகேட்டார். சாதா
ரணமாய் மூன்று வருஷம் கற்கும் வைத்திய வித்தையை
அவர் சிறிதும் அச்சமற்று ஆறு மாசத்திற் கற்க ஆரம்பித்
தார். அவ்வாறுமாசமுடிவில், அவர் பரீக்ஷை கொடுத்துத்

தேறிக் கௌரவமாய்ப் பட்டம்பெற்றார். ஸ்காட்டும் வேறு சில இஷ்டரும் சேர்ந்து அவருக்குப் பிரயாணச்செலவு கொடுத்துதவினார்கள். அவர் தாம் இயற்றிய "இளமைக்காட்சி" எனும் சிறந்த செய்யுளை அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தபின் கப்பல் ஏறி இந்தியாவிற்குப் பிரயாணப்பட்டார். இந்தியாவில் இருக்கையில் அவர் கீழ்த்தேச பாஷைகளில் பாண்டித்தியமுள்ள வித்தியார்த்திகளில் பிரபலராவாரெனப் பலரும் எண்ணியிருந்தும், காற்றிலும், மழையிலும், கடுவெயிலிலும் திரிந்து சுரங்கண்டு வருந்தி வாலிபப்பருவத்திலேயே இறந்துபோனார்.

கேம்பிரிட்ஜ் வித்தியாசாலையில் ஹீப்ரு பாஷைக்குப் பிரதமபண்டிதராயிருந்து காலஞ்சென்ற டாக்டர் லீ என்பவருடைய சரித்திரமானது இக்காலத்தில் வித்தியாவிஷயத்தில் பொறுத்து விடாமுயற்சியும் மனவுறுதியுமாய் உழைத்துப் பாடுபட்டதற்கு ஒரு சிறந்த திருஷ்டாந்தமாகும். அவர் இளமையிற் கல்விபயின்றது ஷ்ருஸ்பெரிக்குச் சமீபத்தில் லக்னோர் தரும பாடசாலையில். அங்கவர் சற்றாவது கருத்தாய்க் கற்காததுபற்றி, உபாத்தியாயர் தம்மிடத்தில் கற்றுப்போன மாணாக்கரில் மந்தபுத்தியுள்ளோர் அனைவருள்ளும் அவர் மிகமந்தனென்று மொழிந்தார். பின்பு தச்சன் ஒருவனிடத்தில் தொழில் பழகவைக்க, அவர் வளர்ந்தாடவனாமளவும் தச்சுவேலை செய்துவந்தார். வேலை ஒழிந்திருக்கும் வேளையில் வீண்பொழுதுபோக்காமல் ஏதாவது வாசிக்க ஆரம்பித்தார். வாசித்த புஸ்தகங்கள் சிலவற்றில் லத்தீன் வாக்கியங்கள் மேற்கோளாய் எடுத்துக்காட்டி யிருக்கக்கண்டு, அவற்றின் பொருள் அறிய ஆசைப்பட்டு லத்தீன் இலக்கண புஸ்தகம் ஒன்று கிரயத்திற்கு வாங்கி அந்தப் பாஷையைக் கற்கத்தொடங்கினார். "ஒருவன் விரும்பும் மற்றெந்த விஷயத்தையும் தெளிய அறிந்துகொள்வதற்கு இருபத்துநான்கு எழுத்திற்கு மிஞ்ச ஏதாவது அறியவேண்டுமோ?" என ஆர்கைல் ட்யூக் என்னும் பட்டவர்த்தனருடைய தோட்டக்காரனை ஸ்தோன்

என்பவன் நெடுநாள் முந்தி மொழிந்தபடி, லீ சித்திரையினின்று பொழுதோடு எழுந்து இராத்திரி நாழிகை ஏழுமளவும் விழித்திருந்ததனால், தொழிற்பழக உடன்பட்ட காலம் கழியுமுன் லத்தீன் பாஷையில் தேர்ந்த பண்டிதரானார். ஒரு நாள் ஒரு தேவாலயத்தில் வேலை செய்யும்பொழுது க்ரீக் பாஷையில் புது ஏற்பாட்டுப் புஸ்தகத்தைக் கண்டு அந்தப் பாஷையும் கற்கும் ஆசை அந்த க்ஷணமே அவர்நெஞ்சில் உதித்தது. அதன்பொருட்டு அவர் தமது லத்தீன் புஸ்தகங்கள் சிலவற்றை விற்று க்ரீக் இலக்கணபுஸ்தகம் ஒன்றும் அகராதி ஒன்றும் வாங்கிக் களிப்புடன் வாசித்து விரைவில் அந்தப் பாஷையில் தெளிந்த நிபுணரானார்.

பிற்பாடு க்ரீக்புஸ்தகங்களை விற்று ஹீப்ரூ புஸ்தகங்கள் வாங்கி, எந்த உபாத்தியாயர் உதவியுமின்றி, புகழ்ச்செல்வமாவது பொருட்செல்வமாவது பெற நாடாமல் தம் புத்தி சாய்ந்த துறையில் இறங்கி ஹீப்ரூபாஷை கற்றார். அப்பால் கால்டீ, ஸிரியாக், ஸமாரிதன் பாஷைகள் கற்றுக்கொண்டு வந்தார். ஆனால் ஓயா தெப்பொழுதும் அவர் பயின்ற கல்விப்பயிற்சி அவர் தேகசௌக்கியத்தைத் தாக்கத் தொடங்கி, நாட்பட ராத்திரிகாலத்தில் துயிலொழிந்து விளக்கொளியில் நூல் வாசித்து வந்ததனால் அவருக்கு நேத்திரரோகம் உண்டாயிற்று. ஆனதுபற்றிச் சிறிதுகாலம் புஸ்தகங்களை வைத்துவிட்டு ஆறியிருந்து உடம்பு தேறியபின் அவர் மறுபடியும் அனுதினமும் வேலைசெய்துகொண்டுவந்தார். தச்சுவேலையில் அவர் மிகத் திறமையுள்ளவரென்று ஊரறியப் பெற்றதனால் வேலை மேலுமேலும் படிந்து கைப்பொருள் ஏறியது. ஆகவே அவர் விவாகயோக்கியதை யுள்ளவராகி இருபத்தெட்டு வயதில் மணம்புரிந்தார். அதன்பின் அவர் வித்தியாவிநோதமாகிய சுகபோகத்தை நிறுத்திவிட்டுக் குடும்ப சம்ரக்ஷணைக்குரியதொழிலிற் கண்ணாயிருக்கத் தீர்மானித்துப் புஸ்தகம் அனைத்தையும் விற்றார். அப்படியிருக்க அவருக்கு ஜீவனாதாரமாயிருந்த தொழிற் கருவிப்பெட்டி தீக்கிரையாய்ப்போய்

வறுமைப்பிணி அச்சங்காட்டி அவரை வருத்த ஆரம்பித்தது. அவ்வண்ணம் நேராதிருக்குமாயின் அவர் ஜீவனுள்ளளவும் தச்சுவேலைசெய்து பிழைக்கினும் பிழைப்பார். புதுக்கருவி வாங்க அவர்கையில் ஒன்றும் இல்லை, ஆனதுபற்றிப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துப் பிழைக்க நினைத்தார் — இத்தொழிற்கு மூலதனம் எவ்வளவும் வேண்டுவதில்லையே. ஆயினும் இதற்கும் ஒருதடை இருந்தது. அவர் பல பாஷைகளில் பண்டிதரா யிருந்தும் சாமானியமான விஷயங்களில் அவருக்குச் சிறிதும் பயிற்சியில்லா திருந்ததனால் முதல் முதல் அவைகளைக் கற்பிக்க அவரால் ஆகவில்லை. ஆகாதிருந்தும், மனவுறுதியுள்ளவ ராதலால் அவர் சிரத்தையாய் உழைக்க ஆரம்பித்து, எண்ணும் எழுத்தும் சிறுபிள்ளைகளுக்குக் கற்பிக்கத்தக்க வளவு கற்றுக்கொண்டார். அவர்ஒய்யாரமின்றி கஷ்டப்படுவதும் சிறந்த ஒழுக்கமு முள்ளவரென்று காணக்காணப் பலர் அவருக்கு இஷ்டராயினர். இந்த வித்தகனாகிய தச்சனுடைய கல்விப்பேற்றைக் குறித்து எங்கும் புகழ்ச்சி உண்டாயிற்று. அயலூர்க் குரு ஆகிய 'ஸ்காட் வேதாந்தியாபகர் ஷ்ரூஸ்பெரியில் ஒரு தர்ம பாடசாலை உபாத்தியாய உத்தியோகம் அவருக்குத் தேடிக்கொடுத்து கிழக்குத்தேச பாஷைகளில் தேர்ந்தநிபுணர் ஒருவர்க்கு அவரை அறிமுகம்பண்ணி வைத்தார். மேற்குறித்த இஷ்டர்கள் புஸ்தகம் வாங்கிக்கொடுக்க, லீ முறையே அரபி, பாரசீகம், ஹிந்துஸ்தானி இந்தப் பாஷைகளைக் கற்றுத் தெளிந்தார். அவர் தமதுதேசத்துக் குடிப்படை வகுப்பில் சாமானிய சேவகம்செய்து வரும்பொழுதும் கல்வியை விட்டுவிடாமற் கற்றுக்கொண்டு வந்தார்; வரவர அவருக்குப் பாஷைகளில் மிகத்தெளிவு உண்டாயிற்று. கடைசியில் முன் அவர்க்கு உதவிசெய்தவரான ஸ்காட் என்பவர் கேம்ப்ரீட்ஜ் சர்வ கலாசாலையைச்சேர்ந்த க்வீன்ஸ் காலீஜ் எனும் வித்தியாசாலையில் அவரைச் சேரும்படி செய்தார். அங்கவர் சிலநாள் கற்று கணிதத்தில் வல்லவரென்று கூறிக்கொள்ளப்பட்டார். பின்ப

அரபி, ஹீப்ருபாஷா பண்டிதர் உத்தியோகம் காலியாக, அந்தக் கௌரவமான பதவிக்கு யோக்கியரென்று அவரையே தெரிந்தேற்படுத்தினார்கள். அவர் அந்த உத்தியோகத்தை வெகு சாமர்த்தியமாய் நிர்வகித்ததுமன்றி, கிழக்குத் தேசத்தார்க்கு அவரவருடைய பாஷையில் சுவிசேஷ பிரசங்கம் செய்யப்போகும் கிறிஸ்தவ குருக்களுக்கு அங்கே வழங்கும் பாஷைகளை அன்றன்று அவகாசம் கண்டு வெகுநேரம் தானே வேண்டுமென்று போதித்தார். மேலும் அவர் கிறிஸ்துவேத புஸ்தகத்தை ஆசியாவில் வழங்கும் சிலபாஷைகளில் மொழிபெயர்த்தார். பின்பு ந்யூஜீலாந்து பாஷையைத் திட்பநுட்பமாய்க் கற்றுக்கொண்டு, அப்பொழுது இங்கிலாந்தில் இருந்த ந்யூஜீலாந்து குறுநிலமன்னர் இருவருக்காக இலக்கண புஸ்தகம் ஒன்றும் நிகண்டு ஒன்றும் இயற்றினார். அவ்விரண்டு புஸ்தகங்களும் இப்பொழுது ந்யூஜீலாந்து பாடசாலைகளில் அனுதினமும் வழங்கி வருகின்றன. ஸாம்யுயெல் லீ பண்டிதரின் வியக்கத்தகுமான சரித்திர சங்கிரகம் இத்தன்மையதாம். இலக்கிய இலக்கணங்களிலும் சாஸ்திரங்களிலும் குறித்துக்கொள்ளத்தக்க பண்டிதர் பலருடைய சரித்திரங்களில் தன்னைத்தான் பண்படுத்துவதில் கடைப்பிடியைக் குறிக்கின்ற நீதிபோதகமான பல திருஷ்டாந்தங்களுள் இதுவும் ஒன்றாம்.

"கல்விகற்க ஒருபொழுதும் சமயம் தப்பிப்போவதில்லை" எனும் சாதாரண மொழி உண்மையென்பதை ஒப்புவிப்பதற்குத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டத்தக்க மஹா பிரதாபர்கள் பின்னும் பலர் உண்டு. பருவ முதிர்ந்தவர்களும் ஒருவேலையைத்தொடங்க மனவுறுதி கொள்வார்களானால் மிகவும் சாதிக்கமாட்டுவார்கள். ஸ்ரீ ஹென்றி ஸ்பெல்மன் (Sir Henry Spelman) ஐம்பதறுபது வயதாமளவும் சாஸ்திரம் கற்கத் தொடங்கவில்லை. ப்ராங்க்லின் (Franklin) பதார்த்த சாஸ்திரப் பயிற்சியில் நன்றாய்ப் பிரவேசிக்கும்பொழுது அவருக்குப் பருவம் ஐம்பதாகி விட்டது. ட்ரைடனும் (Dryden)

ஸ்காட்டும் (Scott) நாற்பது வயதிற்குமுன் கிரந்தகர்த்தா வென்று பெயரெடுக்கவில்லை. பொகாக்ஷோ (Boccaccio) என்பவர் கல்வியைத் தொடங்கியது முப்பத்தைந்து வயதில். அல்பீரி (Alfieri) என்பவர் கிரீக்பாஷை பயிலத் தொடங்கிய பொழுது அவர்க்கு வயது நாற்பத்தாறு. ஆர்னல்ட் பண்டிதர் (Dr. Arnold) நீபர் எனும் கிரந்தத்தை மூலபாஷையில் வாசிக்கும்பொருட்டுப் பருவஞ்சாய்ந்தபின் ஜர்மானியபாஷை பயின்றார். இவ்வாறே ஜேம்ஸ் உவாட்டும் (James Watt) நாற்பது வயதில் க்ளாஸ்கோ நகரத்தில் தொழிற்கருவி செய்துவரும் பொழுது ப்ரான்சுபாஷை, ஜர்மானியபாஷை, இத்தாலிய பாஷை இவைகளில் உள்ள அருமையான யந்திரதத்துவ வித்தியா கிரந்தங்களை வாசிக்கும்பொருட்டு அம்மூன்று பாஷைகளையும் கற்றார். ஹீப்ருபாஷை வாசிக்கத் தொடங்கு முன்னே தோமாஸ் ஸ்காட்டுக்கு (Thomas Scott) வயது ஐம்பத்தாறாகி விட்டது. மில்த்தன் டாந்தி என்னும் இரண்டு கவி வல்லோரையும் மெக்காலே இணையிட்டெழுதிய ஒப்பனையின் யுக்தாயுக்தத்தைப் பகுத்தறிய வல்லவராம்படி ராபர்ட் ஹால் (Rabert Hall) முதுமைப் பருவத்தில் வியாதி யுபத்திரவத்தில் அழுந்தும்பொழுது ஒருநாள் தரையில்படுத்த படிக்கையில் இத்தாலியபாஷை படித்துக்கொண் டிருக்கக்காணப்பட்டார். ஹாண்டெல் (Handel) இயற்றிய பிரபலகிரந்தம் எதுவும் பிரசுரமாகு முன்னமே அவருக்கு வயசு நாற்பத்தெட்டாயிற்று. முதுமையென்று எவரும் ஒப்புக்கொள்ளத் தக்க வயசில் நூதனமான துறைகளில் அடிகோலி யவர்களையும், நூதனமான கல்விகளைக் கற்றுத் தெளிந்தவர்களையும் பற்றி அநேகமாயிரம் திர்ஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டலாம். வீணரும் சோம்பருமன்றி மற்றெவரும் "கல்வி கற்க எனக்கு வயசு சென்றுபோயிற்று" என்று சொல்லார்.

லோகோபகாரமான பல பெருங்காரியங்கள் செய்து உலகத்தை நிர்வகிப்பவர்களெல்லாம் பெரும்பாலும் புத்திகூர்மை யுடையவர்களல்ல; நிலைநீங்கா உறுதியும் உள்ளக்கருத்

தும் சோர்பறு முயற்சியு முள்ளவர்களே என்று முன் மொழிந்ததை நாமிங்கு மீளவும் சொல்லுகிறோம். நிபுணர்களுடைய பிரௌட புத்தி யோக்கியவயது வருவதற்குமுன்னமே பக்குவப்படுவதைப் பற்றி எவரும் மறுப்பரிய திர்ஷ்டாந்தம் அனேகம் உண்டெனினும், இளமையில்விளங்கும் புத்தி சாமர்த்தியமானது ஒருவன் பிற்காலத்தில் அடையப்போகிற ஏற்றத்தின் உச்சம் இவ்வளவென்பதை ஒருபோதும் குறிப்பிக்கமாட்டாது. யோக்கியவயது வருவதற்குமுன்னமே புத்தி பக்குவப்படுவதானது, புத்தியின் திறத்தை விளக்குவது போய்ச் சிலவேளை ரோகமுண்டாவதற்கு ஒரு அடையாளமாய் முடிகின்றது. விசேஷமாக வியக்கத்தக்க புத்திசக்தி யுள்ளவர்களா யிருந்த பிள்ளைகள் எல்லாருக்கும் பின்னிலை என்னவாகின்றது? தலை மாணுக்கரும் வெகுமதிபெற்ற வித்தியார்த்திகளும் எங்கே? அவர்கள் நிலையை ஆதியோடந்தம் விசாரித்துப் பார்ப்போமானுல், பள்ளியில் அவர்களுக்கு இளைத்த மந்தபுத்தி யுள்ளவர்களா யிருந்தவர்கள் பின்னிட்டுப் பெரும்பாலும் அவர்களை மிஞ்சிப்போ யிருக்கிறார்களென்று காண்போம். கெட்டித்தனமுள்ள வித்தியார்த்திகளுக்கு வெகுமதி கிடைக்கின்றது. ஆயினும் தங்களுடைய சுறுசுறுப்பாலும் கைவளத்தாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வெகுமானங்கள் எப்பொழுதும் அவர்களுடைய விருத்திக்கு எதுவாவதில்லை. செய்யும் பிரயத்தினத்திற்கும் வருந்திப் போராடும் போராட்டத்திற்கும் சொன்னசொற்கேட்டு நடக்கும் அடக்கத்திற்குமே முக்கியமாய் வெகுமதி கொடுக்க வேண்டும். ஏனெனில் இயற்கையில் மிதமான அறிவுடையவனு யிருப்பினும் தன்னுல் ஆமளவிற்கு வருந்திக்கற்கும் வாலிபனையே முக்கியமாய் உற்சாகப் படுத்த வேண்டும்.

வாலிபத்தில் மந்தபுத்தியுள்ளவர்களாயிருந்தும், வயது வந்தபிறகு சமர்த்தர்களாகி விளங்கிய மாட்சிமை சிறந்த மட்டாள்களைப்பற்றி வெகு விநோதமான சரித்திரம் ஒன்று

எழுதினாலும் எழுதலாம். ஆயினும், இப்பொழுது இங்கே அதிகமாய் இடமில்லை யாகையால் சில திருஷ்டாந்தங்களை மாத்திரம் எடுத்துக் காட்டுவோம். சித்திரவேலையில் வல்லவனான பையீட்ரோ டை கார்த்தோனா (Pietro di Cortona) என்பவன் இளமையில் மிகவும் மடப்பயலாயிருந்து கழுதை புத்தி என வசைப்பெயர் பெற்றான். பின்னாளில் தன்முயற்சியால் உன்னத பதவி பெற்றவனாயினும் தொமேஸோகுவிடி (Tomaso Guidi) என்பவனுக்கு அதற்குமுன்பு பெரும்பாலும் "தடித்தாமன்" என வடுப்பெயர் வழங்கியது. பள்ளியிற் படித்து வரும்பொழுது ந்யூட்டன் (Newton) எப்போதும் வகுப்பில் கடைசியிலேயே யிருப்பார். அப்போது அவர்க்கு முன் நின்ற சிறுவன் காலால் உதைக்க, அந்த முட்டாள் ந்யூட்டன் அவனைச் சண்டைக்கு வரவழைத்துச் சண்டையிட்டு வென்று தமது சாமர்த்தியத்தைக் காட்டினார். சண்டையில் வென்றபின், அதிக ஊக்கமாய்க் கற்கத் தொடங்கி அவனைக் கல்வியிலும் வெல்ல நினைத்து வென்று வரவர முந்தி அவ்வகுப்பில் தாமே தலைமாணக்கரானார். அங்கிலேய குருக்கள் வகுப்பில் மகத்துவம் மிக்கவர்கள் பலர் பிரௌட புத்தியுள்ளவர்களே யல்ல. ஐஸாக் பாரோ (Isaac Barrow) சிறு பருவத்திற் பள்ளியில் இருக்கும்பொழுது முக்கியமாய்க் கெட்ட கோபமுள்ளவனென்றும் கலகப்பிரியனென்றும் கல்வியிற் சோம்பனென்றும் எவர்க்கும் தெரியும். அவனைப் பற்றித் தாய்தந்தையர்க்கு மிகுந்த மனத்துன்ப முண்டாயிற்று. என் பிள்ளைகளில் எவனையாவது எடுத்துக்கொள்ளக் கடவுளுக்குத் திருவுள்ளமானால், காரியத்தளவில் எவரிலும் கடையனாகிய ஐஸாக்கை இறக்கக் கொடுப்பது எனக்குப் பிரியம் என்று அவன் பிதா சொல்லிவருவார். ஆதாம் க்லார்க்கு (Adam Clarke) சிறு பருவத்தில் பலசாலி. பெருங் கற்களைப் பெயர்த் துருட்டித் திரிவார். ஆயினும் முழு முட்டாளென்று அவர் பிதா சொல்வார். டீன் ஸ்விப்த்து (Dean Swift) டப்ளின் சர்வகலாசாலையில் படித்துப் பரீ

க்ஷையில் தேறாமல், பின்பு ஒருவருடைய வாக்குசகாயத்தால் ஆக்ஸ்போர்ட்டில் சேரும்படி உத்தரவு பெற்றவர். உலகறியப் பெற்ற சால்மர்ஸ் எனும் வேதாத்தியாபகரும் (Dr. Chalmers) கூக் பண்டிதரும் (Dr. Cook) இளமையில் ஸேன்ட் அன்ட்ரூ பாடசாலையில் சகபாடிகளா யிருக்கும்பொழுது மிக்க மடையரென்றும் தறிதலையென்றும் கண்டு தாங்கரிய கோபங்கொண்டு உபாத்தியாயர் இந்த முட்டாள்கள் எப்பொழுதும் சீர்ப்படுவ தரிதென்று இருவரையும் தள்ளிவிட்டார்.

மிகப் பிரக்கியாதிபெற்றவரான ஷெரிடன் (Sheridan) சிறு பருவத்தில் சிறிதும் சாமர்த்தியமற்றவரா யிருந்தார். அவரைத் தாயார் உபாத்தியாயரொருவர் வசம் ஒப்பித்தபொழுது இவன் திருத்தக்கூடாத முட்டாளென்று இகழ்ந்தான். உவால்த்தர் ஸ்காட் (Walter Scott) சிறுவனா யிருக்கையில் சுத்த முட்டாள். எப்பொழுதும் பாடத்திற்குப் பிந்திச் சண்டைக்கு முந்துவார். எடின்பர்க் சர்வகலாசாலையில் டால்ஜில் பண்டிதர் "நீ இன்றும் முட்டாள், என்றும் முட்டாளாகவே இருப்பாய்" என்று அவரைப்பார்த்து உறுதிமொழிசெய்தார். "இவன் எதற்கும் உதவாத பேயன்" என்று உபாத்தியாயர் சாற்றர்த்தனைத் (Chatterton) தாயாரிடத்திற்குத் திருப்பி அனுப்பிவிட்டார். பர்ன்ஸ் (Burus) மல்லயுத்தத்தில் மாத்திரம் வல்லவனாகிக் கல்வியில் மந்தனா யிருந்தவர். தான் பருவம் பிந்திப் புஷ்பித்த செடி என கோல்ட்ஸ்மித் (Goldsmith) தம்மைக்குறித்துச் சொல்வார். ஆல்பீரி (Alfieri) என்பவர் வித்தியாசாலையிற் சேர்ந்தபொழுது அறிந்திருந்த கல்வியிலும் வித்தியாசாலையைவிட்டு நீங்கியபொழுது அறியப்பெற்ற கல்வி அதிகமல்ல. தம்மைப் பிரபலராக்கின கல்வியை அவர் ஐரோப்பாகண்டத்திற் பாதிதூரம் பிரயாணம்செய்கிறவரையில் கற்கத் தொடங்கவில்லை. சிறுவயதில் ராபர்ட் க்ளைவ் (Robert Clive) துஷ்டன்; அதனோடுகூட முட்டாள்; ஆனால் எப்பொழுதும் துடுக்கானவன்;

தீவினைகளிலேயே துடுக்கு அதிகம். அவனுடைய தாய் தந்தையர் அவனைத் தொலைக்கச் சமயங் கண்டு சந்தோஷமடைந்து கப்பல் ஏற்றிச் சென்னைக்கு அனுப்பினார்கள். அவன் தன்னுடைய காலத்தில் இந்தியாவில் பிரித்தானிய ராஜ்யாதிபத்தியத்திற்கு அஸ்திவாரம் போட்டான். நப்போலியன் (Napoleon), உவெலிங்தன் (Wellington) இருவரும் இளமையில் மிக மந்தர்கள். பாடசாலையில் அவர்கள் எவ்விதத்திலும் கெட்டிக்காரராகவில்லை. நப்போலியனைக் குறித்து டாப்ராந்தீஸ் பட்டவர்த்தனி "அவர் தேகசவுக்கியமுள்ளவர்; இதுதவிர இதர விஷயங்களில் மற்றப் பிள்ளைகளுக்கும் அவருக்கும் பேதம் இல்லை" எனச் சொல்லுகிறார்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய பிரதேச தளபதியாகிய யூலிஸஸிஸ் க்ராண்ட் (Ulysses Grant) என்பவரை அவருடைய மாதா உடயோகமற்ற க்ராண்ட் எனக் கூப்பிடுவார். சிறுவனாயிருக்கும்பொழுது அவர் அந்தமைமந்தனும் துப்புக் கெட்டவனுமா யிருந்தார்; லீயின் (Lee) துணைவரிற் பிரதானராகிய ஸ்டோன்வால் ஜாக்ஸன் (Stonewall Jackson) வாலிபரா யிருக்கும்பொழுது மந்தனென்றே பிரசித்தரா யிருந்தார். ஆனால் பிற்பாடு ராணுவ வித்தியாசாலையிற் கற்கும்பொழுது அவர் இளைப்பறு முயற்சியும் கடைப்பிடியுமுடையவரென்று வியக்கத் தக்கவரானார். குறித்த பாடத்தை அவர் தீரத்தெளிய வரப் பண்ணிக்கொள்ளுமளவும் விட்டுவிடுகிறதில்லை; முற்றமுடிய அறியாத ஒன்றை அறிந்தவர் போல நடிக்கிறதுமில்லை. அன்று படித்தபாடத்தில் உபாத்தியாயர் கேள்வி கேட்டால் அவர், 'நான் இன்னம் அதைப் பார்க்கவில்லை; நேற்றையதினமும் அதற்கு முதல்நாளும் ஒப்பித்த பாடங்களைத் தடையற வரப்பண்ணிக்கொண்டிருந்தேன்' என்று உத்தரம்சொல்வார். இவ்வாறு உழைத்ததனால் எழுபதுபெயர் வித்தியார்த்திகள் கற்ற வகுப்பில் பரீக்ஷையில் அவர் பதினேழாவது இடம் பெற்றார். ஆதியில் அவ்வகுப்பில் அறிவிலும் கல்விப்பேற்றிலும் ஜாக்ஸனுக்கு

இனைத்த வித்தியார்த்தி வேறொருவனும் இல்லாதிருந்தது. கல்விப்பயிற்சி எனும் பந்தயவோட்டம் ஓடி யொழிந்தபின் அவனை முந்தியவர்கள் பதினைறுபெயர்தாம். மற்ற ஐம்பத்து மூன்றுபெயரையும் முந்திப் போயினர். கல்வி கற்கக் குறித்த காலம் நாலுவருஷமா யிராமற் பத்துவருஷமா யிருந்ததுண்டானல் ஜாக்ஸன் அவ்வகுப்பின் முதல் மாணுக்கனுக்கடைத்தேறி யிருப்பானென்று அவர் சகபாடிகள் சொல்லி வருவார்கள் என அவனை அறிந்த ஒருவர் எழுதினர்.

லோகாபிமானி யாகிய ஜான் ஹவர்ட்டு முட்டாளென்று பெயர்பெற்றவர்களில் பின்னும் ஒருவர். அவர் பள்ளியில் இருந்த ஏழுவருஷகாலத்தில் ஒன்றும் கற்கவில்லை. ஸ்டீவின்ஸன் (Stephenson) வாலிபவயதில் முக்கியமாய்ப் புஜபல பரீக்ஷை, மல்லயுத்தம் இவைகளில் வல்லவனென்றும் வேலையில் ஊக்கமுள்ளவனென்றும் பெயரெடுத்தான். பிரபல வித்துவானுகிய ஸ்ரீ ஹம்பரி டேவி (Sir Humphry Davy) இளமையில் இதர வித்தியார்த்திகளைப்பார்க்கிலும் அதிக சமர்த்தரல்ல. அவருடைய உபாத்தியாயராகிய கார்டு பண்டிதர் (Dr. Cardew) ஒருசமயத்தில் அவனைக்குறித்து "இவன் என்னிடத்திற் கற்றபொழுது, இத்தனை பெருமை அடையத்தக்க திறமை இவனிடத்திலிருந்தது என் புத்திக்குச் சிறிதும் தோன்றவில்லை" என மொழிந்தார். பள்ளியில் மிகுதியாய்ச் சோம்பிச் சுகமாயிருக்கும்படி நேர்ந்தது தமது அதிர்ஷ்டமேயென்று டேவி தாமே பின்னாளில் எண்ணினர். உவாட் யௌக்கியவயது வருவதற்கு முன்னமே தேர்ச்சிபெற்றதைக் குறித்துச் சில கதைகள் சொல்வார்களாயினும் அவர் கல்வியில் மந்தனயிருந்தவரே. ஆனல் அவர் பொறுமையும் கடைப்பிடியு முள்ளவர். இவ்விரண்டு குணங்களே அவருக்கு அனுகூலமாய் முடிந்தன. அவர் கையிட்ட நீராவியக்திரத்தைச் சாங்கோபாங்கமாய்ச் செய்து முடிக்க வல்லவரானது அவர்க்கிருந்த இக்குணங்களாலும் அவர் அவதானமாய்ப் பண்படுத்திய கற்பனைசக்தியாலுமே.

சிறுவர்களுள் ஒருவர்க்கொருவருக்கு உள்ள பேதம் முக்கியமாய் ஊக்கத்தைப்பற்றியே இருக்கின்றது; புத்தியைப் பற்றி அவ்வளவு பேதமில்லை என ஆர்னல்டு பண்டிதர் (Dr. Arnold) இளைஞரைக் குறித்துச் சொல்லியது இளைஞர்க்கு மாத்திரமேயன்றி ஆடவர்க்கும் ஏற்கும். ஒருவனுக்கு ஆரம்பத்தில் கடைப்பிடி இருக்குமானால் உற்சாகமும் விரைவில் அவனுக்குச் சாதகமாகும். மந்தபுத்தி யுள்ளவனொருவன் கொண்டது கைவிடாக்கொள்கையும் முயற்சியு முள்ளவனா யிருப்பானானால், இவ்விரண்டு குணமுமில்லாத விவேகியை அவன் முந்தாதுபோவதே யில்லை. மெல்லப் பாயுந் தண்ணீர் கல்லையும் குழியப்பாயும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." எனப் பழமொழியு முண்டல்லவா? பாடசாலையிற் படிக்கும்பொழுது பிள்ளைகளுக்கு உள்ள நிலை பின்பு அவர்களுடைய வாழ்நாளில் மாறுபடுவது விடாமுயற்சியாலேயேயன்றி வேறல்ல. பள்ளியில் விசேஷவல்லவர்களாயிருந்தோர் பிற்காலத்தில் சாமானியராய்ப் போய்விட்டார்கள் ஒன்றுக்கும் உதவார்களென்றிருந்த மந்தர் சிலர் புத்தியில் விரைவிலாதிருந்தும் சலிப்பற நடந்து உலகத்தில் மிக்க நிர்வாகர்களானார்கள். இந்தமாயத்தை எண்ண எண்ண அதிசயமாயிருக்கின்றது. இந்தக் கிரந்த கர்த்தா சிறுவனா யிருக்கையில் அவர் வகுப்பில் மிகமடையன் ஒருவன் இருந்தான். உபாத்தியாயர்கள் பலர் ஒருவர்பின் ஒருவராகத் தம் சமர்த்தெல்லாம் செலுத்தி அவனைத் தேறப்பார்த்தும் முடியவில்லை. பலவிதமாய் அடித்து வெருட்டுதல், மடையர் குல்லா, இங்கிதவசனம், நயந்துவேண்டுகோள் இவையொன்றும் பயன்படாமற் போயின. சிலவேளை அவனை வகுப்பு முதலில் நிறுத்திவிட்டுப் பாடம் கேட்டுக்கொண்டு வர அவன் பிந்திப்பிந்தி வகுப்புக் கடையிற்போய்ச்சேர்ந்த தீவிரம் எவர்க்கும் ஆச்சரியமாயிருக்கும். உபாத்தியாயர்கள் அவ்வாலிபனைத் திருந்தாத மூட்டாளென்று விட்டுவிட்டார்கள் — அவர்களில் ஒருவர் அவனை "விசித்திரமூடன்" என்றார். இம்மூடன் இப்படி

தாமசசக்தியினனாயிருந்தும், இவனிடத்திற் குடிகொண்டிருந்த ஒருவகை மந்தமானகடைப்பிடியானது தேகபலத்தோடுகூட முதிர்ந்து இவன் ஆடவனாகத் தானும்முதிர்ந்து உரத்தது. பின்பு அவன் ஆளாகி இவ்வுலகத்து வியாபாரத்திற் பிரவேசித்தபொழுது, அவன் மிகவும் உயர்ந்த பதம்பெற்றுத் தன் சகபாடிகளிற் பெரும்பாலார்க்குத் தலைவனானான். சகபாடிகளுள் அநேகர் அவனுக்கு வெகுதூரம் கீழேகிடந்தார்களென்றால் அதைவிட வியக்கத்தக்கது வேறென்ன? கடைசியில் அவர் தாம் பிறந்த ஊரில் ஸ்டோக்ட மாஜிஸ்ட்ரேட் உத்தியோகம் நிர்வகிப்பதாக இக்கிரந்த கர்த்தாவுக்குப் பின்னிட்டுச் செய்தி எட்டியது.

வழி தப்பி விரைந்தோடும் பந்தயக் குதிரையைச் சரியான வழியிற் பொறுத்து நடக்கும் ஆமை கெலிக்கும். முயற்சியுள்ள வாலிபன் மந்தனாயிருப்பினும் பெரிதல்ல. ஒன்றை விரைவிற் கற்றுக்கொள்ளும் இளைஞன் விரைவில் மறக்கிடுவான். கருத்தையும் கடைப்பிடியையும் பண்படுத்த நிமித்தம் இல்லையென்று அவன் விட்டுவிடுவான். மந்தகுணமுள்ள வாலிபனோ இவ்விரண்டு குணங்களையும் அப்பியாசப்படுத்தாமல் தீராது. எவ்வகை யோக்கியதையும் அமைவதற்கு இவ்விரண்டு குணங்களே முக்கியமாம். ஆகவே, தீவிரபுத்தி தோஷமானாலு மாகும். "என் தற்கால நிலை என் சொந்தமுயற்சியாலாகியது" என டேவி (Davy) தம்மைக்குறித்து மொழிந்தது யாவருக்கும் ஏற்கும்.

கடைசியாய்ச் சொல்வதாவது:—சிறந்த விற்பத்தி பெரும்பாலும் சாதாரணமான பள்ளியிலாவது உயர்ந்த வித்தியாசாலைகளிலாவது உபாத்தியாயர்களால் அமைவதல்ல, ஆடவரானபின் அவரவர் தம்முயற்சியால் கற்றுக்கொள்வதனால் அமைவது. ஆகவே, தாய்தந்தையர் தங்கள் பிள்ளைகள் புத்தியை வலிமையாய் முதிர்விக்க ஆத்திரப்பட நிமித்தமில்லை அவர்கள் பதறாமற் பொறுத்துக் காத்திருந்து, ஒழுக்கமுப

அடங்கிச் செய்யப்பயில்வதும் தடையறத் தம் பிள்ளைகளைத் தேற்றி வரவிட்டு, இதற்கு மிஞ்சு நடப்பதெல்லாம் தெய்வச் செயலென்றிருக்கக் கடவர்கள். இளைஞரைத் தடையறத் தேகாப்பியாசம் செய்து தேசவலிமையும் தேகசுகமும் அடைய விடுவதும், தம்மைத்தாம் பண்படுத்தும் நெறியில் அடியிடுவிப்பதும், கருத்தையும் கடைப்பிடியையும் வழக்கப்படுத்தி வர அவதானமாய்க் கற்பித்து வைப்பதுமே மாதாபிதாக்களின் கடன். இளைஞர் பருவம் ஏறவேறப் பக்குவத்திற்குரிய சாதனம் இருந்தால், திடமாகவும் சித்தியாகவும் தம்மைத் தாம் பண்படுத்த வல்லவராவார்.

அதிகாரம் - கஉ.

நிதர்சனம் - மாதிரி.

நிதர்சனமானது, (அதாவது நீதி யொழுக்கங்களைத் தாமே நடத்திக் காட்டுவதாம்) வாயைத்திறந்து ஒன்றும் சொல்லாமலே விஷயங்களைப் போதிக்கின்றதாயினும், மிகவும் திடமாகக் கற்பிக்கின்ற போதகர்களுள் ஒன்றாம். அது மனிதர்களை பழகுவதற்கேற்ற பாடசாலைபோன்றது. சொற்களைப் பார்க்கிலும் நிதாசனம் அதிகவலிவுள்ளது. உபதேசமானது நமக்கு வழியைமாத்திரமே குறித்துக்காட்டும்; வழக்கத்தில் நமக்குப் பயிற்சியாகி நம்மிடத்தில் நன்றாய் நிலைகொண்ட நிலையான நிதர்சனமோ நம்மைவிடாமல் கூடவே நடத்திக் கொண்டுபோம். நல்ல உபதேசம் நமக்குப் பயன்படத் தக்கதுதான். ஆயினும் அதனோடுகூடச் சிறந்த நிதர்சனமு மில்லாவிட்டால், அந்த உபதேசத்துக்கு அத்தனையாக வலிமை யுண்டாவதில்லை. ஆயின், உனக்கு என் உபதேசம் பிரதானமேயன்றி நடத்தை பிரதானமல்லவென்று சொல்லும் உலக வழக்குக்கு என்ன சரியென்பீர்களோ ? அதோ சரிதான். லோகானுபவத்தில் சாதாரணமாய் அது மாறுபட்டிருக்கிறதென்பதை எவரும் அறிந்துகொள்ளலாம்.

ஒன்றைச் செவியாற்கேட் டறிவதைப்பார்க்கக் கண்ணால் எளிதிற் கண்டறியும் இயற்கை ஏறத்தாழ மனிதர் எல்லோருக்கும் உண்டு. புஸ்தகத்தில் படித்தாவது காதினாற் கேட்டாவது இருக்கின்ற விஷயங்களைப்பார்க்கினும் நேராகக்கண்ணெதிரில் கண்ட விஷயம் எதுவும் நினைவில் ஆழ்ந்தழுந்தும். இது முக்கியமாய் இளமைப்பருவத்தின் இயற்கை. அந்தப் பருவத்தில் கண்ணே அறிவு மனதிற்செல்வதற்கு பிரதான மார்க்கமா யிருக்கின்றது. "கண்பார்த்ததைக் கைசெய்யும்" என்கிற உலக வழக்கப்படியே சிறுவர்கள் எதைப்பார்க்கிறார்களோ அவ்வண்ணம் அபுத்தி பூர்வமாயே அதைத் தாமும் அனுகரித்துச் செய்கிறார்கள். பச்சிலை தின்று பிழைக்கும் பூச்சிகள் பசுமேனி உடையவையாவதுபோல, பாலகர் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களைக் காணக்காண, தமக்குத் தெரியாமலே நாளடைவிலே தாமும் அவர்களைப்போலாவார்கள். ஆகவே, பிள்ளைகளை வீட்டில் பழக்குவது மிகவும் முக்கியமாம். ஏனெனில், பள்ளியில் என்னென்ன கல்விகற்றுத் தேறினாலும், நமது வீடுகளில் காணப்படுகின்ற நிதர்சனங்களுக்கு ஏற்றபடியே நம்முடைய சிறுவர் சிறுமியர்களுக்குப் பிற்காலத்தில் ஒழுக்கம் அமையும். இல்லமானது குடிவாழ்வதின் பெருமையைப் பிரகாசமாய்க் காட்டுகிற பளிங்குபோன்றது. எல்லாக்குணங்களும் உற்பத்தியாவதற்கு அதுவே மூலமாம். நல்லதானாலும் கெட்டதானாலும் அந்த மூலத்தினின்றுமே குடிவாழ்க்கைக்கும் உலக வாழ்க்கும் உரிய ஒழுக்கம், நீதி, தத்துவம் இவையாவும் உற்பத்தியாகும். இல்லத்தினின்றுமே இராச்சியம் உற்பத்தியாகின்றது; பிரஜைகளைப்பற்றிய பொதுவான அபிப்பிராயமும் பெரும்பாலும் வீட்டினின்றுமே விளைவதாம்; அறையி லாடுகிறபடியேயல்லவா அம்பலத்திலுமாடுவார்கள். உயிர்களினிடத்தில் இரக்கமும் உறைவிடமான இல்லத்திலிருந்தே உற்பத்தியாவதாம். "நாம் நமது சிறுசுற்றத்தில் ஒருவரையொருவர் நேசித்திருப்பதற் கேற்றபடி தான் பொதுவாய்ப் பூததயை பச்சாத்

தாப முதலிய பெருங்குணங்கள் உற்பத்தியாகும்" என பர்க்கு (Burke) என்பவர் சொல்லுகின்றார். நமது சுற்றமாகிய இச் சிறு மையத்தினின்றுமே ஜீவகாருணியமானது சிறுகச் சிறுகச் சுற்றிப்பரந்து கடைசியிலுலகமுழுதும் வியாபிக்கும். "தன்னையிஞ்சித்தருமம்" என்பதுபோல் உயிர்களினிடத்தி லிரக்கமும் இல்லத்திலே முதலில் உற்பத்தியாவதாயினும், அம்மாத்திரத்தில் ஒழிந்துபோவதேயில்லை.

ஆகவே நன்னெறிகளை நடத்தி நிதர்சனமாகக் காட்டுவது, பிறருடைய வாழ்க்கையுடன் எப்போதும் பின்னிப்பிணைந்து அவர்களுடையகுணங்களை நல்வழியில் திருத்துவதற்காயினும் கெடுப்பதற்காயினும் ஏற்றசாதனமாயிருப்பதனால், அற்பமாகத் தோன்றும் விஷயங்களிலும் அது முக்கியமானதாம். இந்த நியாயத்தினாலேயே பெற்றோர்களின் குணங்கள் எப்போதும் பிள்ளைகளிடத்திலும் தொடர்ந்துவரக் காண்கிறோம். அன்பும் சிக்ஷையும் முயற்சியும் தன்னடக்கமும் விளங்கத் தினந்தோறும் மாதாபிதாக்கள்செய்யும் செய்கைகள் பிள்ளைகளுடைய நினைவில் அழியாதிருந்து அவர்களுடைய செய்கையிலும் பழக்கமாகிவிடும்; செவியாற் கேட்டுப் படித்தவைகளோ யாவும் விரைவில் மறந்துபோம். ஆனதுபற்றியே ஒரு பண்டிதர் தம்மக்களைப்பார்த்து, "அவர்கள் தம்முடைய பின்அவதாரம்" என்று சொல்லிவருவார். மாதா பிதாக்கள் வாய்திறவாது செய்யும் இங்கிதமும் நினையாதுபார்க்கும் பார்வையும் பிள்ளைகள் ஒழுக்கத்திற்கு என்றும் அழியாமுத்திரை இடினும் இடும்; உத்தமராகிய சில தாய்தந்தையருடைய நினைவு வரும்பொழுது பிள்ளைகள் எத்தனை எத்தனை தீவினைகளைச் செய்யாது விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தாய் தந்தையர்களுடைய மனதுக்கு அவர்களுடைய பிள்ளைகள் செய்யத்தகாததைச் செய்தேனும் கெட்ட விஷயங்களை நினைத்தேனும் வருத்தமுண்டாக்க மாட்டார்கள். இவ்வாறே அற்பத்தில் அற்பமான காரியங்களும் மனிதருடைய ஒழுக்கத்தை நெறிநிறுத்துவதில் பரமார்த்தமாகின்றன. "என் தா

ய் தந்த முத்தம் ஒன்று என்னைச் சித்திரக்கார னாக்கியது" எனவெஸ்து (West) மொழிந்தார். பாலரா யிருக்கும்பொழு து இவ்வகை அற்பவிஷயங்களால் ஓரோர்நெறியிற் செல்வத னாலேதான் ஆட்வராம்பொழுது பெரும்பாலும் சவுக்கியமும் காரியசித்தியும் உண்டாகின்றன. பௌல் பக்ஸ்தன் (Fowel Buxton) பதவியில் உயர்ந்து அதிகாரம் மிகுந்துள்ள உத்தி யோகம் செய்யும்பொழுது மாதாவிற்குக் கடிதம்போக்கி "முக்கியமாய் நான் பிறருக்காக ஏதாவது செய்யும் பொழு தும் செய்ய எத்தனிக்கும் பொழுதும், பாலியத்தில் என் உள் ளத்தில் நீர் நாட்டியதத்துவங்களின் சித்தி நித்தமும் எனக்கு அனுபவபூர்வமாய்த் தெரிகின்றது" என அறிக்கை செய்தார். மேலும் கல்லாத மூடனாகி வேட்டைவிலங்குகளைக் காவல் செய்து பிழைத்த ஆபிரகாம் ப்லாஸ்தோவுடன் (Abraham Plastow) கூடி ஆடிச் சவாரிபோய் வேட்டையாடிப் பயின்ற தெடி பக்ஸ்தன் அவனால் தமக்கு உண்டான அறிவை நினைக்குந் தோறும் நன்றியோடு நினைத்துவருவார். அம்மனிதன் எழுதப் படிக்க அறியாதிருந்தும் ஜன்மவாசனையாக நல்ல அறிவும் வி வேகமும் நிறைந்துள்ளவன். "முக்கியமாய் அவன் மேன்மை பெற்றது சத்தியம் தவறாமையாலேதான். தாயார் எதிரில் இல்லாத சமயத்தில் அவர் மனதிற்குப் பிரீதியாகாத ஏதை யும் எப்பொழுதும் அவன் சொன்னது செய்ததில்லை. அவன் எப்பொழுதும் உயர்வுக்கு உயர்வான மனோநற்குணம் யாவரு க்கும் விளங்கநடந்து, ஸெனிகா, ஸிஸரோஎனும் ஞாதாக்கள் எழுதியநூல்களில்காணும் கருத்துப்பொருளோடொத்த கள ங்கமற்ற தருமமான சிந்தைகளால் இளைஞராகிய எங்கள் மனதை நிறைத்தான். என்பிரதம உபாத்தியாயருடைய லக்ஷ ணம் இது. அவனை நான் உத்தம உபாத்தியாயனென்று அவ சியம் சொல்லவேண்டும்" என பக்ஸ்தன் சொல்லுகிறார்.

லாங்டேல்பிரபு (Lord Langdale) தம் மாதாவினிடத்தில் விளங்கிய அதிசயிக்கத்தகும் ஒழுக்கத்தைப் பின்னோக்காய்ப் பார்த்து, "இவ்வுலக முழுதையும் தராசில் ஒரு தட்டிலும்

என்தாய் ஒருத்தியை எதிர்த்தட்டிலும் வைத்து நிறுத்தால் உலகம் ஏறியதட்டு துலாக்கோலிலேபோய் இடிக்கும்" எனக் கூறினார். தமது தாயார்போகவர இருந்தஇடங்களிலும் அவரைக் காண்பவர்களுக்கு உண்டாகும் பயபக்தியை ஸ்கிம் மெல் பென்னிக் துரைசாணி முதிர்ந்த பருவத்தில் நினைத்து வருவதுண்டு. அவர் ஒரு அறைக்குட் பிரவேசித்தால், அங்கிருந்து சம்பாஷிப்பவர்களுடைய சம்பாஷணைப்பதம் அந்தக்ஷணமே உயர்ந்துவிடும். லோகாசாரங்கள் மலமறச்சுத்தியானாற்போல அங்குள்ளோர் அனைவரும் நிர்ப்பந்தமின்றிச் சந்தோஷமாக நிமிர்ந்துநிற்பார்கள். "அவர்கூட இருக்கும்பொழுது நான் ஒரு நூதனமான பிராணிபோல ஆகிறேன்" என அவ்வுத்தமியைச்சுட்டி அவர்புத்திரி மொழிந்தார். இவ்வண்ணம் சகவாசத்தினாலேயே நீதி நல்லொழுக்கங்கள் அமையும். ஆதலால் பெற்றோர் அன்றன்று பிள்ளைகள் கண்ணுக்குமுன்னே செய்வதுசெய்து படுவதுபட்டு அவர்களை வசப்படுத்திக் கொள்வது மிகவும் மேலானது. "உன்புத்தியைக் கொண்டு நீயே முயன்று தேறவேண்டும்" என்று சொல்லி மக்களுக்குக் கற்பிப்பது அதினும் சிறந்ததாம்.

மனிதர் செய்யும் செயல், சொல்லும் சொல் அனைத்தையும் அதனதன் பயன் ஒருபொழுதும் முடிவு காணாத நெடியசங்கிலித் தொடர்போலத் தொடர்ந்துவரும். இதை நினைக்கும்போது ஒருவிதமான பயமும் பக்தியும் உண்டாகின்றன. உலகத்திலெந்தச் செயலாயினும் சொல்லாயினும் ஒருவாறு நம் ஒழுக்கத்தை விசேஷப்படுத்தி நம்மைச் சூழ்ந்தவர்கள் ஒழுக்கத்தையும் அவர்களுக்குத் தெரியாமலே தன் வசப்படுத்திக் கொள்ளாதிராது. நல்வினை, நல்லுபதேசம் இவைகளால் உண்டாகும் பயனை நாம் காணாதிருப்பினும், அவை அழியா; தீவினை தீமொழிகளும் அவ்வாறே. தன் ஒழுக்கத்தால் எவருக்கும் நன்மையும் உண்டாகாது, தீமையும் உண்டாகாது என எப்படிப்பட்ட அற்பனும் உறுதிமொழி கூறத்துணியான். மனிதருடைய ஆத்மாவிற்கு இறப்பு

இல்லை; உடல் அழிந்தும் அது அழியாதிருந்து நம்முடன் சஞ்சரிக்கின்றது. ரிச்சார்ட் காப்டென் (Richard Cobden) இறந்தபொழுது ஜனப்பிரதி நிதிகள் சபையில் மெஸ். டிஸ் ரெலி (Mr. Disraeli) துரை "இச்சபையில் இல்லாதிருந்தும் இன்னம் இதில் அத்தியக்ஷர்களா யிருப்பவர்களும், குடிகளின் சஞ்சல இதயத்திற்கும் காலகதிக்கும் உட்படாதவர்களுமா கிய மனிதர்களில் அவர் ஒருவர்" என மொழிந்த கருத்தான து மிகச் சிறந்த மெய்க்கருத்தாம்.

மனிதர்களுக்கு இவ்வுலகிலும் ஒருவிதமான அழியாமையு ண்டு; இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவனும் தனித்திருக்கவில்லை. அவனவன் ஒன்றுக்கொன்று ஆதரவாயுள்ள மனிதர் கூட் டத்தின் ஓரவயவமா யிருக்கிறான். அவனவன் செய்யும் வெ வ்வேறு செய்கைகளால் இப்பொழுதும் இன்னும் எக்காலத் தும் மானிடர் சுகத்தினளவு ஏறும் அல்லது குறையும். நிக ழ்காலம் சென்ற காலத்தையே ஆதாரமாகக் கொண்டிருப்ப தால், நம்முன்னோர் சரித்திரமும் அவர்கள் நடத்திக்காட்டிய ஒழுக்கமும் இன்றளவும் பெரும்பாலும் நம்மைத் தங்கள் வச ப்படுத்துகின்றன. இவ்வாறே நாமும் நமது நடையுடைபா வனைகளால் எதிர்கால ஸ்திதியையும் குணத்தையும் உரு வாக்கி வருகிறோம். சென்ற நூற்றாண்டுகள் அனைத்திலும் செய்த கிருஷியால் காய்த்து முதிர்ந்து கனிந்த பழமே மனி தர்களாம். இப்பொழுதுள்ள தலைமுறையார் எட்டாத்தூரத்தி லுள்ள இறந்தகாலத்தின் செய்கைகளையும் ஆசாரங்களையும் இனிவரப்போகிற எதிர்காலத்துடன் சம்பந்தப்படுத்த மத்தி யில் காந்தம்போலத் தொடர்ந்து வருகின்றனர். எவன்செய் தவினையும் கட்டோடேமாய்ந்து போவதில்லை; இந்தக்காயம் உருக்குலைந்து மண்ணோடுமண்ணும் காற்றோடு காற்றுமாய்க் கலந்துபோமெனினும், அவரவர் நல்வினை தீவினைகள் அழியா மல் அதனதன் பங்காய்ப் பயனைவிளைவித்து இனி என்றென் றும் பின்வரும் தலைமுறையாரை வசப்படுத்திக்கொண்டிருக் கும். ஆழ்ந்தறியத்தக்க இம்முக்கிய தத்துவமே மானிடரு

டைய பூலோகவாழ்வின் பிரதான ஆபத்திற்கும் பாரம்பழிக்கும் ஆதாரமுமாம்.

மெஸ். பாபேஜ் (Mr. Babbage) தமது கிரந்தம் ஒன்றில் ஒரு உத்தமவாக்கியத்தில் இந்த அபிப்பிராயத்தை வெகு உறுதியாய் வெளியிட்டிருப்பதனால் அதை இங்கெடுத்துரைக்கத் துணிகிறோம். அவர்வாய்மொழி இது.—"நன்மையோ தீமையோ அழுந்தியிருக்கின்ற பிரதி அணுவும் அற்பமும் அதமுமான அனைத்துடனும் பதினாயிரவிதங்களிற் கலந்திணைந்து கலைவல்லோரும் ஞானிகளும் அதிற்புகட்டிய சலனத்தை விடாது வைத்திருக்கின்றது; இந்த ஆகாயம் ஒரு விஸ்தாரமான புஸ்தகாலயம். அதில்உள்ள புஸ்தகங்களில் மனிதர் எப்பொழுதேனும் வாய்திறந்து மொழிந்தது காதிலோதியது அனைத்தும் என்றும் அழியாவண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன. அப்புஸ்தகங்களில், மனிதர்கள் செலுத்தாத கடன்களும் தவறின வாக்குகளும் பூர்வகாலத்திலும் இக்காலத்திலும் மனிதர் விட்ட பெருமூச்சுடன் கலந்து மாறாதமயங்காத எழுத்துகளில் என்றும் அழியாவண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன. பிரதியணுவும் ஒத்தியங்கும் இடந்தோறும் மனுஷருடைய சஞ்சலசித்தத்தைப்பற்றி நிரந்தரமாய்ச் சாக்ஷி பகருகின்றது. ஆனால், நாம் உசுவாச நிசுவாசம் செய்யும் வாயுமண்டலமே நமது வாய்மொழியாய்ப்பிறந்த தாற்பரியங்களை ஒருபொழுதும் தவறாதெழுதிவைக்கும் சரித்திர நூலாசிரியனாவதுபோல, நிலம் நீர் ஆகாயம் இம்மூன்றும் நாம் செய்த வினைகளுக்குச் சதாசாக்ஷிகளாயிருக்கின்றன. கிரியை பிரதிகிரியை இரண்டும் ஒன்றுக்கொன்று சமானம்எனும் தத்துவம் அவைகளுக்கும் பொருந்தும். பிரகிருதிகாரணங்களாலாவது மனிதர் எத்தனத்தாலாவது இயங்கி அழுந்திய அடையாளம் ஒன்றும் ஒருபொழுதும் அழியாது.........ஆதியில் படுகொலைபுரிந்த காதகனுடைய நெற்றியில் அவன் தோஷத்தின் அழியாது விளங்குங்குறியைச் சர்வசக்தராகிய பகவான் முத்திரித்தது போலவே பின்விட்டுள்ள ஒவ்வொரு குற்றவாளியையும் வில

கவொட்டாமல் அவன்தோஷத்தின் சாக்ஷியத்துடன் சங்கிலிக்கட்டாய்க் கட்டும் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்; எப்படியெனில், அவன் தேகத்தின் அணுக்கள் என்னென்ன விதங்களிற் பேதாபேதப்படினும், தோஷம்செய்தபொழுது பேசிகளின் எத்தனத்தால் அழுந்திய இயக்கத்தின் குறிகாரு ரூபமான சேர்க்கைகளினாலும் பிரதியணுவையும் விட்டுநீங்கா தொட்டிக்கொண்டிருக்கும்.

இவ்வாறே நாம்செய்கின்ற செயல், சொல்லுகின்ற சொல், நாம் காணப் பிறர்செய்கின்ற செய்கை, நாம்கேட்கப் பிறர் சொல்லுகின்றசொல் இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சக்தி உண்டு. அது விடாது தொடர்ந்து பிற்காலத்தில் நம்முடைய ஒழுக்கத்தைச் சிறப்பிப்பதுமாத்திரமேயன்றித் தேசத்தார் அனைவருடைய ஒழுக்கத்தையும் உறுத்துகின்றது. அந்தசக்தியானது நம்முடைய பிள்ளைகள் பந்துமித்திரர் உற்றார் உறவினர் இவர்களுக்குள் பலகிளைகளாய்ப் பிரிந்து புகுந்து வேலைசெய்வது நமக்குத்தோன்றாது; வாஸ்தவத்தில் நாம் அதைத்தெரிந்துகொள்வது அசாத்தியமே. ஆயினும் அது என்றென்று மிடையறாது இயலுகிறதென் றுறுதியாய்ச்சொல்லுவேன். ஆசாரங்களை நிதர்சனமாக நடத்திக்காட்டுவது மிகவு மவசியம் என்பதற் கிதுவே முக்கியாதாரமாம். ஏழைகளில் ஏழையும் அற்பரில் அற்பனும் அன்றன்று தன் ஒழுக்கத்தை நிதர்சனமாக நடத்திக்காட்டி வாய்திறவாமலே பிறருக்குப் போதனை செய்யலாம். எப்படிப்பட்ட எளியனாயினும் விலை மதிப்பில்லாத வெகு சுலபமான இப் போதனை செய்வது கடனே. இந்தரூபமாய்ப் பார்க்குமிடத்தில் கடையரிற்கடையனும் பிறர்க்கு உபகாரி ஆவான். குன்றுமேலேற்றிய விளக்கானாலென்ன, பள்ளத்தரையிலேற்றிய விளக்கானாலென்ன? பிரகாசத்தில் யாவும் ஒரேதன்மையவைதாம். எங்கெங்கும், காரியசித்திக்குப் பிரதிகூலமெனப்புறத்தில் தோன்றும் எவ்விதநிலைமையிலும், சதுப்புநிலத்திலும், குடிசைக்கிராமங்களிலும், பெரு நகரங்களின் ஒடுக்க வழிகளிலும் சத்தியவ

ந்தன் உண்டாகலாம். தன்பிரேதக்குழி வெட்டவேண்டுமென விற்கு மிஞ்சாத சிறுதுண்டு நிலத்தைப் பண்படுத்திப்பயிர்செய்து பிழைப்பவனும் ஆயிரம்வேலி பூஸ்திதி யுடையவனைப் போல் அத்தனை உண்மையாகவும் பயன்படத்தகும் விதமாகவும் உழைத்தாலும் உழைப்பான். இவ்வாறே சாமானியத்திற் சாமானியமான தொழிற்சாலை கைத்தொழில் பயிலிடமாகவும், சிறந்த சாஸ்திரங்கள் கற்குமிடமாகவும், நீதிநெறி காட்டும் கல்விச்சாலையாகவும் சிறந்தாலும் சிறக்கும்; அல்லது சோம்பும்பேதைமதியும் குணக்கேடும் பயிற்றும் பொல்லாப்பாடசாலையாக இழிந்தாலும் இழியும். இவையெல்லாம் அவரவர் இயற்கைக்கும், நன்மைசெய்யக் கிட்டும் சமயத்தை எட்டவிடாமல் பயனுறச்செய்யும் முயற்சிக்கும் தக்கபடி முடியும்.

நன்குகழிந்த வாழ்நாளும் நேர்மைதவறாத நல்லொழுக்கமும் ஒருவன் தன்மக்களுக்கும் ஊர் உலகத்திற்கும் கொடுக்கும் சொத்துகளில் அற்பசொத்தல்ல; ஏனெனில், அவை நல்வினையைப்போற்றி மிகச்சாதுரியமாய் எழுதியபாடமாயும், தீவினையை மிகு உக்கிரமாய்த்தூற்றி எழுதிய கண்டனையாயும், செல்வத்துட்சிறந்த செல்வத்தை என்றும் குன்றாது நிலைநிறுத்தும் முக்கிய ஏதுவாயு மிருக்கின்றன. ஹெர்விபிரபுவின் (Lord Hervey) இன்னுச்சொல்லுக்கு எதிர் மொழியாகப் போப் (Pope) "என்பெற்றோர் நிலைமையைக்குறித்து நான் ஒருபொழுதும் லச்சைப்படவுமில்லை, மைந்தன் நிலையைக் குறித்து அவர்கள் ஒருபொழுதும் கண்ணீர் விடவுமில்லை. இம்மாத்திரமே போதுமென்று நான் எண்ணுகிறேன்" என மொழிந்தபடி சொல்லத்தக்கவர்கள் பாக்கியசாலிகளே.

செய்யத்தகுவதை இன்னதென்று பிறருக்குச்சொல்வது போதாது, தானேசெய்து நிதர்சனமாகக் காட்டவேண்டும். "தாம்யாதாயினும் ஒன்றைச்செய்விக்க விரும்பினால் அதை தாமே ஆரம்பித்துச் செய்யவேண்டும்; சும்மாவிருந்துகொ

ண்டு பேசுவதனால் பயன் இல்லை—பயன் யாதும் இல்லை யென்றுகண்டேன்'' என சிஸம் துரைசாணி (Mrs. Chisholm) தான்பெற்ற சித்தியின் மர்மமாக ஸ்தௌ துரைசாணிக்கு (Mrs. Stowe) விரித்துரைத்த வாக்கியம் எத்தொழிற்கும் ஏற்கும். ஒருவன் பேச்சுத்திறத்தைமாத்திரம் காட்டுகிற சாதுரியம் மிகவும் எளியதாகும். சிஸம் துரைசாணி தாம் எடுத்த முயற்சியைப் பிரசங்கத்திலே செலுத்தி அம்மாத்திரம் போதுமென்று திருப்தியாயிருந்துவிட்டால், அம்முயற்சி வாய்ப்பேச்சுக்கு மிஞ்சி ஒருபொழுதும் நடவாதென்று மனம் தேற அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்துவந்தார். அவர் செய்துகொண்டுவருவதையும் செய்து நிறைவேற்றியதையும் ஜனங்கள் கண்டபொழுது அவரோடு ஒருமனப்பட்டு அவருக்குத் துணைநிற்கப்போனார்கள். ஆதலால் உலகத்திற்கு மிகவும் உபகாரமான செய்கைகள் செய்பவன் யாரெனில், மிகு சாதுரியமாக வார்த்தை சொல்லுகிறவனுமல்ல, மிகு கம்பீரமான ஆலோசனை யுடையவனுமல்ல, மிகுசாதுரியமான செய்கைகளைச் செய்கிறவனேயாம்.

எளியார்க்கெளியராயினும் மனநேர்மை யுடையோராய் உற்சாகத்தோடு ஒன்றைச்செய்வோர், தமைப்போலும் எளியஸ்திதியிலிருப்பவர்களாற் செய்வதற்கரிய நற்காரியங்களுக்கு மேற்குறித்தவண்ணம் உற்சாகம் கொளுத்துவார்கள். தீச்செயல்செய்தவர்களைத் திருத்துவதைப்பற்றித் தோமாஸ் ரைட்டும் (Thomas wright), கந்தை கட்டும் வறிஞர் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம்வைப்பதைப்பற்றி ஜான் பௌண்ட்ஸூம் (John Pounds) சாதுரியமாய்ப்பேசிமாத்திரம் இருப்பார்களானால் அதனால் ஒரு பயனையும் சாதிக்காதிருந்தாலுமிருப்பார்கள்; அப்படி யல்லாமல் அவர்கள் செயலைப்பற்றிய நினைவு தவிர வேறு நினைவின்றிச் செய்ய ஆரம்பித்தார்கள். ஒருவன் மிக எளியோனாயினும் அவன் நிதர்சனமாக நடத்திக்காட்டிய ஒழுக்கம் ஊர் உலகத்திற்கு எப்படி உறைக்கும் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, டோர்ட்ஸ்மத்

தில் இருந்த எளியசக்கிலியாகிய ஜான் பௌண்ட்ஸ் என்பவனுடைய நிதர்சனம் தமது உழைப்புக்கிரமத்தைத் தன்வசப்படுத்திக்கொண்ட வகையைப் பற்றி, பேதைப்பிள்ளை பாடசாலை முயற்சியிற் கங்கணம் கட்டிநின்ற கத்ரி பண்டிதர் (Dr. Guthrio) சொல்வதைக் கேளுங்கள் :

. "தெய்வச்செயலாய் ஒருவனுடைய விதி, அதாவது ஆறு ஓடும் வழியைப்போன்ற உயிர் வாழ்க்கை, எப்படி தீர்மானிக்கப் படுகிறதென்பதற்கும், அற்பகாரணங்களால் அது எப்படி விரோதப்படுத்தப் படுகிறதென்பதற்கும், இவ்விஷயத்தில் எனக்கு ஊக்கம் உண்டாம்படியானதே தகுந்த திருஷ்டாந்தமாம். கந்தைகட்டிகள் பாடசாலையின் அபிவிர்த்திவிஷயத்தில் ஆதியில் ஒருபடத்தால் எனக்கு அக்கறைபிறந்தது. அந்தப்படம் பர்த் அவ் போர்த்எனும் கழிமுகக்கரையில் தோமாஸ் சால்மர்ஸின் (ThoMas Chalmers) ஜன்மஸ்தலமாகிய சிதைவுறும் சாமானியமான புராதனநகர் ஒன்றில் இருந்தது. அதைநினைக்க எனக்கு இதென்னபுதுமையென்று வெகு ஆச்சரியமுண்டாகின்றது. பல வருஷத்திற்குமுன் அவ்விடத்தைப் பார்க்கப் போனேன்; பசியாறிக்களைதீர ஒரு சத்திரத்திற்குள்போயிருக்கையில், அங்கொரு அறைநிறைய ஆயக்கோல்பிடித்திருக்கும் ஆட்டிடையனையும் பண்டிகைதினத்திற்குரிய வஸ்திரம் தரித்திருக்கும் கடலோடிகளையும் குறிப்பிக்கும் படங்களைக்கண்டேன். அவைகளில் விசேஷம் ஒன்றுமில்லை. ஆனால், புகைபோக்கியின்மீது மற்றவைகளிலும் சிறந்தபெரும்படம் ஒன்று இருந்தது. அது சக்கிலிஅறையின் மாதிரியை விளக்கியபடம். சக்கிலி மூக்கிற்கண்ணாடியும் முழந்தாளிரண்டின் இடையில் பழம் பாதரக்ஷையுமாக அங்கிருந்தான்.—அவனுடைய அகன்ற நெற்றியும் உரத்தவாயும் மனவுறுதியின் வலிமையை வெளியிட்டன. அச்சக்கிலி தன்வேலைப் பராக்கிலிருக்க, அவனைச் சூழக் கந்தைகட்டிய ஏழைச் சிறுவர்சிறுமியர் வெகுபெயர் பாடம் படித்துக்கொண்டிருப்பதும், உரோமம் சடைத்தகட்புருவத்தின்கீழ் சக்கிலியின் இருவிழிகளினுமிருந்து இரக்கமா

ணது அந்தச்சிறியோர்மீது சொலிப்பதும் அப்பெரும்படத்தால் விளங்கின. அது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. படத்தின் தாற்பரியத்தை விளக்கி எழுதிய குறிப்பை வாசித்துப்பார்த்தேன். போர்ட்ஸ்மத்நகரில் ஜான்பௌண்ட்ஸ் எனும் சக்கிலி ஒருவன் இருந்ததும், மந்திரிகளும் அதிகாரிகளும் பெருமாட்டிகளும் பிரபுக்களும் நாட்டமின்றி கடுத்தெருவில் நாசமாய்ப்போக விட்டுவிட்ட கந்தைகட்டிய திரளான ஏழைச்சிறுவர் சிறுமியர்மீது அவன் மனதிரங்கியதும், சிதறின ஆடுகளை ஒன்றாகச்சேர்க்கும் நல்லிடையனைப்போலக் குலங்கெட்டுச் சீரழிந்த அவர்களை அவன் ஒருங்குசேர்த்துக் கொண்டதும், தெய்வத்திற்கும் உலகத்திற்கும் ஏற்கும்வண்ணம் அவர்களைப் பண்படுத்தியதும், அவன் அனுதினமும் கட்புருவம் வியர்க்கவியர்க்க வேலைசெய்து பிழைத்துவரும்பொழுது குறையாமல் ஆதரவற்ற பிள்ளைகள் ஐந்நூறுபெயரை ஆபத்திற்கு விலக்கி நான்குபெயரோடும் சபையேறும்படி யோக்கியராக்கியதும் ஆகிய இவ்வரலாறனைத்தையும் வாசித்துப்பார்த்தவுடன் எனக்கு மிகவும் வெட்கமாயிருந்தது. நான்செய்த நன்முயற்சி மிகவும்சொற்பமென்று என்னெஞ்சே என்னைக் கண்டித்தது. இவ்விஷயம் என்மனதில் நன்றாய்ப்பட்டது. அம்மனிதன்செய்த அருந்தொழிலைக்குறித்து எனக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அச்சமயத்தில் எனக்குஉண்டான ஆனந்தாவேசத்தால் நான் என் கூட்டாளியைப்பார்த்து, "இந்த மனிதனால் மானிடர் எல்லோருக்கும் கௌரவம்உண்டு. பிரித்தானியகரைக்குள் கட்டியிருக்கும் கோரிஅனைத்திலும் உயர்ந்தகோரி இவனுக்குக் கட்டத்தகும்" என்று சொன்னேன். ஆவேசந்தீர்ந்து என்மனம் ஆறி அடங்கியிருக்கும்பொழுது, நான் இப்படி மொழிந்தது தப்பென்று எனக்குத்தோன்றவில்லை. அம்மனிதன் சரித்திரத்தை வாசித்துப்பார்த்தேன். ஜனங்களின் மீது மனதிரங்கிய அவர்சிந்தையே அதற்கு ஜீவனாயிருந்தது என்றுகண்டேன். அன்றியும் ஜான்பௌண்ட்ஸ் இரக்கம் ஒன்றுமாத்திரமல்ல, மிகு சாமர்த்தியமுமுள்ளவன்; பௌல் (Paul)

என்பவனைப்போல, அவன் ஏழைச்சிறுவர்களை ஒருவிதத்திலும் வசப்படுத்திக் கொள்ளக்கூடாதபட்சத்தில், தந்திரமாய் வசப்படுத்துவான். அவன் ஏற்றிறக்குமதித் துறைகளுக்குப்போய்க் கந்தைகட்டிய சிறுவரைத் தொடர்ந்துபிடித்து, போலீஸ் சேவகரைப்போல் பயம்காட்டாமல் நயம்காட்டி வெந்த உருளைக்கிழங்குகொடுத்து வசியப்படுத்திக் கட்டாயமாய்ப் பள்ளிக்குவரும்படி செய்துகொள்வான். அயர்லாந்தருக்கு உருளைக்கிழங்கில் ஆசை மிகுதியென்று அவனுக்குத் தெரியுமே. ஜான் பௌன்ட்ஸ் அயர்லாந்தரைப்போலச் சிறுவருக்கு மணக்கும்படி நையவெந்து சூடாறாதிருக்கும் உருளைக்கிழங்கும் கையுமாக எளிய சிறுவரைப்போலத் தானும் கந்தை கட்டிக்கொண்டு ஓடித்திரிவதை அடிக்கடி காணலாம். கனத்திற்குரியவர்களுக்குக் கனம்செய்யும் தினம் வரும்பொழுது, கவிவாணர்பாடிக் கீர்த்தனம்செய்த திரளான பிரபலரும் ஞாபகசின்னங்கள் சமைந்திருக்கப்பெற்ற கனவான்களும் சமுத்திரத்தில் திரைபோலப் பிளவுபடவிலக, இந்த அற்பனாகிய ஏழைக்கிழவன் தேசத்தில் பெருந்தன்மையுள்ளவர்களையும் குலமக்களையும் புஜபலபராக்கிரமமுள்ளவர்களையும் தாண்டிச்சென்று முற்பட்டு, "நீங்கள் அதை இச்சிறுவரில் ஒருவனுக்குச் செய்ததனால் நமக்கும் செய்தீர்கள்" எனமொழிந்த இறைவனால் விசேஷமதிப்புப்பெறுவானென என்மனதிற்குத் தோன்றுகிறது"

நீதி யொழுக்கங்களை ஒருவன் கற்றுக்கொள்வது வெகுவாய் நிதர்சனத்தாலாவதுதான். நம்மைச்சூழ்ந்திருப்பவர்களுடைய நடையுடை பாவனைகளுக்கும் ஆசாரங்களுக்கும் உள்ளக்கருத்துகளுக்கும் ஏற்றபடியே, நாம் அவற்றை உணராதிருந்தும், நம்முடைய குணங்களும் ஆசாரங்களும் உருவமைகின்றன. நல்ல விதிகளாலும் உபதேசங்களாலும் நன்மை விளையுமாயினும், நல்ல நிதர்சனங்களால் அவற்றைப் பார்க்கிலும் அநேகம் பங்கு அதிகமான நன்மையுண்டாகும்; ஏனெனில் நிதர்சனமானது நல்லொழுக்கங்களையும் நற்புத்தி

யையும் நடவடிக்கையினாலேயே நமக்குக் கற்பிக்கின்றது. நல்ல உபதேசமிருந்தும் கண்ணெதிரில் தீய ஒழுக்கங்களை நிதர்சனமாகக் காட்டப்படுமாயின், அது ஒருகையாற் கட்டுவதை மறுகையால் இடித்துக்கொண்டு வருவதுபோலாம். ஆகவே முக்கியமாய் வாலிபத்தில் சேர்விடம் அறிந்துசேர்வது பரமார்த்தமாம். காந்தம் இரும்பை ஆகருஷிப்பது போல வாலிபரை வாலிபர் ஆகருஷித்து, அவர்களுக்குத் தோன்றுவண்ணம் நாளாவர்த்தியில் ஒருவர்க்கொருவர் சமானராவர்கள். மனவொற்றுமையால் வாலிபர் தம்மைச் சேர்ந்தார் குணம் குற்றம் இரண்டையும் தமக்குத் தெரியாமலே அனுசரிப்பது அல்லது கிரகித்துக்கொள்வது இயற்கையென்று உள்ளந்தேற அறிந்து மெஸ். எட்ஜ்வர்த்து (Mr. Edgeworth) உத்தமரோடு சேரும்படி அவர்களுக்குப் போதிப்பது மிகவும் முக்கியமானதென்று வற்புறுத்தினின்றார். “சேர்ந்தால் நல்லோர், அல்லாவிடில் சேர்க்கை இல்லை” என்பது அவர் நீதிச்சொல். கல்லிங்வூட் பிரபு (Lord Collingwood) வாலிபராகிய இஷ்டர் ஒருவர்க்குக் கடிதம்எழுதி “அற்பரோடுசேர்வதிலும் தன்னந்தனியே இருப்பதுவாசி. இதுகுருமொழியென்று நினைந்துகொள்ளும். உமது கூட்டாளிகள் உமக்குச்சமானராய் அல்லது உம்மில் உயர்ந்தோரா யிருக்கவேண்டும்; ஏனெனில் ஒருவன் யோக்கியதை எப்பொழுதும் அவன் கூட்டாளிகளின் யோக்கியதைபோ லமையும்” எனப் புத்திபுகட்டினார். நல்லாரோடு ஒருவார்த்தைபேசினால் அதன் நலத்தையும், தீயாரோடு ஒருவார்த்தைபேசினால் அதன் நலமின்மையையும் பிரதிமனிதனும் ஒரோர்சமயத்தில் அனுபவிப்பானென பிரபலராகிய ஸிடென்ஹாம் பண்டிதர் (Dr. Sydenham) கூறினார். பணிக்காய் அமையாத சித்திரத்தைப் பார்க்கச் சம்பவித்தபோதெல்லாம் தன் தூரியக்கோலும் அதன் சீர்கேட்டிற் சிறிதை அனுசரித்தமைபற்றி, கூடுமானால் பழுதான சித்திரத்தைத் தாம் ஒருபொழுதும் பார்வையிடவே இல்லை யென்று ஸர்பீட்டர் லீலி (Sir. Peter Lelv) பிரமாண

மெய்சயதார். அவ்வாறே சீர்கெட்ட மனிதனைப்பார்த்து அடிக்கடி அவனோடு சேரும் எவனும் நாளாவர்த்தியில் அவனைப் போலாகாநிறான்.

ஆதலால், வாலிபர் நல்லோருறவை நாடுவதும் தம்மிலும் உயர்ந்தோர் நிலையை அவாவுவதும் உத்தமமே. ப்ரான்ஸிஸ் ஹார்னர் (Francis Horner) • கம்பீரபுத்தியும் தெள்ளறிவுமுடையாரோ டுறவாடியதனால் தமக்கு விளைந்த பயனைக் குறித்துப்பேசிய சமயத்தில், "நான்வாசித்த புஸ்தகம் அனைத்தினின்றும் வரப்பெற்ற அறிவினும் அவர்களால் அடைந்த தெள்ளறிவு அதிகமென்று உறுதியாய்ச் சொல்லுவேன்" எனமொழிந்தார். ஷெல்பர்ன் பிரபு (Lord Shelburne) (பின்பு இவருக்கு லான்ஸ்டௌன் மார்க்விஸ் (Marquis of) Lansdowne) எனப்பெயர் வழங்கியது.) வாலிபப்பருவத்தில் அதிகௌரவம்பெற்றவராகிய மேல்ஷெர்பீஸ் (Malesherbes) என்பவரை ஒருசமயத்தில் போய்க்கண்டு பேசி மிகவியப்புற்று—"நான் வெகுதூரம் பிரயாணம் செய்திருக்கிறேன்; ஆனால் எவரையும் எதிர்க்கெதிராய்க் கண்டுபேசி என்மனம் இவ்வளவு பரவசமானதில்லை; என்வாழ்நாளில் ஏதாவது ஒரு நன்மைசெய்வேனானால், அப்போது ம. மே. மேல்ஷெர்பீஸை நினைத்து ஆநந்தபரவசனாவேன்" எனமொழிந்தார். இவ்வாறே பௌல் பகஸ்தனும் இளமையில் குர்னி குடும்பத்தாரது நிதர்சனபலத்தால் தமது நெறியொழுக்கம் உருவமைந்ததை எப்பொழுதும் தடையற அறிக்கைசெய்து வருவார். "அது என் வாழ்நாளை மிக விளங்கச்செய்தது" என்று அவர் சொல்வது வழக்கம். டப்லின் சர்வகலாசாலையில் தமக்கு உண்டான காரியசித்தியைச்சுட்டிப்பேசியபொழுது, "அதன்காரணம் நான் ஏர்ல்ஹாமுக்குப் போய்ப்பயின்ற பயிற்சியொழிய மற்றொன்று மல்ல" என்று அறிக்கைசெய்தார். தமக்குத்தாமேவருந்தித்தேறுவது என்னும் நற்குணமானது குர்னி குடும்பத்தாரிடத்தினின்றுமே அவரைத் தழுவியது.

நல்லோர் சேர்க்கை ஒருபொழுதும் நன்மை விளைவிக்காதிராது. பிரயாணிகள் செல்லுமார்க்கத்தில்உள்ள செடிகொடி புஷ்பங்களின் பரிமளம் அவர்கள் வஸ்திரத்தை விட்டு நீங்காதிருப்பதுபோல, நல்லோருடன் சகவாசம்செய்து பிரிந்துபோனாலும் அம்மனிதனை அவர்கள் நற்பழக்கம் விட்டு நீங்காமல் அதிற் சிறிதுகூடவே தொடர்ந்துகொண்டிருக்கும். ஏற்கெனக்காலஞ்சென்ற ஜான்ஸ்டெர்லிங்கை(John sterling) நகமும் சதையுமாய்ச்சேர்ந்து அறிந்தவர்கள், அவரோடு கலந்தவர்களுக்கு அவரால் விளைந்த நலத்தைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அனேகருக்குமுதலில் உயர்பதவாஞ்சை எனும் விழிப்புஉண்டானது அவராலேதான்; அவரைக்கண்டே அநேகர் தங்கள்நிலை இன்னதென்றும் தங்களுக்குத்தகும் நிலை இன்னதென்றும் அறிந்தார்கள். மெஸ். ட்ரெஞ்சு (Mr. Trench) அவரைக்குறித்து, "உத்தம சுவபாவம் விளங்கும் அவர் சமுகத்திற்சேரும் ஒருவன் தானும் சிறிது உத்தமனாகி உயர்ந்தேனென்று உள்ளூற அறியாதிருப்பது அசாத்தியம். நான் அவரைக்கண்டு பேசித் திரும்பிவரும் பொழுதெல்லாம் வாலாயமாய் ஊடாடும் இடத்தினின்றும் உயர்ந்த தாற்பரியங்களும் நோக்கங்களும்உள்ள பதவியிற் சேர்ந்தாற்போல் என்மனம் கொண்டாடியது" என்றுசொல்லுகிறார். எப்பொழுதும் குணம் உயர்ந்தோர்செயல் இவ்வாறேயிருக்கும்; நமக்குத் தோன்றுவன்னமே நாம் அவரால் உயர்பதம் அடைவோம். அவர்மனம் செல்லும் துறையில் நமது மனமும் செல்லாமலும், அவரைப்போல விஷயங்களைக்காணும் சாதனை நமக்கு உண்டாகாமலும் ஒருபோதுமிராது. இவையாவும் மனமும் மனமும் ஒன்றுக்கொன்று நமக்குத் தோன்றாமலே செய்துவரும் அதிசயிக்கத்தக்க செய்கைகளாம்.

சங்கீதம் சித்திரமுதலிய கலைகளில் தேர்ந்தவர்களும் தம்மினும் மிக்க நிபுணரோடு சேர்வதனால் தமக்குமாற்று உயர்வதை உள்ளம் தேற அறிகிறார்கள். இதற்கு ஒரு திருஷ்டாந்தம்:— ஹான்டெல் (Handel) என்பவனால் ஹேடெனுக்கு

(Haydon) முதல முதல் சங்கீதவிவேகம் எனும் தீமூண்டது. ஹான்டெல் சங்கீதம் பாடுவதைக் கேட்டவுடன் ஹேடெனுக்கு இசைப்பாட்டு இயற்றுவதில் ஆசக்தி உண்டாயிற்று. இப்படிச் சம்பவிக்காதிருந்தால் "சிருஷ்டி" எனும் பிரபந்தத்தைத் தான் ஒருபொழுதும் இயற்றியேயிருக்கமாட்டானென்று தன்மனம் நிச்சயமாய் நம்புவதாக அவனே மொழிந்தான். ஹான்டெலைக்குறித்துப் பேசியபொழுது அவன் "வேண்டுமானால், இடியேறுபோலத் தாக்குவான்" என்றான். மற்றொருசமயத்தில் "அவன் சங்கீதத்தில் உதிரம் கொதிக்காதஸ்வரமொன்றாவது இல்லை" என்றுரைத்தான். இத்தாலியாதேசம் எங்கும் ஹான்டெலோடுகூடித் திரிந்து உள்ளன்பு உருகி அவனை வியந்த மற்றொருவன் ஸ்கார்லத்தி (Scarlatti) என்பவன். பிற்பாடு அப்பெரும் பண்டிதனைக்குறித்து ஏதாவதுசொல்லும்பொழுது, தன்வியப்பைக்குறிப்பிக்கும்பொருட்டு அவன் சிலுவையுரு இட்டுக்கொள்வான். சித்திரமுதலிய வித்தைகளில் தேர்ந்த நிபுணர்கள் பெருந்தகைமையை ஒருபொழுதும் உதாரமாய் அறிந்து பாராட்டாது விடுகிறதில்லை. இவ்வண்ணம் பீதோவென் (Beethoven) செருபினியை (Cherubini) வியந்தது பெருந்தன்மையாம். அன்றியும் அவன் ஸ்கூபர்ட்டின் (Schubert) நைபுணியத்தை நெஞ்சார வாழ்த்தினான். "மெய்யாகவே, ஸ்கூபர்ட்டினிடத்தில் திவ்வியமான தேஜஸ் ஒன்று குடிகொண்டிருக்கின்றது" என்றவனுரைத்தான். நார்த்கோட் (Northcote) என்பவர் அறியாத இளந்தையாயிருந்தபொழுதே ரேனல்ட்ஸின் (Reynolds) திறமையைப்பார்த்து அதற்காக மிக்கவியப்பு அடைந்தார். மிகப் பிரக்கியாதனாகிய ரேனல்ட்ஸ் எனும் சித்திரசிற்பி ஒருசமயத்தில் டெவன்ஷீயரில் பெருங்கூட்டத்திற்குப் போயிருந்தபொழுது, சேடி இளைஞரான நார்த்கோட்டானவர் அடர்ந்த கும்பைத்தள்ளி விலக்கி உட்சென்று ரேனல்ட்ஸின் அங்கிமுன்றானையைத் தொடத்தக்கதாகக் கிட்டப்போய் நின்றார். "அவருடைய அங்கியின் முன்றானையைத் தொட்டது என்மனதிற்கு மிகுந்த ஆநந்தமா

யிருந்தது" என்று நார்த்கோட் மொழிந்தார்.—நைபுணியத்தைக்கண்டு வியப்பதில் வாலிபர்க்கு உண்டாகும் ஆநந்தத்திற்கு இதுவே ஏற்ற திருஷ்டாந்தமாம்.

தைரியசாலிகளைக் காணும்போதே பயங்காளிகளுக்கு ஒருவகை மனவெழுச்சி யுண்டாகின்றதாதலால், தைரியசாலிகளுடைய நடத்தையானது கூச்சமுள்ளவர்களுக்கும் தைரியம் உண்டாக்குவதாம். அனதுபற்றியே, சிறந்தவீரர்கீழ்ச் சேவகஞ்செய்யும் சாதாரணமனிதர் பெரும்பாலும் அற்புதமாய்ப் பராக்கிரமங்காட்ட வல்லவர்களாகிறார்கள். வீரசூரருடைய அருந்தொழிலை நினைத்தாலே எக்காளத்தொனி கேட்டாற்போல உதிரம் துள்ளும். ஜிஸ்கா (Ziska) தான் இறக்கும்பொழுது தன்தோலைஉரித்துப் பறைக்கு இட்டு, பொஹீமியருக்கு ஆக்கிரஹம் உண்டாக்கும்படி அப்பறையை அடிக்கவேண்டுமென மரணசாதனம் எழுதிவைத்தான். எப்பிரஸ் தேசாதிபதியாகிய ஸ்கான்டர்பெக் (Scanderbeg) இறந்தபொழுது, துர்க்கியர் யாவரும் அவரவர் உடம்பிலழுந்தக் கட்டிக்கொள்ளும்படி அவன் எலும்பனைத்தையும் ஸ்வாதீனமாக்கிக்கொள்ள விரும்பினார்கள். இப்படிச்செய்தால் அவனிடத்தில் விளங்கியதும் சண்டையிற் பலகால்தாங்கள்கண்டதுமாகிய தைரியத்திற் சிறிது தமக்கு உண்டாமென்பது அவர்களுடையகருத்து. ஆண்மையிற் சிறந்த டக்லஸ் (Duglas) புண்ணியபூமிக்கு ப்ரூஸின் (Bruce) இதயத்தைக்கொண்டு போகுமார்க்கத்தில், தன்பக்ஷத்து மாவீரன் ஒருவனை ஸாரஸெனர் சூழ்ந்து நெருக்கி அடித்து வருத்தியதைக் கண்டபோது ஷெ ப்ரூஸ் வீரன் மரணசாதனத்திற்குறித்த இதயம் இட்டுவைத்திருந்த வெள்ளிக் கலத்தைத் தன் கழுத்தினின்று கட்டவிழ்த்து, திரண்டடர்ந்து நின்ற சத்துருக்களின் மத்தியில் வீசிவிட்டு, "உன் வழக்கப்படி சண்டையில் முந்திப்போ; டக்லஸ் உன்னைத்தொடர்ந்துவருவான், அல்லது சாவான்" என்று கூவி வெள்ளிக்கலம் விழுந்த இடத்திற்கு வேகமாய்ச்சென்று சண்டையில் மடிந்தான்.

அவரவரைக் குறித்தெழுதும் சரித்திர புஸ்தகங்களின் முக்கியமான நோக்கமாவது, ஒழுக்கத்திற்கு உத்தம திதர்சனமாக விளங்கும் வரலாறுகள் திரளாய் அமைந்திருக்க வேண்டுமென்பதேயாம். மகிமைபெற்றவராகிய நமது முன்னோர்கள் இறந்து நெடுநாளாயினும், அவர்கள் தமது சரித்திரவடிவமாயும் தாம் செய்தசெய்கைகளின் வடிவமாயும் அழியாது இன்னும் நம்மோடு வாழ்ந்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் நமதுமருங்கில் போஜனபந்தியில் உட்காருகிறார்கள்; நமது கையைப்பிடித்து நடத்திக்கொண்டுபோகிறார்கள்; நாம் இன்னும் தெரிந்துகொள்ளாத பலசிறந்தவிஷயங்கள் நமக்கு நன்றாய் விளங்கும்படி திதர்சனங்களும் அநேகம் நடத்திக்காட்டுகிறார்கள். உத்தமபுருஷன் எவனெவன்சரித்திரம் எழுதியிருக்கின்றதோ அவனவன் தம் பின்னோர்க்கு என்றும் நலம்தரும் சாதனத்தைச்சொந்தமாய்எழுதிக்கொடுத்திருக்கிறான். எப்படியெனில்,அவன் சரித்திரமானது என்றென்றைக்கும் பிறர் தம்மொழுக்கத்திற்கு நல்லுருவமையஅநுசரிக்கத் தகும் அச்சாயிருக்கின்றது. அது மனிதருக்குள் ஒருவிதமான உற்சாகத்தை உண்டாக்கி, அவர்கள் உலகவியாபாரத்தை நூதனமாய்க் கைக்கொண்டு நல்வழியில் ஒழுகுவதற்கு உதவுகின்றது. ஆகவே, உத்தமபுருஷன் ஒருவனுடைய சரித்திர புஸ்தகமானது விலையுயர்ந்த வித்து நிறைந்த பெட்டி போலாம். மேலும் அது என்றும் அழியாத சப்தமும், புத்திகூர்மையுமாம். மில்த்தன் கவிநேர்மொழிந்தபடி, அது இவ்வுலக வாழ்க்கைகருப்பின் பேரின்பவாழ்வு அடையும்பொருட்டு வாதனையிட்டு க்ஷேமித்துவைத்திருக்கின்ற ஒருபரமார்த்தமாம். இவ்வகைப்புஸ்தகம் இடையறாதெப்பொழுதும் மனிதரை உயர்த்தி உத்தமபதம் அடைவிக்கும் பக்குவம் வருவித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், யாவற்றிற்கும் மேலாய், இம்மையில் நம் ஒழுக்கத்திற்கு உருஅமையும்படி நமக்குமுன் வைத்திருப்பதும், அறிவு இதயம் இவற்றின் தேவையனைத்திற்கும் மிகவும் ஏற்றதுமானதிதர்

சனங்களடங்கிய புத்தக மொன்றுண்டு: அந்த நிதர்சனம் சூரியனை ஒருபொழுதும் கண்ணுற்காணாமல் கணுக்கண்டு அவன் இருப்பிடம் எங்கென்று உத்தேசித்துத் தம்மால் இயன்றமாத்திரம் சூரியனிடத்திற்கு ஏறிப்போய்ச்சேர எத்தனம் செய்யும் பூண்டுசெடி கொடிகளைப்போல நெடுந்தூரத்தில் நின்று நாம் அனுசரித்துப்பின்னிட்டு அனுபவபூர்வமாய்க் காணத்தக்கதாம்.

மேலும், பக்ஸ்தன் (Buxton,) ஆர்னல்ட் (Arnold) முதலானவர்களுடைய சரித்திரபுஸ்தகங்களை வாசிக்கும் வாலிபன் எவனும் தன் யுத்தியும் இதயமும் திருந்தியதையும், தன் உத்தம நிர்ணயங்கள் உறுதிப்பட்டதையும் நெஞ்சார அறியாமல் அப்புஸ்தகங்களை வைத்துவிட்டு எழுந்திரான். இவ்வகைச்சரித்திர புஸ்த்தகங்கள் மனிதர் எத்தன்மை யுடையோராகமாட்டுவாரென்றும், என்ன செய்யமாட்டுவாரென்றும் வாசிப்பவனுக்குத் திர்ஷ்டாந்த பூர்வமாய்க்காட்டி அவன் ஆசைகளை அரணுக்கிப் பூலோகவிவகார நோக்கங்களை உயர்த்தி, தன்பலமே தனக்குதவும் எனும் மனவுறுதியை விருத்திசெய்யும். மைகேல் அங்கிலோ (Michael Angelo) வின் செய்கைகளைச் சிந்தனைசெய்த சமயத்தில் கொரெக்கியோ (Correggio) தனக்குள்ளே விவேகம் எழுவதை உள்ளுற அறிந்து "நானும் சித்திரம் எழுதும் சிற்பியே" எனக்கூறியபடி, சிலசமயங்களில் வாலிபர்களும் தாம் வாசிக்கும் சரித்திர புஸ்தகங்களால் தமக்கு மிகுத்திறமை விளங்கக்காண்பார்கள். ஸ்ரீ ஸாம்யுயெல் ராமிலி (Sir Smuel Ramilly) தம்மைக் குறித்தெழுதிய சரித்திர புஸ்தகத்தில் மகத்துவமும் உதாரமதியுமுள்ள பிரான்சிய அரசிறைக்கணக்கராகிய டகூஸ்ஸோ (Daguesseau) வின் சரித்திரம் தம்மை மிகவும் பரவசப் படுத்தியதென்று அறிக்கைசெய்தார். அவர்சொல்லிய வாக்கியமாவது: — "தோமாஸ் (Thomas) இயற்றிய கிரந்தங்கள் என்கையில் அகப்பட்டன. அவர் டகூஸ்ஸோவைப் புகழ்ந்தெழுதிய புஸ்தகத்தை வியப்போடுவாசித்தேன்.

அந்தப்பிரபலரான அதிகாரி ஒழுகியதாக மேற்படி கிரந்தாசிரியர் மொழிந்த கௌரவநெறி என் ஆவலையும் ஆசைப்பெருக்கத்தையும் அதிகமாய் எழுப்பிவிட்டு, மகிமை அடைதற்கு ஸாதன மார்க்கங்களையும் என் மனக்கண்ணுக்குத் திறந்து காட்டியது" என்பதாம்.

ப்ராங்க்லின் (Franklin) தாம் எல்லாருக்கும் உபகாரியாகத்தக்க நிலையும் உயர்பதவியும் பெற்றது காட்டன் மாதர் (Cotton Mather) எழுதிய ஒரு புத்தகத்தை இளமையில் வாசித்ததனாலேதான் என்றுசொல்லிவருவார். மாதர் நடந்த நன்னெறியே அந்நூலின் உற்பத்திக்கு மூலமாயிற்று. ஆ! நல்லநிதர்சனமானது தற்காலத்தில் உள்ளவர்களைமாத்திரமேயன்றிப் பிற்காலத்துப் பிரஜைகளையும் சீர்திருத்தித் தன் வசப்படுத்தக் காத்திருக்கின்றது பாருங்கள்! தமது ஒழுக்கத்திற்கும் முக்கியமாய்த் தொழிற்சாதகத்திற்கும் உரு அமைந்தது பெஞ்ஜமின் ப்ராங்க்லின் (Benjamin Franklin) எழுதிவைத்திருக்கின்ற அச்சின்படியென்று ஸாம்யுயெல் ட்ரூ (Samuel Drew) உறுதிமொழி கூறுகிறார். ஆகவே, நல்ல நிதர்சனம் எட்டாதவிடம் இன்னவென்றும், அதற்கு முடிவுண்டெனில் அம்முடிவு இவ்விடத்திலென்றும் சொல்வது அசாத்தியமாம். ஆனதுபற்றியே, கல்வியினாலும்சரி ஒழுக்கத்தினாலும் சரி, நல்லினம் சேர்வதனாலும், நல்லநூல்களை வாசிப்பதனாலும், அவைகளில் விளங்கும் உத்தமமானவிஷயங்களைப் புத்திபூர்வமாய் வியந்து அனுசரிப்பதனாலும் சிறந்தபயன் உண்டாகின்றது. டட்லி பிரபு (Lord Dudley) சொல்லியதாவது,— "வித்தியாப்பியாச விஷயத்தில், முக்கியமாய் ஆதியில் எனக்கு அறிமுகமானவர்களால் ஆகிய நல்வினைத்தைப் பிராணபதமென நம்பிச்சேர ஆசை கூர்ந்திருக்கிறேன்; அவர்களோடு பின்னும் நெருங்கி நட்புகொள்ள நான்மிகவும் விரும்புகிறேன். ஒருகால் வாசித்த புஸ்தகத்தை மறுகால் வாசிப்பது ஒருவேளை மனதிற்கு இன்பந்தராதாயினும், முன் வாசித்திராத புஸ்தகத்தை வாசிப்பதிலும் வாசித்த புஸ்த்தகத்தையே

யீனவும் பலகால் வாசிப்பது மிகவும் நன்மை விளைவிக்கத்தக்கது என்று எண்ணுகிறேன்'' என்றார்.

ஒழுக்கத்திற்கு உத்தம நிதர்சனமான புஸ்தகத்தையெடுத்துப் பொழுதுபோக்காய் மேலெழுந்த வாரியமாக வாசித்தவர்களுக்கும் சிலசமயங்களில், முன் உண்டெனக் கனவிலும் தோன்றாத மனவலிமைகள் அவ்வாசிப்பினால் வெளிப்பட்டதாகத் தெரியவருகின்றன. அல்பியிரி (Alfieri) ஆதியில் காதலோடு கல்வியில நேர்ந்தது ப்ளுதார்க் என்பவருடைய சரித்திரபுஸ்தகம் வாசித்ததனாலேயே. லாயொலா (Loyola) பம்பிலூனமுற்றுகையில் ராணுவசேவகம்செய்து, காலில் படுகாயம் பட்டுக்கிடைப்பாடாயிருக்கையில், நோவை மறக்கடிக்க வாசிக்கும்படி ஒரு புஸ்தகம் கேட்டதற்கு, 'முனிவர்சரித்திரம்' எனும் புஸ்தகத்தைக் கொடுத்தார்கள். அவன் அதைவாங்கி வாசித்து அதனால் மனதிற்கு ஒரு உற்சாகம் உண்டாகிச் சுவலிக்க, அன்றுதொட்டு மதாசாரியர் வகுப்பொன்றை ஸ்தாபிக்கு முயற்சியை விரதமாய் அனுஷ்டித்துவரத் தீர்மானித்தான். அவ்வண்ணமே லூதருக்கும் (Luther) ஜான் ஹஸ் (john Huss) என்பவருடைய கிரந்தங்களை வாசித்ததனால் உள்ளனாளுள்ளமட்டும் கைவிடாதிருக்கும் ஒரு பெருந்தொழிலைக் கையாடும் அவா ஈச்வரனத்தனமாகப் பிறந்தது. 'ப்ரான்ஸிஸ் ஸேவியருடைய (Francis Xavier) சரித்திரம் வாசித்ததனால் உல்ஃப் வேதாத்தியாபகர்க்கு (Dr. Wolff) புறத் தேசத்திற்குப்போய்க் குருத்தொழில் செய்யவேண்டுமென நோக்கமுண்டாயிற்று. அப்புஸ்தகமானது ஜீவனுள்ளளவும் மதாபிவிர்த்தியாகிய அருந்தொழில் ஒன்றே செய்துவரவேண்டுமென்னும் ஆசையை அவர் இளநெஞ்சில் அதிகப்படுத்தியது. உவில்யம் கேரி என்பவன் (William Carey) கூக்குஎன்னும் மாலுமிசெய்த யாத்திரையின் சரித்திரத்தை வாசித்ததனாலேயே மதவிஷயங்களைப் போதிக்கும் ஆசிரியனாகவேண்டுமெனும் அபிப்பிராயம் ஆதியில் அவர் உள்ளத்தில் உதித்தது.

தம்மை மிகவும் தேற்றிப்பரவசப்படுத்திய புஸ்தகங்களைத் தினசரிதையிலும் கடிதங்களிலும் குறித்துவைப்பது ப்ரான்ஸிஸ் ஹார்னருடைய வழக்கம். அப்படி அவர் குறித்து வைத்த புத்தகங்கள் பலவுண்டு. உழைப்பின் பெருமைகளை விளக்கும் படம் எனத்தகும் ஒருசிறந்த புஸ்தகத்தை வாசித்தபோது தம்உள்ளத்தில் ஒரு ஆனந்தாவேசம் எழுந்ததென ஹார்னர் மொழிந்தார். "இத்தன்மையான முன்னோர்களின் சரித்திரம் வாசித்தெழுந்திருக்கும்பொழுது என் உள்ளம் ஊடறுந்து ஒரு வகைத்துடிப்பு உண்டாகாதிருப்பதில்லை. அது வியப்போ, ஆசைப்பெருக்கமோ, நமக்கு அதுகிடைக்காதென்ற நிராசையோ ஏதென்றறியேன்" என்று கண்டார்ஸெட் எழுதிய "ஹல்லர் ஸ்துதி"யைச்சுட்டி அவர் உரைத்தார். ஸர்ஜாஷுவா ரேனல்ட்ஸின் பிரபந்தங்களைப் பற்றிப் பேசியபொழுது அவர், "பேகன்கிரந்தங்களைத் தவிர்த்துச்சொல்லில், என் அறிவைப்பண்படுத்தும்படி என்னை அதிகவலிமையாய்த் தூண்டிவிட்ட புஸ்தகம் இதனிலும் வேறில்லை. பெருந்தகைமைப் பேற்றுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைகளை உலகத்திற்கு அறிக்கைசெய்யச் சிந்தைகவிந்த பிரதமவிவேகிகளில் அவரும் ஒருவர். "உழைப்பு திருவினையாக்கும்" என்பதைச் சுட்டி அவர்மனம் துணிந்து சொல்லும் வாக்குறுதியைக்கண்டு அவர்கிரந்தம் வாசிப்பவர்கள், அறிவு என்பது இயற்கையாய் அமைவதல்ல, வருந்தித் தேடிக்கொள்ளத்தக்க பொருள் என்று எண்ணிக்கொள்வார்கள்; மாட்சிமையை வியக்கும் உன்னத வியப்பும் உள்ளக்களிப்போடு சேர்ந்த வியப்பும் இயற்கையாகவும் சாதுரியமாகவும் கலந்திருப்பதனால், தொகுத்துப் பார்க்குமிடத்தில், இதனிலும் அதிகவிரைவில் நெஞ்சிலே ஆசைத்தீயைப் பற்றுவிக்கும் இயற்கையுள்ள புஸ்தகம் வேறில்லை" எனமொழிந்தார். பெருமையிற்சிறந்த சித்திரமெழுதுவோர் ஒருவரைக் குறித்து ரிச்சார்ட்ஸன் எழுதிய வரலாறுகளை வாசித்தே தமக்கும் முதலில் சித்திரவித்தையின் மீது ஆசை பிறந்ததென்று ரேனல்ட்ஸ் சொன்னது மிகவும் கொண்டாடத்தக்கதாம்; ஹேடனும் இவ்வாறே பித்

பாடு ரேனல்ட்ஸ் சரித்திரத்தை வாசித்துச் சித்திரத்தொழில் செய்யும் ஆசைத்தீயுடையவரானார். ஆகவே, தீரமும் உயர் பதம் பெறவேண்டுமென்னும் அவாவுமுள்ள ஒருவனுடைய சரித்திரம் அவனைப்போலும் கருவிகரணங்களும் பிரவிருத்தியுமுள்ள பிறர்நெஞ்சில் அவ்வாசைத்தீயைப் பற்றவைத்துச் சுவலிப்பிக்கும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." என்றபடி, முயற்சிசெய்வோர்க்கு அம்முயற்சியின் அளவுக்கேற்ற பெருமையும் பயனும் விளையுமென்பதற்கு ஐயமில்லை. ஒன்றைக் கண்டு வியப்பு உண்டாகும்போது அதைப்போலத் தாமும் அநுசரிக்க வேண்டுமென்னும் ஆசையும் அறிவும் உண்டாவதனால், நிதர்சனம் எனும் சங்கிலி காலமுள்ளளவும் மேலும்மேலும் வளையம் அதிகரித்து முடியாது நீண்டு கொண்டிருக்கின்றது.

வாலிபருடைய கண்ணெதிரில்வைத்துக் காட்டக்கூடியமிக அரிதும் எளிதில் பற்றத்தக்கதுமான சிறந்த நிதர்சனமாவது உல்லாசமாய் உழைத்துக் காட்டுவதேயாம். உல்லாசம் மனதிற்கு விசைதருகின்றது. உல்லாஸம் உண்டானால் உடனே எல்லாத் துன்பங்களும் பறந்திடும்; சங்கடங்களால் துயர் உண்டாகாது, சங்கடத்திற்கு நம்பிக்கை எதிரிட, கிட்டும் சமயத்தை எட்டவிடாமல் தடையறக் கருமமுடிக்கும் உல்லாசகுணம் மனதிற்குச் சாதகமாய் விடும். சுறுசுறுப்புடன் முயலுந் தன்மையானது உல்லாசமாய்த் தானும் உழைத்துப் பிறரையும் உழைக்கத் தூண்டிவிடுவதனால், எப்பொழுதும் ஆரோக்கியமும் பாக்கியமும் தருவதாம் மேலும் மிகச்சாமானியத்தொழிலுக்கும் அது பெருந்தகைமை உண்டாக்கும். மிகு திருத்தமாய் முடிகிற வேலையாவது, வாலாயமாய் நெஞ்சாரச்செய்யும் வேலையும் மனம் களிகூர்வோன் கையாலாவது கருத்தாலாவது செய்துமுடிக்கும் வேலையுமாம். குறுவிசாரமுள்ள மனதோடு வருஷம் பத்து லக்ஷம் ரூபாய் விளைவுதேறும் பூஸ்திதி வைத்திருப்பதிலும் எப்பொழுதும் அந்தக் காரியங்களின் நல்விளைவைக் கா

ணுமாசையோடும் கூடிய உல்லாசகுணமுடையோரு யிருப்
பதே தமக்குப் பிரீதியென்று ஹ்யூம் (Hume) சொல்லிவரு
வார். க்ரான்வில் ஷார்ப் (Granwille Sharp) அடிமைவழக்கு
விஷயத்தில் இளைப்பற உழைத்துவரும்காலத்தில், அலுப்புத்
தீர மாலைவேளைகளில் தமது சகோதரர் வீட்டில் கூட்டாளி
களுடன்சேர்ந்து சங்கீதம்பாடுவார், இதவாத்திய விநோதம்
செய்வார், பலவகைக்குழல் ஊதுவார். ஞாயிறுமாலை பஜனை
களில் ஹான்டெல் கீர்த்தனைபாடும்பொழுது பேரிகை அடிப்
பார். சிறுபான்மை சிந்தனைப் பிரதிமைகளும் சித்திரித்து
வருவார். பௌவெல் பக்ஸ்தனும் (Fowell Buxton) விசே
ஷஉல்லாச புருஷர்தாம்; வேட்டையாடுவதும், தம்பிள்ளைக
ளோடு நாட்டகத்தில் குதிரைச்சவாரிசெய்வதும், அவர்கள்
வீட்டில்செய்யும் காலக்ஷேபமனைத்திலும் தாமும் கலந்து
கொள்வதும் அவருக்கு மிகவும் இஷ்டமாயிருக்கும்.

மற்றொரு தொழிற்றுறையில் ஆர்னல்ட் பண்டிதர் (Dr.
Arnold) உதாரமதியோடு உல்லாசமாய் உழைத்தார். தாமுன்
னளவும் அவர்செய்த மிகச்சிறந்த தொழிலாவது, பூரணவிரு
ப்பு விவேகத்துடன் வாலிபரைப்பண்படுத்திக் கல்வியிற்றிந்
தேற்றியதேயாம். வியப்பரிய அவர் சரித்திரத்திற்சொல்லிய
இரண்டொரு வாக்கியங்களாவன,—"லேல்ஹாம் வட்டத்தில்
மிகக்கவனிக்கத்தக்க தொன்றியாதெனில், அங்கே அபிவிரு
த்தியான அதிசயிக்கத்தக்க புத்தி ஆரோக்கியமேயாம். அவ்
விடத்திற்குநூதனமாய்ப்போகும் எவரும் மகத்துவமிக்க செ
யல் ஒன்றுமிகு உற்சாகத்துடன் நடந்தேறுவதைப்போன
வுடன் காண்பார்கள். அவரவருக்குச் செய்யக்குறித்த வேலை
யொன்று உண்டென்றும், அவ்வேலையைச் செவ்வையாகச்செ
ய்வதே தன்கடனும் தனக்குச் சுகமுமென்றும் வித்தியார்த்
திக ளனைவரும் அவ்விடத்தைப் பார்த்தவுடனே சிந்தைதெ
ளியஅறிந்துகொள்வார்கள். ஆகவே, பூலோகவாழ்வைக்குறி
த்து வாலிபர் எண்ணும்பொழுது அவ்வெண்ணம் அவர்கள்

சிந்தையில் தேனினும் இனிதாகத்தித்தித்தது. பிழைக்கவழி தமக்குத் தெரிந்திருக்கிறதென்றும், அனதுபற்றிச் சுகித்திருக்கலாகுமென்றும் நுணுக்கமாய்க்காணும்பொழுது அவர்களுக்கு அதிசயமான ஆனந்தம் உண்டானதன்றியும், பூலோக வாழ்வையும் தம்மையும் பூலோகத்தில் தாம் செய்யப்பிறந்த செய்கையையும் நன்குமதிக்கத் தமக்குக் கற்பித்தவர்மீது ஆழ்ந்த அபிமானமும் அன்பும் உண்டாயின. இதற்கெல்லாம் அஸ்திவாரம் அனைவரும் கொண்டாடத்தக்க ஆர்னல்டினுடைய உண்மையான நன்னடக்கை களும், சகலமான தொழில்களினிடத்தும் அவர்க்குள்ள உண்மையான அபிமானமும், அதனால் உலகத்தார்க்கு உண்டாகும் நன்மைகளை அவர் நன்றாய் அறிந்திருந்தது மாகிய இவைகளாம். இதிலெல்லாம் அவர்க்குப் பதைப்பு இல்லை ; ஒருதொழிலை மற்றொன்றிலும் உசிதமென வியந்துகொள்ளும் நயப்பு இல்லை; ஒருபட்சமான எவ்வகைத் தாற்பரியத்தின்மீதும் அதிக அபிமானமில்லை: ஆனால், இவ்வுலகத்தில் ஏதாவது ஒரு தொழிலைச்செய்வது மன்னுயிர்களுடைய கடமையென்றும், அதைச்செய்து முடிப்பதற்காகவே அவர்களுக்கு நாநாவிதமான கருவி கரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், மனிதனுக்கு இயற்கையாய் அமைந்த சக்தி சாமர்த்தியங்களெல்லாம் ஒருதொழில் செய்வதினாலேதான் தேர்ச்சி பெறுகின்றன வென்றும், வருந்தி வேலைசெய்பவர்களுக்கே நற்கதி கிடைப்பதற்கு வழியுண்டாகுமென்றும் அவர் பொறுமையாய் உள்ளுற ஆழ்ந் தறிந்திருந்தார். சர்க்கார் உத்தியோகத்திற்கு யோக்கியரும், தமக்கும் பிறர்க்கும் உதவும் திறமையுடையோருமாக ஆர்னல்ட் பண் படுத்திய பெரியமனிதர் பலருள் ஒருவர் ஹாட்ஸன் குதிரை ராணுவத்தைச்சேர்ந்த ஆண்டகையாகிய ஹாட்ஸன் (Hodson) என்பவராம். வெகு வருஷம் கழிந்தபின் அவர் இந்தியாவினின்று சீமைக்கு அனுப்பிய கடிதத்தில் கனம் மிகுந்த தம் ஆசிரியரைச்சுட்டி "அவர் தோற்றுவித்த சக்தி மிகநீடித்திருக்கின்றது, அதனாலுண்டான நன்மைகள் வியக்

கத்தக்கவைகளாம். இந்தியாவிலும் அது தெளிவாய்ப் புலப்படுகின்றது; இதற்கு மிஞ்ச உரைக்க என்றால் ஆகாது" என்று எழுதினார்.

ஊக்கமும் முயற்சியும் மனநேர்மையும் உள்ள ஒருவனால் அவன் அண்டை அயலாருக்கும், அவனைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் உலகத்தார்க்கும் மிகுந்த நன்மை விளையுமென்பதற்கு ஏற்ற திருஷ்டாந்தம் ஸ்ரீ ஜான் ஸின்க்ளெயர் (Sir. John Sinclair) என்பவருடைய சரித்திரத்திலும் வேறில்லை. க்ரிகோர் மடாதிபர் "இளைப்பற உழைப்பதில் ஐரோப்பாவில் இணை எவரும் இல்லாதவர்" என்று அவர்க்கு இலக்கணம் கூறினார். ஆதியில் அவர் நாட்டகத்தில் ஓர் காணியாட்சிக்காரர்; கடும்புயலடிக்கும் வடகடலுக்கு எதிர்முகமாயுள்ள விளைநலமில்லாத ஆரணியதேசத்தில், நாகரிகம் உலாவும் எல்லைக்கப்பால் ஜான் ஓக்ரோத் மாளிகைக்குச் சமீபத்தில் அவருக்குப் பிதிரார்ஜிதபூஸ்திதி விஸ்தாரம் உண்டு. பதினாறுவயசில் பிதா இறந்துபோனதனால் குடும்ப சொத்தை அவ்வாலியர்தாமே நிர்வகிக்கும்படி நேர்ந்தது. பதினெட்டு வயதில் அவர் கேத்னெஸ் மாகாணத்தில் மிகுமனவலிமையோடு திருத்தம்செய்யத் தொடங்கினார். கடைசியில் அத்திருத்தம் ஸ்கொத்திலாந்தெங்கும் வியாபித்தது. அக்காலத்தில் கிருஷித்தொழில் திருத்தமின்றி மிகவும் இளைத்திருந்தது; கழனிகளுக்கு வேலியில்லை, பயிர்நிலத்தில் வியர்த்தமாய்ச்சேரும் நீரைப் புறம்போக்கும் சாதனம் இல்லாதிருந்தது. கேத்னெஸில் இருந்த சிறிய கிருஷிகரெல்லாம் வறிஞர், ஒரு குதிரையாவது சிறுமட்டமாவது வைத்து நிர்வகிக்கமாட்டாதவர்கள்; கடினவேலைசெய்து சுமையெடுப்பவர்கள் முக்கியமாய்ப் பெண்பாலார்; குடிசைவீட்டிற் குடியிருக்கும் ஒருவன் தன்குதிரையை இழந்துபோனால் அதற்குப் பதிலாகத்தனக்கு உதவும்படி ஒருத்தியை மணஞ்செய்துகொள்வான். அப்பொழுது அந்நாட்டில் சாலைகள் வாரதிகள் இல்லை; கன்றுகாலிகளை விற்கும்படி தெற்குமுகமாய்ச் செலுத்திக்கொண்டுபோக

வோர் அவைகளோடு தாமும் நீரில் இறங்கி நீந்தி ஆறுகடப்பார்கள். கேத்நெஸுக்குப்போகும் பிரதானவழி மலைச்சார்பில் உயர்ந்த பாறைகளின்மூலமாய்ச் சென்றது. பாதையடியில் கடல் அலைமோதியது. அப்பாதை கடல்நீர்மட்டத்திற்கு மேல் நூறடி செங்குத்தாயுயர்ந்திருந்தது. ஒன்றும் அறியாதவாலிபராயிருந்தும் ஸ்ரீஜான் பென்செல்த் என்றும் குன்றில் புதுச்சாலை ஒன்று உண்டாக்கத் தீர்மானித்தார். எதுவும் இருக்கிறபடி இருக்கட்டும் எனும் கொள்கையைச்சார்ந்தொழுகும் முதியோராகிய காணியாட்சிக்காரர்கள் அவ்வாலிபர் கைக்கொண்ட உபாயம் அசாத்தியமென்றெண்ணி அவரைக் கேலிபண்ணினார்கள். ஆனால் ஸ்ரீஜான் இளைக்கவில்லை. தாமே பாதைக்கு எல்லைகுறித்து வேனிற்காலத்தில் ஒருநாள் அதிககாலையில் முன்பின் ஆயிரத்திருநூறு வேலைக்காரரைச்சேர்த்து ஒருமிக்க வேலைசெய்வித்தார். அவர்கள் வேலைசெய்ய, தாம் மேற்பார்வையிட்டுக்கூட நின்று தமது ஜாக்கிரதையால் அவர்களுக்கு ஜாக்கிரதை உண்டாக்கினார்; குதிரைபிடித்துக்கொண்டுபோக உதவாமல் ஆறுமயில்தூரம் ஆடுசெல்லும் அபாயகரமான ஒற்றடிப்பாதையாயிருந்த அப்பாதை அன்றுபொழுதுபடுமுன் இந்திரஜாலத்தால் பரிணமித்ததுபோல வளமுற வண்டிசெல்லத்தக்க மார்க்கமாயிற்று. இது விடாமுயற்சிக்கும் செவ்வையாகச்செய்விக்கும் வேலைக்கும் அதிசயிக்கத்தக்க திர்ஷ்டாந்தமாயிருந்தது. சுற்றிடங்களிலுள்ள குடிகள் அவ்வருந்தொழில் நிறைவேறியதைக்கண்டு தாமும் அவ்வகை முயற்சிசெய்யத் தூண்டிவிடப்பட்டார்கள். அப்பால் அவர் வேறுசாலைகள் திறக்கவும், யந்திரசாலைகள் சமைக்கவும், வாரதிகள்கட்டவும், வேலியடைத்துப் புறம்போக்கு நிலங்களைத் திருத்திப்பயிரிடவும் தொடங்கினார். அவர் கைத்தொழில் முயற்சியில் ஆசைபுகட்டச் சிறுகவெகுமதிகொடுத்து, திருத்தமாய்ப் பயிரிடுமுறையையும் பருவம் அறிந்து பயிர்மாறிச்செய்து விளைவிக்கும்கிரமத்தையும் வழக்கத்திற்கொண்டுவந்தார். இவ்வண்ணம் அவர் தமது வாக்குச்செல்லும் இடத்து மனுஷர்

அனைவோர்க்கும் விளைவிற்சோம்பற ஊக்கம் வருவித்து பூமி திருத்தியுண்டோர் நெஞ்சில் புத்தம்புதிய ஆண்மை புகட்டினார். ஆகவே, நாகரிகஸ்தலத்திற்கு அறத்தொலைத்த எல்லையாக வடக்கே எளிதிற்போகவரவழியின்றி எட்டாக்கையில் இருந்த கேத்நெஸ்நாட்டானது சாலை, இருவழி மீன்பிடி தொழில் வளம் இவற்றைப்பிறநாடுகளுக்கு உணர்த்தும் அச்சாயிற்று. ஸின்க்லெயர் இளைஞரா யிருக்கையில் அங்கிருந்து தர்ஸோவிற்குத் தபாற்காரன் வாரம் ஒருமுறைமாத்திரம் தபாற்கட்டு எடுத்துப்போவான். அதுகண்டு அவ்விளைஞராகிய பரன் பிரபு தாம் தர்ஸோவிற்கு நித்தமும் தபால்வண்டி ஓடத்தொடங்கும் நாள்வரையில் அதற்குரிய முயற்சிசெய்யாது ஓய்ந்திருக்கிறதில்லை யென்று கூறினார். ஆயினும் அவர்பேச்சை அங்கு எவரும் நம்பவில்லை. அன்றுதொட்டு முற்றும் அசாத்தியமான உபாயம் முயற்சி ஏதாயினும் ஆவக்கும்பொழுதெல்லாம் அந்நாட்டார்க்குள் "ஓ ஆ, ஸ்ரீஜான் தர்ஸோவில் நித்தமும் தபாற்கட்டு வாங்காறும்பொழுது இதுவும் நடந்தேறும்" என்றொரு பழமொழி வழங்கலாயிற்று. ஆனால், ஸ்ரீஜான் மிகு வாஞ்சையால் ஒரு ஆதாரமுமின்றி எண்ணிய எண்ணம் அவர்காலத்திலேயே நிறைவேறியது; தினந்தபால் த்ரஸோவரையும் ஏற்பட்டது.

அவர் தேசோபகாரமாகச்செய்த தொழில்முயற்சி வரவர வெகுதூரம் எட்டியது. அத்தேசத்துவர்த்தகச் சரக்குகளில் முக்கியமாகிய பிரத்தானிய ஆட்டுரோமத்தின் நாணயம் மிகவும் குறைந்ததுகண்டு, அவர் பிரக்கியாதியற்ற சாமானிய நாட்டுத் துரைமகருயினும் அக்குறை தீர்க்கும்படி பிரதிக்கினைசெய்து முயன்றார். இக்காரியத்தின் பொருட்டுத் தமது சொந்தமுயற்சியால் அவர் பிரித்தானிய ஆட்டுரோம சங்கம் என்றொருசங்கம் ஸ்தாபித்துத் தமது கைச்செலவில் சர்வதேசங்களினின்றும் அ00 - செம்மறியாடுவரையில் வருவித்து, நால்வரும் இப்படிச்செய்து குறைதவிர்க்கும்படி தாமே வழிகாட்டினார். இம்முயற்சி தொடங்கியதனால் பெயர்

பெற்ற செவியத் ஜாதியாடு ஸ்கோத்திலாந்திற்சேர்ந்து விர்த்தியாகும்படிஆயிற்று. தென்னாட்டுமேர்தை வடநாட்டில் விர்த்தியாமென்று எண்ணுவது பைத்தியமென ஆடுவளர்த்து விற்றுப்பிழைப்பவர்கள் நகைத்தார்கள் ; அவர்கள் சொற்கேட்டு ஸ்ரீஜான் பின்வாங்கவில்லை, நினைந்த காரியத்தைத் தொடுபிடியாய்ச் செய்துகொண்டுவந்தார். ஐந்தாறு வருஷத்திற்குள் வடநாடு நான்கில்மாத்திரம் பெருகின செவியத் ஆடு குறையாமல் 3,00,000, ஆயின. ஆகவே, மேய்ச்சல் நிலத்திற்கெல்லாம் விலை மிகவும் ஏறியது. முன்பு எவரும் தேடாதிருந்த ஸ்கொத்திலாந்துதேசத்து நிலங்களுக்குக் குத்தகை விகிதம் பெருகியது.

கேத்நெஸ் பிரஜைகள் அவரைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிந்து பார்லிமெந்துக்கு அனுப்ப, அவர் தவறாமல் முப்பது வருஷம் அச்சபையில் நிலைபெயராதிருந்து சமயம் கிட்டும் பொழுதெல்லாம் தேசத்திற்குப் பலவாறு உதவிசெய்வித்தார். இதில் அவர் ஒருபொழுதும் அஜாக்கிரதையா யிருந்ததில்லை. தேசத்திற்கு அனுகூலமான முயற்சியினைத்திலும் அவர் ஊக்கம் தணியாதிருப்பதுகண்டு மெஸ்பித் என்பவர் டௌனிங் வீதிக்கு அவரை வரவழைத்து, அவர் கருதியிருக்கும் எந்தக் காரியத்திலும் தாம் உதவிபுரிவதாக வலிய மனம்பொருந்திச் சொன்னார். மற்றொருவரானால் அச்சமயத்தில் தம்மையும் தம அபிவிருத்தியையும்பற்றி எண்ணமிடுவார்; ஆனால் ஸ்ரீஜான் அப்படி நினைக்கவில்லை, "எனக்காக ஒருஉதவியும் செய்யவேண்டுவதில்லை. இத்தேசத்தில் கிருஷிசங்கம் ஒன்று ஸ்தாபிக்க உதவிபுரிவீர்களானால் அதே என்இதயத்திற்கு மிகவும் இதமான வெகுமானம்" என அவர்தமது பிரகிருதிப்படி மறுமொழி பகர்ந்தார். அந்த பரன்பிரபுநினைந்த கருமம் நிலைபெறாதென்று ஆர்தர் யங் (Arthur young) அவருடன் பந்தயம் பிடித்து, "தாம் அபிமானித்திருக்கும் கிருஷிசபை சந்திரமண்டலத்தில் உண்டு!" எனமொழிந்தார். ஆனால் ஸ்ரீஜான் உற்சாகத்தோ டுழைக்கத் தொடங்கி, ஊராருக்கு அச்செய்கையில்

அவதானம் உண்டாக்கி, பார்லிமெந்தாரிற் பெரும்பாலாரைத் தமது பக்ஷத்திற் சேர்த்துக்கொண்டு, இறுதியில் அச்சங்கத்தை ஸ்தாபித்துத் தாமே அதற்கு அக்கிராசனாதிபதியாக நியதிபெற்றார். அதன்காரிய சித்தியை இங்கு விவரிக்க நிமித்தம் இல்லை; ஆனால் கிருஷித்தொழிலுக்கும் ஆடுமாடு விர்த்திசெய்யுமுயற்சிக்கும் அதனாற்பிறந்த ஊக்கம் ஐக்கிய ராச்சியமெங்கும் விரைவில் தோன்றியது. காடுகரம்பாய்ப் பயனற்றிருந்த நிலம் பதினாயிரமிருபதினாயிரம் ஏக்கர் அச்சங்கத்தின் சட்டதிட்டப் பிரயோகத்தால் திருந்திப் பயிர்நிலமாயிற்று. இதுவுமன்றி, மீன்பிடிக்கும் தொழிலையும் அங்கங்கே ஸ்தாபிக்க முயற்சிகொளுத்துவதிலும் அவருக்கு இத்தனை இளைப்பறாத ஊக்கம் இருந்தது. தர்ஸோவிலும் உவிகிலும் இந்தப் பிரித்தானியதொழில் முயற்சிக் கிளைகள் காரியச் சிதைவின்றி ஸ்தாபிக்கப்பட்டது முக்கியமாய் அவர் முயற்சியாலேயே. அவர் வெகுவருஷகாலம் வருந்திக்கேட்டு இறுதியில் உவிக் எனும் இடத்திற்கு அனுகூலமாம்படி ஒரு கடல்துறையைப் பெற்றுக்கொண்டார். இப்போது அது இவ்வுலகில் மீன்பிடிக்கும் துறையடுத்த நகரங்களிற் பெரிதும் செல்வம் மிக்கதுமான சிறந்தநகரமாயிருக்கின்றது.

ஸ்ரீ ஜான் தாம்செய்யும் கருமம் அனைத்திலும் தம்மனவலிமையைச் செலுத்துவார், மந்தமாயிருப்பவர்களைத் தட்டி எழுப்புவார், சோம்பரைத் தூண்டுவார், ஆசையுள்ளவர்களுக்குத் தைரியம் சொல்வார், யாவரோடும் உழைப்பார். பிரான்சு ரணவீரர் இங்கிலாந்தில் தாவடிபோக இருக்கையில், அவர் தமது சொந்தநிலத்தில் ஒருபட்டாளம் சேர்த்துக்கொள்வதாக மெஸ்பித்துக்குச் சொல்லிச் சொற்படி தவறாமற் செய்தார். அவர் வடக்கே போய் அறுநூறு பெயரை ஒரு பட்டாளமாகச் சேர்த்தார். பின்னிட்டும் சேவகர் சேர்ந்து ஆயிரம்பெயர்வரையும் தொகைபெருகியது; அவர் அவர்கள் அத்தனை பெயருக்கும் தமது உதார மதியையும் தேசாபிமான சிந்தையையும் புகட்டியதனால், தாம்சேர்த்த பட்

டாளம் அனைத்திலும் அதுவே சிறந்தபட்டாளமென்று யாவரும் ஏகோபித்து ஒப்புக் கொண்டனர். அவர் அயர்லண்டு பட்டாளவகுப்பின் அதிகாரியாயிருக்கையில், அவர் நிர்வகித்துக்கொண்டு வந்த உத்தியோகம் ஏழு:—அவை, ஸ்கொத்லாந்து நாணயவர்த்தகசாலை அதிகாரி, பிரித்தானிய ஆட்டுரோம சங்கத்தலைவர், உவிக்கராதிகாரி, பிரித்தானிய மீன்பிடிதொழில் விர்த்திசங்கத் தலைவர், அரசிறைப் பொக்கஷச் சாலையுண்டி கொடுக்கும் கமிஷனர், பார்லிமெந்தில் கேத்நெஸ்மாகாணப் பிரதிநிதி, கிருஷிசங்கத்தலைவர் இவைகளாம். இந்தப் பற்பலவேலைகளைத்தாமே வலியத் தந்தலைமேற் சுமந்துவரும்பொழுதும் அவர் சமயம் கண்டு, கீர்த்தி நாட்டத்தக்க திறமையான கிரந்தங்களும் எழுதினார். அமெரிக்கன்தானாதிபதியாகிய மெஸ். ரஷ் (Mr. Rush) இங்கிலாந்தில் இறங்கியபொழுது அவர் ஹொல்காமி லிருக்கும் மெஸ். கோக் (Mr. Coke) என்பவரைக் கிருஷிசாஸ்திரத்தைப்பற்றியுள்ள கிரந்தங்களிற் சிறந்த கிரந்தம் யாதென்று கேட்க, இவர் ஸ்ரீஜான் ஸிங்க்லெயர் இயற்றிய கிரந்தத்தை எடுத்துரைத்தாராம். மேலும் மேற்படி ஸ்தானாதிபதி அரசிறைக் கணக்கதிகாரியாகிய மெஸ். வான்ஸிற்றார்ட்டு (Mr. Vansittart) பார்த்து, பிரித்தானிய அரசிறைவிளக்கப் புஸ்தகங்களில் உத்தமமானது ஏதென்று கேட்க, அவரும் ஸ்ரீஜான்ஸிங்க்லெயர் இயற்றிய "தேசஅரசிறைச் சரித்திரம்" எனும் கிரந்தத்தைக் குறிப்பித்தார். ஆனால், இதரமனிதருக்கு நினைக்க மனதைத்திகைப்புறுவித்து அவருக்குமாத்திரம் மனோற்சாகத்தை எழுப்பிவிட்டு நிலைநிறுத்திய அவருடைய இளைக்கா முயற்சிக்கு மகத்தான ஞாபகமுத்திரை யாதெனில், அவர்கணக்குவரையறையோடு எழுதிய ஸ்கொத்லாந்து வரலாறு என்பது. அது இருபத்தொரு பெரியபுஸ்தகங்களாகப் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றது; எக்காலதேசங்களிலும் உலகவியவகாரங்களுக்கு மிகவும் அனுகூலமாய்ப் பிரசுரமான சிறந்தபுஸ்தகங்களுள் அதுவும் ஒன்றாம்.

மற்றனேகவேலைகளோடுங்கூட அவர் அவ்வேலையை வருந்தியுழைத்து முடிக்கக் கிட்டத்தட்ட எட்டுவருஷம்சென்றது. அக்காலவரையில் அவ்விஷயத்தைப்பற்றி அவர் வரப்பெற்று நிர்வகித்த கடிதம் இருபதினாயிரத்திற்கு அதிகம். அதுமுற்றும் தேசாபிமானத்துக்காகவே செய்தமுயற்சியாம். அதைக்கையிட்டு நிறைவேற்றிய கௌரவம் ஒன்றுதவிர அதனால் அவருக்கு லாபம் ஒன்றுமில்லை. அதுவிற்றுத்தேறின லாப முழுதையும் அவர் ஸ்கொத்லாந்தில் குருபுத்திரர்க்காக ஏற்பட்டிருந்த சங்கத்திற்கு எழுதிக்கொடுத்தார். அப்புஸ்தகம் பிரசுரமானதனால் தேசத்தில் முக்கியமான திருத்தங்கள் உண்டாயின. அதுபிரசுரமாகவும், அதிற் குறிப்பித்திருந்தபடி கொடுமையான உம்பிளிக்கை யுரிமைகள் நிலைதள்ளிவிடப்பட்டன. பலகோவில் பற்றுகளில் உபாத்தியாயர்கள் குருக்கள் சம்பளம் விருத்திசெய்யப்பட்டது; ஸ்கொத்லாந்திலெங்கும் கிருஷித்தொழிற்குப் பின்னும் அதிகநோக்கம் பிறந்தது. பிற்பாடு ஸ்ரீஜான் கணக்குவரையறையோடு இங்கிலாந்தைப்பற்றி இவ்வகைவரலாற்றைத்தேடி விசாரித்தெழுதிப் பிரசித்தப்படுத்த உத்தரவுகேட்டார். இதுமேற்குறித்த முயற்சியிலும் மிகுகடினம். ஆனால் குருக்களுடைய வரிக்கு இதனால் தடைஉண்டாமென்று அக்காலத்துக் கந்தர்புரி மகாவத்தியக்ஷர் அதற்கு அனுமதிகொடுக்க உடன்படவில்லை. அதனால் அம்மட்டில் அந்த அபிப்பிராயம் நிறுத்திவிடப்பட்டது.

பெரியஜூபத்துநேர்ந்த சமயத்தில்நெசவுமுதலிய கைத்தொழில்செய்து பிழைக்கும் நாட்டகத்தாருக்கு உதவ அவர் ஏற்பாடுசெய்தவகையானது, மனவலிமையோடுகூடிய அவர்நிவிரயுத்திக்குக்குறிக்கொள்ளத்தக்க திர்ஷ்டாந்தமாம். 1793-ம் வருஷம் சண்டையினிமித்தம் நெசவுத்தொழில் தடங்கலாய்ப்போனதுபற்றி வர்த்தகர் வெகுபெயர் கடனிறுக்க அசக்தராயினர். மான்செஸ்தரிலும் க்லாஸ்கோவிலுமுள்ள முதன்மையான வர்த்தகசாலைகள் அனேகம் முக்கியமாய்ச்சொத்துக்குறையாலல்ல, வர்த்தகத்திற்கும் நாணயத்திற்கும் வா

லாயமாயுள்ள ஊற்றுக்கண் அக்காலத்தில் அடைந்துபோனதனால் நிலையற்றுத்தள்ளாடின. பாடுபட்டுப் பிழைக்கும் சாமானிய ஜனங்களுக்கு மிக்க உபத்திரவகாலம் அடுத்திருந்தது. அச்சமயத்தில் பிணைகொடுக்கத்தக்க வர்த்தகருக்கு ஐம்பது லக்ஷம் பௌன்ட் வரையும் சர்க்கார்நோட்டு தாமசமின்றிக் கடன்கொடுத்துதவவேண்டுமென்று ஸ்ரீஜான் பார்லிமெந்தில் தூண்டினர். அவர்சொல் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது. தாம்சொல்லிய உபாயத்தைத்தம்மாற்குறிக்கப்படும் சபையார் சிலருடன்சேர்ந்து தாமேநிறைவேற்றுவதாக அவர்கேட்டகேள்விக்கும் சபையின் அனுமதிபிறந்தது. அவ்வனுமதி பிறந்தது இராத்திரி நாழிகை ஏறியபின். மறுநாள் அதிகாலையில் ஸ்ரீஜான் உத்தியோகஸ்தராலும் எதிர்ப்பக்ஷத்தாராலும் ஆலசியமுண்டாமென்றெண்ணி, நகரத்திலுள்ள நாணயவர்த்தகரிடத்திற்குச் சென்று தாமே பிணைகொடுத்து 70,000-பௌன்ட்கடன்வாங்கிச் சகாயம் மிகவும் வேண்டுமென்றிருந்த வர்த்தகருக்கு அன்று சாயங்காலமே அனுப்பினர். ஸ்ரீஜானே பித் (Pitt) சபையிற்கண்டு, மான்செஸ்தரிலும் க்லாஸ்கோவிலும் நேர்ந்த நீராக்குறைபாட்டை மனம்போல விரைந்து தவிர்ப்பது கஷ்டமென்று தம்மனம் மிகத்துன்புறுவதாகவும், வேண்டும் நிதிசேர்க்கச் சிலதினம் செல்லும்என்பதாகவும் சொல்ல, "அதுபோய்விட்டது! இந்த இராத்தபாலில் அது லந்தனைவிட்டுப் புறப்பட்டது!" என ஸ்ரீஜான் எக்களிப்போடு உத்தரம் மொழிந்தார். இக்கதையைப்பின் ஒருசமயத்தில் எவர்க்கோ எடுத்துச்சொல்லியபொழுது, "என்வாய்ப்பிறப்புக்கேட்டு, பித் என்பவர் கத்தியாற் குத்துண்டவர்போலத் திடுக்கிட்டார்" என்றுஅவர் மனக்களிப்பால் முறுவலித்து மொழிந்தார். இம்மகத்தான புண்ணியபுருஷர் முடிவுபரியந்தம் பரோபகாரத்துக்காகவே குளிர்ந்தமனதோடுழைத்துத் தங்குடும்பத்தார்க்கும் தேசத்தார்க்கும் மகத்தான சிதர்சனத்தை காட்டினர். இவ்வாறு வருந்தியுழைத்துப் பிறர்நலத்தை நாடியதனல் அவர் நலமும்

அமைந்ததென்று சொல்லலாகும். அவர் நலமெனக்குறித்தது திரவியத்தையல்ல, உதாரபுருஷர்ானமையால் அவர் திரவியம் வெகுவாயிறைந்து சிதைவுற்றது. பின் நலமென்றது யாதையெனின், மனதின்சுகத்தையும், நம்மட்டில் குறையில்லையெனும் திர்ப்தியையும், அறிவிற்கு எட்டாத சித்தசமாதானத்தையுமேயாம். மகாதேசாபிமானியும் பலவகை அருந்தொழில வல்லோருமானதுபற்றி, அவர் தந்தேசத்தார்க்குரிய செய்கடன்களை உதாரமதியோடு செய்தார். இதன்பொருட்டு அவர் தங்குடும்பத்தார்க்கும் கிரகத்திற்கும் உரிய தர்மங்களை அஜாக்கிரதையாய்விட்டுவிடவில்லை. அவர்புத்திரர் புத்திரிகள் வளரவளர சுவுரவமுள்ளவர்களும் தேசோபகாரிகளுமானார்கள்; ஸ்ரீஜானுக்கு எண்பதாவது வயசு ஆகித்திருக்கையில் அவர், ஏழுபுத்திரர் பிறந்து வளர்ந்து ஆடவரானதுகானை இடம்பெற்றேன், அவர்களில் ஒருவனும் தன்னியல்பிற்கு மிஞ்சக் கடன்பட்டதுமில்லை, நிர்ப்பந்தமாய் எனக்குக் கிலேசம் உண்டாக்கியதுமில்லை என்று இதைத் தமது மேம்பாடுகளிலொன்றாயெடுத்துச் சொல்வார்.

அதிகாரம் - கரு.

யோக்கியதை—உண்மைநெறிதவறாத உத்தமன்.

"தன்னிடத்தில் விளங்கிய சாத்விகமனைத்திலும் குறையாமல் பின்னும் ஆயிரம் மடங்கு அதிகம் உண்டென நெஞ்சாரநினைவார அறிந்திருப்பவனும், ஒழுக்கமும் உள்ளமும் ஒத்திருப்பவனும், நால்வருடன் கலந்துறவாடும்பொழுது செய்யும் உபசாரமனைத்தோடுங்கூட உதாரமதியுள்ள சிந்தையில்முளைத்தெழுந்த செடியிற் பூத்தமலர்போலும் சிறந்தநல்லொழுக்கம் இணைந்திருக்கப் பெறுவோனும், சாதுஎனும் மகத்தான பூர்வநாமத்தை ஏசுவாரின்றித் தரித்துக்கொள்வோ

னுமாகிய இவர்களைத்தவிர எப்பொழுதும் செய்கையில் வல்லவர்யாவர்?" என்று தென்னிஸன் (Tennyson) சொல்லுகிறார்.

"புத்திவைபவத்திற்கு உரு அமைவது அந்தரங்கத்தில், நல்லொழுக்கத்திற்கு உரு அமைவதோ பிரபஞ்சமாகிய போர்க்களத்தில்" என கீதி (Goethe) சொல்லுகிறார்.

"ஒருதேசத்தை உயர்த்துவதும், ஒருதேசத்தைப் பலப்படுத்துவதும், ஒருதேசத்திற்கு மகத்துவம் உண்டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச்செல்வாக்கு உண்டாகப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படி செய்வதும், இலக்ஷாதிலக்ஷம் பெயருடைய இதயத்தை வணக்கி அதற்குமுன் இதரதேசத்தார்கள் கருவம் அடங்கித் தலைவணங்கும்படி செய்வதும், இப்படியச்செய்வதற்கு ஏற்றக்கருவியும் மேன்மை பெறுவதற்கு மூலாதாரமுமாயிருப்பதும், ஒருதேசத்தார்க்கு மெய்யான சிங்காதனம், கிரீடம், செங்கோல் ஆகிய இவைகளை விளைவிப்பதும், ஒருவருடைய குலப்பெருமையுமல்ல; நாகரிகப் பெருமையுமல்ல; புத்திவிவேகங்களின் திறமை மாத்திரமுமல்ல, பின்னென்னவெனில், நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையே யாம், இதுவே மனிதருக்கு மெய்யானகுலவிருதுவித்தையாம்"—என தைம்ஸ் (The Times.) பத்திரிகையிற் கண்டிருக்கின்றது.

இவ்வுலகில் மன்னுயிர்களுக்கு மகுடமும் மகிமையும் அவரவர்களுடைய யோக்கியதையேயாம். மனிதர்களுக்கு எல்லாப் பேறுகளிலும் நற்குணமே பெரும்பேறாம். அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தும் இதுவே, அனைவரும் உள்ளமுவந்து அங்கீகரிக்கத்தக்க ஆஸ்தியுமிதுவே. யோக்கியதை எந்தெந்த நிலைமைக்கும் பெருமையுண்டாக்கும்; எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும்; சற்குணம் செல்வத்திலும் அதிக செல்வாக்குள்ளது. பிரசித்திபெற வேண்டுமென்கிற பேரா

வலில்லாமலே பலவிதமான புகழையும் உண்டாக்கும். சற்குணமுண்டானால் அதனோடு சகலவிதமான செல்வாக்குமுண்டாகும். எப்படியெனின், யோக்கியதை, உண்மை, மாறுபடாத மனவுறுதியாகிய இந்நற்குணங்களே செல்வாக்கையுண்டாக்குகின்றவை. மனிதர்களுக்கு இந்நற்குணங்களுள்ளவரிடத்தி லுண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் மற்றெந்தக் குணமுள்ளவரிடத்திலும் உண்டாவதில்லை.

யோக்கியதை யென்பது மனிதருடைய நல்ல சுபாவத்திற்கு அடையாளமாம். அது வடிவெடுத்துவந்த நீதிநெறியேயன்றி வேறல்ல. நற்குணமுள்ளவர்கள், மற்றெல்லோரும் தத்தமிருதயம்போலவே நம்புவதற் கிடமாயிருப்பது மாத்திரமேயன்றி, செம்மையாய் அரசாளப்படும் இராசாங்கமனைத்திலும் உபயோகமான காரியமனைத்தையும் நடத்துவதற்குச் சிறந்த முதற்காரணமாகிறார்கள். ஏனெனில், முக்கியமாய் இவ்வுலகத்தையாள்வன நீதிநெறிகளேயன்றி வேறல்ல. யுத்தபூமியிலும் நீதிபலத்தால் எவ்வளவு காரியம் சாதிக்கலாமோ அதில் பத்திலொருபங்குதான் தேகபலத்தால் சாதிக்கமாகுமென நெப்போலியன் மொழிந்தார். ஒரு தேசத்தின் பலம், தொழில், முயற்சி, நாகரீகம் இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்கங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே. தேசரக்ஷணைத்திற்கு மூலாதாரமும் இதுவே. சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் இதினின்று உற்பத்தியானவையே. கடவுளுடைய கோணாத கருணையால் இந்தப் பிரபஞ்சத்தில் சகல தேச சாதிமதஸ்தர்களுக்கும் அவரவர் நடத்தைக்கு ஏற்றவண்ணம் இன்பதுன்பங்கள் அமையுமேயன்றி மற்றப்படி அமையா. ஒருகாரியமுண்டானால் அதற்குக் காரணமுண்டென்பது எப்படி நிச்சயமோ அப்படியே அவரவருடைய நடத்தையும் அதததற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

ஒருவன் மற்றவர்களைப்போல் அறிவில் பண்படாதவனும், அற்பசாமர்த்திய முள்ளவனும், தனஞ்சிறியனுமா யிருப்பினும், அவன்நடத்தைமட்டும் மாற்றுயர்ந்திருக்குமானால், தொ

ழிற்சாலையோ, கணக்குச்சாலையோ, வர்த்தகசாலையோ, மந்தி ராலோசனைச்சபையோ எவ்விடத்திலாயினும் அவனுக்குச் செல்வாக்கு அதிகமாகும். கஅ௦க-வருடத்தில் கானிங்பிரபு மிகத்தேர்ந்து ஒன்று எழுதியிருக்கிறார். அதாவது, நான் நன்னடக்கையின் வழியாகச்சென்று ஆட்சிபெற வேண்டும்; அது தவிர வேறொரு வழியில் நடக்க முயலவுமாட்டேன்; ஒருவேளை இது மெதுவான மார்க்கமா யிருப்பினும் குறித்த விடத்தில் தவறாது கொண்டுசேர்க்கு மென்பது நிச்சயமென்றார். அறிவுமிகுந்தவர்களைக் கண்டு வியப்படையலா மென்றாலும், மற்றொரு விசேஷகுண மிருந்தாலன்றி அவர்களிடத்தில் நம்பிக்கைகொள்ளலாகாது. ஆனதுபற்றியே இங்கிலாந்து தேசத்தாரெவரும், புத்திமான்களுடைய யுக்தி ஆலோசனைகளை மட்டும் கேட்டு, நன்னடக்கை யுள்ளவர்கள் சொல்லுகிறபடி நடக்கும் இயற்கை யுடையவர்களென்னும் நீதிநிறைந்த இச்சிறுவாக்கியத்தை ஜான் ரஸ்லெலென்பவர் ஒரு சமயத்தில் உதாகரித்தார். இவ்வாக்கியத்தின் கருத்து காலஞ்சென்ற பிரான்ஸிஸ் ஹார்னர் என்பவருடைய சரித்திரத்தில் வெகு நன்றாய்த் தெளிவாகும். எப்போதுபார்த்தாலும் அவர் முகத்தில் பத்துக்கற்பனைகள் முத்திரையிட்டவைபோலக் காணப்படுமென வஸிட்னி ஸ்மித்து அவருடைய பெருமையை எடுத்துக்காட்டி யிருக்கிறார். அவரைப்பற்றி காக்பரன் பிரபு அடியில் வருமாறு சொல்லி யிருக்கிறார். அதாவது:—"யோக்கியர்களெல்லாங் கேட்டு விசேஷமாய் வியக்கத்தக்கதாய் அவர் சரித்திரத்தில் மேன்மைபெற்ற விசேஷ மென்னவெனில், அவர் முப்பத்தெட்டாம் வயதிலேயே இறந்துபோனாரென்றாலும், அவ்வளவு காலத்திலேயே பிரசித்த ஸ்தலங்களி லெல்லாம் அவருக்குவிசேஷமாய்ச் செல்வாக்கு உண்டாயிருந்தது. புத்தி விவேகமில்லாத நீசர்தவிர மற்றெல்லோரும் அவரை நன்குமதித்து நம்பி நேசித்து அன்புகூர்ந்து அவர் இறந்ததற்காகக் கண்ணீர்விட்டுக் கதறினார்கள். பார்லிமெந்து சபையாரில் இறந்தவர்களில் இவரினும்மிக்க வழிபாடு பெற்றவர் ஒருவருமில்லை."

"இவ்வளவு உயர்வான பதவி அவருக்கு எப்படி அமைந்ததென்று வாலிபர்களெல்லாம் வினவுவார்கள். உயர்குலப் பெருமையா லமைந்ததா? இல்லை, அவர் எடின்பர்க்கு வியாபாரி ஒருவனுடைய மகன். அல்லது செல்வத்தாலா? அவராகிலும், அவருடைய சுற்றத்தாராகிலும், கால்ரூபாயாவது மிகுந்து கையில்வைத்துக்கொண் டிருந்தது ஒருபோது மில்லை. உத்தியோகப்பெருமையாலா? அவர் வகித்த உத்தியோகமொன்றேயொன்று, அதுவுஞ் சிலவருஷகாலந்தான்; அந்த உத்தியோகத்தில் அதிகாரமும் ஒன்றுங்கிடையாது; சம்பளமும் சொற்பம். யுக்தி புத்தி சாமர்த்தியங்களாலா? அப்படியும் அவர் பிரசித்தரன்று; அவருக்குப் புத்தி வல்லமை அவ்வளவாய் விசேஷமில்லை; சாக்கிரதையும் மெதுவும் தவறாதிருக்க வேண்டுமென்கிற நோக்கமுமாத்திரமே யிருந்தன. வாசாலகத் திறமையாலா? அவர் அடக்கமும் மரியாதையுமாய்ப் பேசுகிறவரேயன்றிக் கேட்போரைப் பயமுறுத்தி வசீகரிக்கும்படியான நாவன்மை யுடையவரன்று. பிறரைப் பகட்டும்படியான வேஷத்தாலா? அவர் உள்ளபடி உள்ளும் புறமும் ஒத்து நடப்பவரேயன்றி வேஷம்போடுகிறவரன்று. ஆயின் பின்னெந்தப் பெருமையாலே அவர்க்கு அம்மேன்மை கிடைத்ததென்பீர்களோ? நல்ல இருதய பரிபாகமுள்ளவர் அனைவருக்கும் அவசியம் அமையத்தக்கதான விவேகம், உழைப்பு, நன்னெறி, ஒழுக்கம், ஈவு இரக்கம் முதலிய நற்குணங்களாலேதான். முக்கியமாய் அவரைச் சிறப்பித்தது அவருடைய நற்குணத்தின் வலிமையே. அந்த நற்குணமும் அவர்க்குச் சுபாவத்திலே கிடைத்ததன்று; அற்பமானசில கருவிகளைக்கொண்டு அவர் தாமே அமைத்துக்கொண்டது. ஹௌஸ் அவ் காமன்ஸ் என்னும் ஜனப்பிரதிநிதி சபையில் அதிகசாமார்த்தியமும் சாதுரியமும் நன்றாய்ப்பேசுந்திறமையுமுள்ள வல்லவர்கள் அநேகர் இருந்தனராயினும், நீதிநெறிமுதலிய நற்குணங்களையும் அவற்றோடு சேர்த்துப்பார்க்கையில் இவரினும் மிக்கோர் ஒருவருமில்லையென்னலாம்.

கல்வி குணநலம்இவற்றின் உதவிமட்டு மிருக்குமானுல் எவ்வளவு அற்பசாமர்த்தியமாயினும் மற்றெந்தப் பொருளின் உதவியும் சிறுதுமில்லாமலே, உலகவியாபார விஷயத்தில் எவ்வளவு போட்டிகளும் பொருமைகளுமிருந்தாலும் அவற்றின் நடுவில்தாமேமேலேவிட்டு எவ்வகை அருந்தொழிலும் செய்ய மாட்டு மென்பதை அனைவர்க்கும் திருஷ்டாந்தப் படுத்திக் காட்டவேஹாரன்னர் இவ்வுலகில் வந்து பிறந்தவரென்னலாம்." என்றுசொல்லி யிருக்கிருர்.

ப்ராங்க்லின் (Franklin) என்பவரும் உலகத்தில் தாம் சித்திபெற்றது தம்முடைய சொற்ப சாமர்த்தியங்களாலும் நாவன்மையாலு மல்ல, உலகறியப்பெற்ற யோக்கியதையினுல் எனமொழிந்தார். ஆனதுபற்றியே அவர் "என்னூரார்மதிப்பில் எனக்கு இத்தனைபெருமை உண்டாயிற்று. எனக்குத் தாஷ்டிகமாய்ப் பேசத்தெரியாது, ஒருபொழுதும் வாக்கு சாதுரியம் இல்லை, வினாவிற்சொல்நலம் தெரிந்து பேசஅறியேன், வாக்கியங்கள் பெரும்பாலும் வழுவற அமைகிறதில்லை; ஆனுலும், நான் எடுத்துப்பேசிய காரியங்கள் பெரும்பாலும் கடைத்தேறின" என்றுரைத்தார். பதவிஉயர்ந்திருப்பினும் தாழ்ந்திருப்பினும் யோக்கியதையுடையோர்க்கு மதிப்பு உண்டாம். ருஷியாவின் ஆதிசக்கரவர்த்தியாகிய அலெக்ஸாந்தர் (Alexander) என்பவருடைய யோக்கியதை தேசச்சட்டத்திற்குச் சமமென்று அக்காலத்தார் சொல்வார். ப்ரான்டிசண்டைகள் நடந்தேறும் காலத்தில் மாளிகைத் தோட்டக்கதவுகளைத் தாளிட்டடைக்காதிருந்த பிரான்சிய துரைமகன் மொந்தேக் ஒருவர்மாத்திரமே ; ஒரு குதிரைப்பட்டாளத்தினும் அவர் யோக்கியதையே அவருக்கு உத்தமஅரணென்று சொல்லியிருக்கின்றது.

அறிவே பலமென்பார் சிலர்; ஆசாரமே பலமென்பார்சிலர். இவ்விரண்டினுள்ளும் இரண்டாவதிலேயே உண்மை அதிகமிருக்கிறதென்னவேண்டும். இருதயமில்லாத மனமும், ஆசாரமில்லாத அறிவும், சுகுணமில்லாத சாமார்த்தியமும் ஆகிய

இவையெல்லாம் தத்தம் வழியில் வலிமையுள்ளவைகளேயாயினும், அவற்றின் வலிமை விசேஷமாய்த் தீமைவிளைவிப்பதற்குமட்டும் பலமாகுமேயொழிய மற்றப்படியாகா. அவை நமக்கு அறிவுபுகட்டினாலும் புகட்டும், வினோதமாகப் பொழுதுபோக்காயிருந்தாலு மிருக்கும். ஆயினும் முடிச்சுமாறியின் கைத்திறமும் வழிகொள்ளைக்காரனுடைய குதிரையேற்ற நலமும் எவ்வளவு வியக்கத்தக்கவையோ அவ்வளவே சிலவேளை வியக்கத்தக்கவையாகும்.

ஒருவனுடைய வாய்மொழியையும் ஆதாரமாய்க்கொண்டு தொங்காத உண்மை, மனநிறை, நன்மையாகிய இவைகளே ஒருவனுடைய குணங்களில் மிகவும் முக்கியமானவைகளாம். அல்லது பூர்வ கிரந்த கர்த்தா ஒருவர் மொழிந்தபடி, சுகிர்தத்திற்குக் கைமாறின்றித் தொழும்புசெய்யத்தக்க உள்ளத்திற் பிறந்த ராஜவிசுவாசமாம். இக்குணங்களோடு ஒருவனுக்கு மனவுறுதியுமிருக்குமானால், அவனுடைய வல்லமைக்குத்தடையொன்றுமில்லை. அவன் நன்மைசெய்வதற்கும் சலிக்கமாட்டான்; தீமைகளை வெல்லவும் பின்வாங்கமாட்டான்; வருத்தங்களையும் கஷ்டவிஷயங்களையும் உத்தரிக்கவும் வல்லவனாகிறான். கொலோனாவில் வசிக்கும் ஸ்தோவானைப் புல்லர் மேல்விழுந்தமர்த்தி, இப்பொழுது உன் அரணெங்கேயென்று கேலியாய்க் கேட்டபொழுது, அவன் தன் இருதயத்தில் கைவைத்து, இங்கேயென்று அச்சமின்றி உத்தரம் உரைத்தான். மனநிலைமாறாத நெறியோனுடைய நற்குணம் நன்றாகப் பிரகாசிப்பது அவனுடைய கஷ்டகாலத்திலேதான். மற்றவையெல்லாம் துணையில்லாது தவறிப்போக, மனநிறையும் ஆண்மையுமே அப்போது அவனுக்குமுக்கியாதாரமாகின்றன.

சுத்ததத்துவ சுதந்தரரும், பழிக்கஞ்சி வழிநிற்கும் ஸத்தியானுசாரியுமாகிய எர்ஸ்கின் பிரபு அனுசரித்த ஆசாரக்கிரமங்கள் ஒவ்வொரு வாலிபரும் தம் இருதயத்தில் உறுதியா

யப் பதியவைத்துக்கொள்ளத்தக்கவைகள். அவர் சொல்லி யதாவது:—தருமமென்று என் நெஞ்சு சொல்வதை எப்பொழுதும் செய்வதும், பின்பு அதனால் விளையும் பயனைக் கடவுள் திருவுள்ளத்தின் செயலென்று எண்ணிக்கொள்வதும் இளமையிலேயே நான் கைக்கொண்ட முதற்கற்பனையும் புத்தியுமாம். பெற்றோர் கற்பித்த இப்பாடத்தின் ஞாபகமும் சாதனையும் இடுகாடுவரைக்கும் என்னுடனே வரும். இன்றளவும் அதை அனுசரித்துக்கொண்டு வந்தேன். அதைக் கைக்கொண்டு எப்பொழுதேனும் எனக்கு நஷ்டம்வந்ததென்று குறைகூற நிமித்தமொன்றுமில்லை. அதற்கு மாறாகச்செல்வமும் சாம்பிராச்சியமும் பெறுவதற்குரிய வழி அதுவேயென்று கண்டேன். நீங்கள் அனுசரிக்கவேண்டிய வழியும் இவ்வழியேயென்று என் பிள்ளைகளுக்கும் காட்டுவேனென்றார்.

நன்னடக்கையுடைமையே இவ்வுலகில் உயர்ந்த பேறென்று ஒவ்வொரு மனிதனும் அதை நாடுவது கடன். தகுந்த சாதனங்களால் அதைப் பத்திரமாய்க் கைக்கொள்ளச்செய்யும் யத்தனமே அவனுக்கு முயற்சிசெய்ய முகாந்தரத்தைக் காட்டும். ஆண்மையைப்பற்றி அவனுக்குள்ள அபிப்பிராயம் உயரஉயர, அம்முகாந்தரமும் நிலைபெற்றுத் திடமுறும். உயர்ந்த ஒழுக்கத்தின் அளவை உள்ளபடி உணர நாம் வல்லவரல்லாதிருப்பினும், அதைக்கைக்கொள்வது நல்லது. இதைச் சுட்டி மெஸ். டிஸ்ரெலி சொல்லியதாவது:—"மேல்நோக்கமில்லாத வாலிபன் கீழ்நோக்குவான். உயரப்பறக்காத ஜந்துதவழும் அமைப்புள்ளதுபோலும்" என்றார். "பணிந்தநடையும் உயர்ந்தநோக்கமும் உள்ளவனாயிரு; இருந்தால் உனக்குத் தாழ்மையும் மேன்மையுமுண்டாம். அதுகண்டு மனவலி குலையவேண்டாம். ஆகாயத்தை இலக்காய்க் குறிப்பவன் எய்யும் அம்பு, மரத்தை இலக்காய்க் குறிப்பவன் எய்யும் அம்பைப்பார்க்கிலும் மிகவும் உயரப் பறக்கும்" என்று ஜார்ஜ் ஹெர்பர்ட்டு தெளிந்து உரைத்திருக்கிறார்.

உயர்ந்த பதவியை அனுசரித்தொழுகும் ஒழுக்கமும் எண்ணமுமுள்ளவன் அப்படிப்பட்ட எண்ணம் சிறிதும் இல்லாதவனைப்பார்க்கிலும் மிகுமேன்மை பெறுவானென்பதற்கு ஐயமில்லை. பொன் னங்கியைப்பற்றியிழு, அதன் கையுறுப்பாயினும் அகப்படும்" என்று ஒரு பழமொழி ஸ்கொத்லாந்தில் வழங்குவதுண்டு. மிகஉயர்ந்த சித்திபெற எத்தனிக்கும் எவனும் தான் ஆதியில்நின்ற நிலைக்கு வெகுதூரம் உயர்ந்த நிலைஅடையாமற் போகான்; ஒருவன்பெற்ற பதவியானது தான் பெறநினைத்து முயன்ற பதவிக்கு மிகவும் இளைத்திருப்பினும், உயர்ந்தோங்க வேண்டுமெனச்செய்த எத்தனம் தன்னளவில் எப்போதும் பயன்படாதிராது.

கள்ளக்குணங்கள் அனேகம் உண்டு, ஆயினும் மெய்க்குணம் மயக்கமறத் தோன்றியிருப்பது அரிது. அது விலையுயர்ந்ததென்றறிந்து சிலர் சாவதானமில்லாதவர்களை ஏமாற்றும் பொருட்டுப் பொய்வேஷம் கொள்வார்கள். நேர்மையுள்ளவனென்று குறிக்கொள்ளப்பட்ட ஒருவனைப் பார்த்து கர்னல் சார்ட்டரிஸ் (Colonel Charteris) "உனது நற்பெயருக்குப் பதினாயிரம் ரூபாய் கிரயங்கட்டித் தருவேன்" என்றுசொல்ல, அந்தக்கள்ளன் பதினாயிரம் ரூபாய்தானா? அதைவைத்துப் பத்துலக்ஷம் ரூபாய் சம்பாதிப்பேனே" என்று உத்தரம் சொன்னான்.

சொல்லிலும் செயலிலும் நிறைவுடைமையே யோக்கியதைக்கு முதுகெலும்பு; பக்திபூர்வமாய் வாய்மையைச்சார்ந்தொழுகும் ஒழுக்கம் அதன் முக்கியலக்ஷணமாம். காலஞ்சென்ற ஸ்ரீராபர்ட்பீல் என்பவருடைய யோக்கியதையைப் பற்றியுள்ள சாட்சிகளிற்சிறந்த சாட்சியாவது அந்த மகத்துவம் மிக்கஅமைச்சர் இறந்து சிலதினம் சென்றபிறகு உவெலிங்தன்டியூக் பட்டவர்த்தனர் பிரபுக்கள் சபையிற் பகர்ந்ததேயாம். அதாவது:— "பிரபுக்களே, காலஞ்சென்ற ஸ்ரீ ராபர்ட்பீலுடைய உயர்வுபெற்ற கௌரவமான ஒழுக்கம் உங்களனைவருக்கும்நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். ராஜ்ய வியத்தில்

நாம் நாளேற அவருடன் சம்பந்தப்பட்டிருந்தோம். நாங்களிருவரும் நமது மன்னனுடைய மந்திராலோசனைச் சபையில் இருந்தோம். வெகுகாலம் அவர்க்கு இஷ்டனாயிருக்கும் கௌரவம் நமக்கு அமைந்தது. நமக்கும் அவருக்கும் பரிசயமுள்ள நாளெல்லாம் நாம் அவரைப்பார்க்கிலும் அதிகமாக நன்குமதிக்கப்பட்ட யதார்த்தவாதியையும் நீதிமானையும், சர்க்கார் உத்தியோக க்ஷேமத்தை அபிவிர்த்திசெய்ய மாறாத ஆசை அதிகமுள்ள மனுஷனையும் ஒருபொழுதும் அறியோம். நமக்கும் அவருக்கும் கடிதப்போக்கு வரவுகள் வெகுவாய் நடந்துவந்தனவே; அப்போது ஒருதடவையிலாவது உண்மையினிடத்திலுள்ள உறுதியானபற்றை அவர் காட்டாதிருந்ததில்லை; வாஸ்தவமென்றுதாம் உறுதியாய் நம்பாத எதையும் அவர் சொன்னதொன்று ஐயுற நாம் நம்மாயுளுள் ஒருபொழுதும் அற்பகாரணமும் கண்டதில்லை'' யென்பதாம். அம்மந்திரியின் உன்னத சித்தையோடொத்த இந்த யதார்த்தமே அவர் செல்வாக்குகளுக்கும் சாமர்த்தியங்களுக்கும் முக்கியமான மூலாதாரமாம்.

சொல்லிலன்றிச்செயலிலும் உண்மை யுடைமை யோக்கியதையின் நேர்மைக்கு முக்கியலக்ஷணமாம். ஒருவன் உரையும் ஒழுக்கமும் உள்ளமும் ஒத்திருக்கவேண்டும். அமெரிக்க துரைமகன் ஒருவர் க்ரான்வில் ஷார்ப் (Granville Sharp) என்பவற்குக்கடிதம்போக்கி, உமது சுகுணங்களிடத்திலுள்ள கவுரவம் பற்றி என்மகன் ஒருவனுக்கு உமது நாமந் தரித்திருக்கிறேனென் றறிக்கைசெய்ய, அவர், "உமது மைந்தனுக்கு நீர் இட்டபெயர் வழங்கும் குடும்பத்தார் கொண்டாடும் சிறந்த நீதிமொழியாவது 'நீ எத்தன்மையுள்ளவனாய்த் தோன்ற விரும்புகிறாயோ அத்தன்மை யுள்ளவனாயிருக்கப் பாடுபடு' என்பது. இதை அவனுக்கு உணர்த்தும்படி உம்மைவேண்டுகிறேன். இந்நீதி வாக்கியம் தமது தந்தையால் கவனத்தோடும் மனத்தாழ்மையோடும் சாதனை செய்யப்பட்டதென்று என்தந்தை எனக்குத்தெரிவித்தார். வெள்ளைமனமுள்ள கிர

கஸ்தராகிய என் பாட்டனருடைய மனத்தூய்மை அதனல் தனிமையா யிருக்கும்பொழுதும் நாலுபெயர் கூடுமிடத்திலும் அவர் குறியின்முக்கியஸ்வருபமாயிற்று" என மறுமொழி எழுதினர். தன்னையும் மதித்துப் பிறரையும் பெருமைப்படுத்தும் தன்மையுள்ள ஒவ்வொருவனும் சொன்னசொற்படி தவருதுசெய்து, செய்யும்வேலையில் உயர்ந்த குறியை அமைத்து, ஒன்றிலும்பொய் புரட்டின்றி, தன்மனநிறையும் நேர்மையும் பெறுதற்கரிய பெரும்பாக்கியமென்று பாராட்டி இந்நீதிச் சொல்லைச்சாதித்துவருவான். சமர்த்தனனாலும் சற்றுசாவதானமற்றிருந்த நியாயவாதியாகிய பெர்னர்டை (Bernard) நோக்கி ஒருசமயத்தில் க்ராம்வெல் (Cromwell) "நீர்ஏற்கனமிகவும் சாவதானமாய் நடந்துவருவதாய்க் கேள்வி ; இதை அதிகமாக நம்பவேண்டாம் ; சூது உம்மை ஏமாற்றினலும் ஏமாற்றும், சுத்தமோ ஒருபொழுதும் அப்படிச்செய்யாது" என்றுரைத்தார். சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று மாறுபடுவோர்க்கு மதிப்புக்கட்டோடே இல்லை. அவர்களுடைய சொல்காத்திரமுள்ளதல்ல. அவர்கள் உண்மை சொன்னலும் அது அவர்கள் வாக்கில் தேய்ந்துவருவதாகத் தோன்றும்.

மெய்க்குணமுடையோன் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் செய்வதை நேர்மையாய்ச்செய்வான். ஒருசமயத்தில் ஒருமனிதன் சிறுவன் ஒருவனைப்பார்த்து, நீஏன் சிலபேரிக்காய்களை எடுத்து அங்கியுறைக்குள் வைத்துக்கொண்டு வரவில்லை. அந்தத் திருட்டைக்காண அப்பொழுது அங்கெவருமில்லையே என்று கேட்க, சிறுவன் 'இல்லாமலென்ன, நான் இருந்தேனே, நான் புரட்டுச்செய்வதை நான்காண ஒருபொழுதும் உடன்படேன்" என மறுமொழி பகர்ந்தான். அவன் நல்வழியில் நன்ருய்ப்பயின்று பண்பட்டவன். தர்மம் அல்லது ஜீவசாட்சியானது ஒருவனுடைய குணங்களை நன்ருட்சித்து, இயக்கியவாறு இயலும் சக்தியாகவல்ல, ஒழுக்க அமைதியை இயற்றும் சாதனமாயிருப்பதற்கு இது எளிய திர்ஷ்டாந்தமானலும் ஏற்கும் திர்ஷ்டாந்தமே. இவ்வகை

தர்மபுத்தியானது குணத்தை நாழிகைதோறும் நாள்தோறும் உருவாக்கிக்கொண்டு வருகின்றது. கணந்தோறும் இயலும் சக்தி அதற்கு முதிர்கின்றது. தலைமைப்பாடுள்ள இச்சக்தி இல்லாவிடில் குணத்துக்கு ஆதரவில்லை; எப்போதும் துராசைகள் இழுக்கும் வழியில் ஓடிப்போகும் தன்மையுடையதாகும். இடங்கொடுத்தால் இவ்வகை துராசைகளும், இழிந்த அல்லது நேர்மையற்ற செய்கைகளும் எத்தனை அற்பமாயிருப்பினும் மனிதனைப் பங்கப்படுத்தும். அச்செய்கை வாய்த்தாலென்ன, வாய்க்காதிருந்தாலென்ன, வெளிவந்தாலென்ன, வெளிவராது மறைந்திருந்தாலென்ன, அது செய்தபாவி முன்னவனல்ல, வேறொருவனாய்ப்போவான். செல்லும் இடந்தோறும் அவன்நெஞ்சில் கவலை உண்டாம், அவன் தன்னைத்தானே நிந்திப்பான். "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்பதுபோல் அவன் மனச்சாக்ஷியே அவன் நெஞ்சைவருத்தும். இது குற்றம்செய்தவர்களுக்குத் தவறாதுண்டாகும் தண்டனையாம்.

நல்ல அப்பியாசத்தினால் ஒருவனுடைய யோக்கியதை எவ்வளவு அதிகமாய் உறுதிப்பட்டு நிலைநிறுத்தப்படுமென்பதை இங்கே விசாரிப்போம். அப்பியாசங்களின்கூட்டமே மனிதனாவதென்பார்கள். அப்பியாசமாவது இயற்கைக்கு இரண்டாவதாம். ஒருவிஷயத்தைப்பலதரம் அப்பியாசம் செய்வதனால் செய்கைகளுக்காயினும் புத்திக்காயினும் மிகுந்தவலிமை உண்டாமென மெதாஸ்தேஷியோ (Metastasio) உறுதியாய் எண்ணி "மனிதருக்குள்ளதெல்லாம் அப்பியாசத்திலமைவதே; நீதி நல்லொழுக்கங்களும் அதனாலாவதேயென மொழிந்தார். பத்லர் (Butler)இயற்றிய ஒரு உவமைநூலில், நீதி நல்லொழுக்கங்களை வழக்கப்படுத்தி, வரவரத் தீதுசெய்வதிலும் நன்றுசெய்வது மிக எளிதாம்படி கருத்தாய்த் தம்மைத் தாம் பண்படுத்துவதும் சோதனைக்கு இடங்கொடாது மனவுறுதியோடெதிர் நிற்றலும் முக்கியமென்று உள்ளத்தில் அழுந்தச்சொல்லுகிறார். பின்னும் அவர் சொல்லியதாவது—

"தேகத்திற்குரிய சாதனைகள் புறச்செயலால் உற்பத்தியாவதுபோல, மனதின்சாதனைகள் அகச்செயலால் உற்பத்தியாகும். அகச்செயலாவது மனதை நல்வழியிற் பண்படுத்துவதும் கீழ்ப்படிவு, யதார்த்தம், நீதி, ஈவு இரக்கம் முதலியநற்குணங்களின் சொரூபத்தை அதற்கு கற்பிப்பதுமாம். மேலும் ப்ரௌஹம்பிரபு (Lord Brougham) இளமையில் புத்தியை ப்பண்படுத்துவதும் அதற்குப்பலகிதர்சனங்கள் காட்டுவதும் மிகவும் முக்கியம் என்பதை வலியுறுத்தி, "எதற்கும் முதலாவது தெய்வம், இரண்டாவது பழக்கமே முக்கியமென்று நம்புகிறேன். எக்காலமும் சட்டநிருபகரும் உபாத்தியும் அதுவே முக்கியமென்று நம்பியிருந்தார்கள். பழக்கமானது எதையும் எளிதாக்கி, பயின்றமெய்திறவுதியொழுகுவதைக் கஷ்டமாக்கும்" எனமொழிந்தார். இவ்வண்ணமே, மதுபானவிலக்கை வழக்கப்படுத்த, மதுபான ஒழுக்கத்தைக்குறித்து மனதில் வெறுப்புத்தட்டும்; சாவதானத்தை வழக்கப்படுத்த, சிந்தனையின்றி நெறிதவறிநடப்பது ஒருவனுடைய ஒழுக்கத்தைக் கிரமப்படுத்துகின்ற ஒவ்வொரு நீதிகளாலும் பகைக்கப்பட்டுத் தள்ளுண்டுபோகும். ஆனதுபற்றியே, கெட்டவழக்கம் யாதொன்றும் நம்மேல் வந்தேறாவண்ணம் மிகுகவனமும் ஜாக்கிரதையுமாயிருக்கவேண்டுவது அவசியமாம்; ஏனெனில் ஒருவன்குணம் ஒருமுறைதவறிய இலக்கு எதுவோ அதில் அக்குணத்துக்கு எப்பொழுதும் துர்ப்பலந்தான். ஒருமுறை நெறிதவறிச் சிருக்குவந்தவனுக்கு ஒருபொழுதும் நெறிதவறாதிருந்தவனைப்போல் அத்தனை உறுதி உண்டாக வெகுகாலம் செல்லும். அப்பியாசங்களெல்லாம் ஒருமுந்துமாலைக்கு ஒப்பானவை. முடிந்த முடிச்சை அவிழ்க்க, எல்லாமுந்தும் உதிர்வதுபோலவே அப்பியாசங்களும் உதிர்ந்துபோம் எனகூறிய கிரந்தகர்த்தா ஒருவர் மொழிந்தகுறிப்பு சிறந்த குறிப்பாம்.

எங்கே பயின்றாலும் பழக்கம் நம்முடைய எத்தனமின்றி நமக்குத் தோன்றாவண்ணமே இயலும். நீ அதனோடு எதிர்க்கும்பொழுது மாத்திரமே அதற்குப் பலம் எவ்வளவு ஏறிய

தென்று உனக்குத்தோன்றும். ஒருமுறைசெய்ததைப் பின்னும் ஒருமுறை திருப்பிச்செய்தால் அப்புறம் அதுசெய்வதும் எளிது, செய்ய மனச்சார்பும் உண்டாம். முதலில் பழக்கத்திற்குச் சிலந்திநூலினும் அதிகபலம் இல்லை யெனத்தோன்றவுங்கூடும்; ஆனால் எதையும் ஒருமுறை பயின்று வருவித்துக்கொண்டால், அப்பால் அந்தப்பயிற்சி நம்மை இருப்புச்சங்கிலியாற் கட்டிக்கொள்வதுபோல் இறுகக்கட்டிக்கொள்ளும். இடைச்சலின்றித் தகனைதகனையாய் வருவிக்கும் பனிக்கட்டிகளைத் தனித்தனியாய்ப்பார்க்கும்பொழுது அவை திருணப்பிராயமாயத் தோன்றும். ஆனால் அத்தகனைகளனைத்தும் ஒருங்கு சேர்ந்து பெரும்படலமாகி உயர்மலைச்சிகரத்தினின்று சரிந்து எதிரிடும் எதையும் எவரையும் அதிவேகமாய்த்தள்ளிக்கொண்டுவிழும். ஒருவன் ஆயுள் காலத்தில் தனித்தனி நடக்கும் சிறியசங்கதிகளும் அவ்வாறே.

தன்மானம், தற்றுணை, கருத்து, முயற்சி, மனநிறை இவையனைத்தும் கேவலம் எண்ணத்தால் அமைகின்றவைகளல்ல; அப்பியாசத்தினாலேயே அமைகின்றவைகளாம். காரியத்தளவில் குணங்கள் என்பவை பழக்கங்களுக்கு நாம் இடும்பெயர்களேதவிர மற்றப்படியல்ல; ஏனென்றுகேட்கில், குணங்களெல்லாம் சொற்களேயாம்; பழக்கமோ சொல்லாற் குறிப்பிக்கப்படும் பொருள்களாம். அவை நல்லவைகளானால் நமக்கு உபகாரிகள், தீயவைகளானால் அபகாரிகள். நமக்குப்பருவம் ஏறஏற, நமது சுதந்தரமான பிரவிர்த்தியிலும் நாம் எனப்படுவதிலும் ஒருபாகம் பழக்கத்தில் தொங்கிநிற்கும்படியாகின்றது. நமது செய்கைகளெல்லாம் விதியின் இயற்கைப்படியாகின்றன ; நாம் நமக்குக் கோசமாகப் பின்னித்தரித்துக்கொண்ட சங்கிலிகளாற் கட்டுண்டிருக்கிறோம்.

சிறுவர்களை நற்பழக்கம் பயிற்றிப் பண்படுத்து வதனாலாகும் பெருமையனைத்தையும் இவ்வளவென்று அதிகமாய்ப் புகழ்ந்துபேச எவராலும் இல்லை. சிறுபருவத்தில் நற்பழக்கம் அமைவது மிகஎளிது, அமைந்தபழக்கம் ஜீவன் உள்ளளவும்

நிலைபெறும். மரத்தின் பட்டையில் கத்தியால் வெட்டும் எழுத்துகளைப்போலு, பருவம் ஏற ஏற, பழக்கமும் பெருகி அகலும். சிறுவனைத்தகும் வழியில் நடக்க வழக்கப்படுத்துங்கள், பின்பு ஒருபோதும் அவன் அவ்வழியைவிட்டு விலகான்; எந்தத்தொழிலுக்கும் ஆரம்பத்திலேயே அதன் முடிவும் அமைந்திருக்கின்றது; ஒருவன் இவ்வுலக வாழ்க்கையைத் துவக்கும் மார்க்கத்தைப் பார்க்கும்போதே அவ்வாழ்க்கை இன்ன வழியாய்ப்போய் இன்னவிடத்தில் முடிவுபெறு மென்பதைத் தீர்மானிக்கலாம். கல்லிங்வூட்பிரபு (Lord Collingwood) தமக்கு அன்பான வாலிபன் ஒருவனைப் பார்த்து, "உனக்கு இருபத்தைந்து பருவம் ஆகுமுன் உன் ஆயுள்முழுதும் உதவும் யோக்கியதையை நீ நிலைநிறுத்த வேண்டுமென நினைத்துக்கொள்" என்றுரைத்தார். பருவம் ஏற, பழக்கத்திற்குப் பலமும் ஏறி யோக்கிதைக்கு உருவம் அமைவதனுல், நூதன வழியில் விலகுவது மேலுமேலும் கஷ்டமாம். ஆனதுபற்றியே, பெரும்பாலும் நூதனமாய் ஒன்றைப்பயில்வதிலும் பயின்றதை மறப்பது கடினமாம்; இந்த நியாயத்தைச் சிந்திக்குமிடத்தில், திறமை குன்றியஉபாத்தியிடத்தில் கற்ற வித்தியார்த்திகள் தம்மிடத்திற் கற்கவந்தால் கட்டணம் இரட்டிப்பு கொடுக்கவேண்டுமெனக் குழலூதி ஆகிய கிரேக்கர் ஒருவர் ஏற்பாடுசெய்தது முறைமையே. பல்லைப் பிடுங்குவதிலும் முதிர்ந்தபழக்கத்தை வேரறத் தொலைவிப்பது சிலவேளை அதிக வேதனையும் கஷ்டமுமாம். சோம்பனுக, அல்லது பாரமறியாதவனுக, அல்லது மதுபானியாக இருந்து வழக்கப்பட்ட ஒருவனை அவ்வழக்கத்தை மறக்கடித்துச் சீர்ப்படுத்த எத்தனஞ்செய்து பாருங்கள். பார்ப்பீர்களானுல் பெரும்பாலும் உங்கள் எத்தனம் கைகூடாதுபோம். ஏனெனில், அவர்கள் பழகினபழக்கம் அவர்கள் ஜீவனேடு கலந்து செறிந்து பிணைந்து ஒரு தன்மைத்தாகி விடுகின்றது. ஆதலால் அதை வேரறத்தொலைப்பது அசாத்தியம். ஆகவே, மெஸ். லிஞ்சு (Mr. Lynch) சொல்லியபடி "பழக்கம் அனைத்தினும் மிகச்சிறந்த

பழக்கமாவது நற்பழக்கம் பழகுவதில் மிகுந்த ஊக்க முடைமையைப் பழக்குவதேயாம். மனக்கவலையற்றுச் சுகமாயிருப்பதைக்கூட அப்பியாசத்திலேயே வரப்படுத்தலாம். உலகத்திலுள்ள பொருள்களின் குணங்களையே கிரகிக்க வழக்கப்பட்டவர்களுமுண்டு; தோஷங்களையே கிரகிக்க வழக்கப்பட்டவர்களுமுண்டு. ஒன்றின் நற்குணங்களையே கிரகித்து வழக்கப்படுவது ஒருவனுக்கு வருஷம் ஆயிரம் பௌன்ட் வருமானத்திலும் அதிகமாம். இது ஜான்ஸன் பண்டிதர் வாய்மொழி. மனதிற்குத் துக்கத்தையும் தெளிவின்மையையுங் காட்டிலுஞ் சுகத்தையுந் தெளிவையுங் கொடுக்கத்தக்க விஷயங்களில் சிந்தை செலுத்தும் வண்ணம் சித்தத்தை அப்பியாசப்படுத்தும் சக்திபெரும்பாலும் நமக்கு உண்டு. இவ்வாறு, மனம்சுகித்துச் சிந்தனைசெய்யும் பழக்கம் மற்றப் பழக்கங்களைப்போலவே உற்பத்தியாம் படிசெய்யலாம். புருஷரையும் ஸ்திரீகளையும், மிகுந்த கல்வியிலும் பலவகை நாகரீகங்களிலும் முதிர்விப்பதைப்பார்க்கிலும் இவ்வகை உல்லாசமான இயற்கையும் சற்குணமுஞ் சுகமான மனோநிலையு முடையவர்களாகப் பயிற்றுவது பெரும்பாலும் மிகச்சிறந்ததாம்.

பகலொளியானது ஒரு சிறு துவாரத்தின் வழியாயுங் காணப்படுவது போல, அற்பகாரியங்களாலும் ஒருவனுடைய யோக்கியதை தெளிவாய்ப் புலப்படும். வாஸ்தவத்தில் யோக்கியதையாவது நீதிநெறியில் உண்மைதவறாது செய்த பல சிறு செய்கைகளின் கூட்டமே யொழிய வேறல்ல. மேலும் அது நமது தினசரி யென்னும் நிலத்தில் வெட்டியெடுக்கப்பட்ட கற்களால் கட்டிப்பழக்கமென்னும் பாசத்தால் மேற்கட்டுகட்டிய ஒருகட்டடம்போலாம். பிறர் விஷயத்தில் நாம் நடக்கின்ற நடத்தையே நம்முடைய யோக்கியதைக்கு ஏற்ற அறிகுறியாம்.

உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் ஒத்தவர்க்கும் பொருந்த நடத்தல் இடையறாதின்பம் சுரக்கும் ஊற்றாம். தம்முடைய பெருமையை வெளியிடுவதுபற்றி அதனால் பிறர்க்கு

க்களிப்பு உண்டாவதுமாத்திரமேயன்றி நமக்கும் அதைப் போலப். பதின்மடங்கு அதிகமான சந்தோஷமுண்டாகும். மற்றவிஷயங்களில் எப்படியோ அப்படியே நல்லொழுக்கத் திலும் பிரதிமனிதனும் பெரும்பாலும் தனக்குத்தானே பயிற் சிசெய்துக்கொள்ளக்கூடும். தன்கையில் அரைக்காசும் இல் லாதிருப்பினும், இஷ்டமானால் எவனும் எல்லோரையும் உப சரிக்கவும், எவரிடத்திலும்மட் சமாயிருக்கவும் கூடும். ஜனங் களிடத்தில் சாந்தகுணமானது சர்வத்திற்கும் அமைதியாக வே நிறம்அளிக்கும் ஒளியின் சக்தியை ஒத்திருக்கின்றது; அது பேரொலியையும் பராக்கிரமத்தையும் பார்க்கிலும் மிக வும் அதிகவலிமையும் பயனும்நரத்தக்கது. பூமியில்புதைத்த வித்து முளைபெயர்ந்தவுடன் அம்முளை மண்ணாங்கட்டியைக் கிளப்பித் தடையின்றிப் பிளந்து வெளிப்படுவதுபோலச் சா ந்தகுணமும் இரைச்சலின்றிப் பிடிவாதஞ்செய்து எதிரிடும் எதையும் விலக்கி வழிதிறந்துகொண்டுபோம்.

அன்புடன் பார்க்கும்பார்வைகூட மனதிற்கு இன்பமும் சுகமும் தரும். ப்ரைடன் நகரவாசியாகிய ராபர்ட்ஸன் என் பவர் எழுதிய கடிதங்கள் ஒன்றில் தமக்கு ஒருதுரைசானி பின்வரும் கதையைச்சொல்லியதாக அவர் வெளியிட்டிருக் கிறார்:— "ஞாயிற்றுக்கிழமை ஆராதனைமுடிந்து தேவாலய த்தி னின்று திரும்புகாலில் ஏழைப்பெண் ஒருத்தியை நான் கடைக்கண் நோக்கியதுபற்றி அவளுக்கு உண்டான சந்துஷ்டியையும், அவள்விட்ட செய்ந்நன்றி யுணர்ச்சிக் கண்ணீரை யும் என்னென்று சொல்வேன்! இது எத்தனை அரியபாடம்! பிறர்க்குச் சுகமுண்டாக்குவது எவ்வளவு சுலபமானது! இப் படி அருந்தொழில் செய்யத்தக்க எத்தனை எத்தனை சமயங் களை நாம் கைநழுவ விட்டுவிடுகிறோம்! ஆயினும் மனக்கவலை யுடன் வீதியில் போம்போது நான் அவ்வருந்தொழில் செய்த தாக நினைக்கிறேன். அப்பால் அதைத்தொட்டு நினைக்கவே யில்லையாயினும், அது ஒரு பெண்ணுக்கு நாழிகை இன்பங் கொடுத்து, அவள் நெஞ்சிற் பொறுத்த பிறவித்துயர்ச் சுமை

யைச் சற்றுவேளை லேசாக்கியது!'' என்று அப்பெருமாட்டி மொழிந்ததாக கூறுகிறார்.

வாழ்நாளை மிகவுஞ் சிறப்பிக்கின்ற நீதி நல்லொழுக்கங் களும், வணக்கமும் அவைகளைவிளக்கும் அடையாளமாகிய விதிகளைப்பார்க்கிலும் மிக முக்கியமானவைகளாம். ஏனெனி ல் விதிகள் ஒவ்வொரு தருணங்களில் மாத்திரமே நமக்கு நினைப்பூட்டும்; நல்லொழுக்கங்களோ அப்படியன்றி எங்கும் நம்மைச் சூழ்ந்துகொண்டு நாம் உசுவாச நிசுவாசம் செய்யும் வாயுவைப்போல் நம்மோடுகூடவே யிருக்கின்றன. விநய மாவது தாக்ஷிணியமும் தயையும் சேர்ந்திருக்கப் பெற்று நல்லொழுக்கத்தோடு முற்றும் ஒத்திருக்கின்றது. மனிதர் ஒருவரோடொருவர் இன்பமாய் அன்போடு கூடிக் கலந்து கொண்டாடும் எவ்வகைக் கொண்டாட்டத்திலும் மிகவும் முக்கியமானது பரோபகார குணமாம். "உபசாரத்திற்குச் செல்லும் செலவு ஒன்றுமில்லை, அதைக்கொடுத்து அனைத் தும் வாங்கலாம்'' என மொந்தேகு என்னும் பெருமாட்டி (Lady Montague) மொழிந்தாள். தயையானது எல்லாப் பொருள்களிலும் மிகவும் நயமானபொருளாம். தயை புரிவது தொல்லையுமல்ல, அதனால் நஷ்டமுமில்லை. "பிறர் இதயத்தை வசப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லோர் இதயமும் ஆஸ்தி யும் உங்கள்வசமாம்'' என பர்லி (Burleigh) எலிஸபெத்து (Queen Elizabeth) க்குச் சொன்னார். நடிப்புந் தந்திரமு மின்றி நமது இயற்கையைப் பிரீதி பூர்வமாய் நடந்தேற விடு வோமானால், மனிதர் ஒன்றாய்க்கூடிக் குலாவும் உல்லாசத் திற்கும் மனதின் சுகத்திற்கும் உண்டாகும் நன்மை எண் ணுக்கு அடங்காது. அற்ப விஷயங்களிற் செய்யும் அற்ப மரியாதைகள் தனித்தனியே பார்க்கில் ஒன்றும்பெறாதவைக ளாய்த் தோன்றினும் தோன்றும். ஆனால் திரும்பத்திரும் பச் செய்வதினாலும் எல்லாம் ஒன்றாய்த் திரள்வதினாலும் அவைகளுக்கு மதத்துவம் உண்டாகின்றது. அவைகள் வே லையொழிந்திருக்கும் நிமிஷங்களைப் போலவும், தினம் காற்

பண விகிதத்தைப்போலவும் ஒன்றாகத்திரண்டு, பன்னிரண்டு மாசத்திலும் ஒருவன் ஆயுள்காலத்திலும் வியக்கத்தகும் சித்தியை விளைவிக்கு மென்று சாதாரணமாய்ச் சொல்வார்கள்.

விநயம் என்பது செயலுக்கு அணியாம்; மிகு அருமை பெருமை உண்டாம்வண்ணம் இன்சொற்சொல்லவும் இனிய செய்கை செய்யவும் ஓரோர்வகை உண்டு. உட்பகையோடு அல்லது சித்தம்பணிந்து செய்யதாகத் தோன்றுவது உபகாரமாய் ஏற்றுக்கொள்ளப்படுவது அரிது. ஆயினும், வெடுவெடுப்பான தன்மையைத் தமக்குப் பெருமையாய்க் கொண்டிடும் மனிதர் உண்டு. அவர்களுக்கு நற்குண நற்செய்கைகளும் திறமையும் இருப்பினும், அவர்கள்நடை பெரும்பாலும் பிறருக்கு ஏற்காததா யிருக்கின்றது. உனக்கு அவ்வளவு பங்கம் செய்யாதிருப்பினும், எப்பொழுதும் உன்மானத்தை வருத்தி உன்மனதிற்கு ஏதகாதவைகளைச் சொல்லி ஆனந்திக்கும் மனிதனை நீ விரும்புவது கடினமல்லவா? வேறு சிலர் வெகுவாய்மனதிரங்கி அரிய உபகாரம் செய்வார்போல நடிப்பார்கள். அவர்கள் தங்கள் பெருந்தன்மையைக் காட்டக் கிட்டும்அற்ப சமயத்தையும் கைநெகிழ விடாதிருப்பார்கள். அபர்னீதி (Abernethy) ஸெண்ட் பர்தாலமியூ வைத்தியசாலையில் ரணவயித்திய உத்தியோகத்திற்குச் சலிகைதேடி, மேற்குறித்த பிரகிருதியுள்ள ஒருவரிடத்திற்குப் போனார். அவர் வயித்தியசாலைவிசாரணைக்காரர்களிலொருவர்; மேலும் திரவியம் மிகுந்துள்ளமளிகைக்கடைக்காரர். கடையில் பீடத்தின்பின் உட்காந்திருந்த மகத்வமிக்கவியாபாரி பிரபலராகிய ரணவயித்தியர் வருவதுகண்டு, உத்தியோகத்திற்குச்சலிகையை நாடி அவர்வணங்கி வருவதாகநினைத்துப் பரிகாசம் பண்ண ஆரம்பித்து "வாருங்காணும், உமக்கு நல்லதசை அடுத்திருக்கும் இச்சமயத்தில் நம்மிடத்திற் சலிகைபெற நாடிவந்தீரென்று எண்ணுகிறேன். அப்படியா" என்றுகேட்க, இவ்விதநடிப்பை வெறுத்து, அவருடையவாய்மதத்தைப்பற்றி மனம்சினந்த

அபர்னீதி, "அல்ல, நான் அதற்கு வரவில்லை; எனக்கு நாலு துட்டுக்கு அத்திப்பழம் வேண்டும். எழுந்திரும், விரைந்தெடுத்துப் பொட்டிலம் கட்டிக்கொடும். நான்போகவேண்டும்" என்று மறுமொழிபகர்ந்தார்.

விநயப்பயிற்சி மிதமிஞ்சினால் பிலுக்கும் பேதைமையுமாகும்; ஆயினும் வினயமானது ஜௌகிகத்திற் பிறருடன்கலந்து கருமமுடிக்கவேண்டிய மனிதனுக்கு மெத்தவும் ஆவசியகமாம். இன்சொல்லும் விநயமும் எவ்வகைஉயர்நிலையிலும் அகன்ற தொழிற்றுறையிலும் ஒருவன் சித்தியடைதற்கு முக்கியமெனவும் மதிக்கத்தகும். இவ்விரண்டு மில்லாமையானது மிகுந்த முயற்சி மனநிறை உண்மை இவற்றினாலாகும் பயனையும் மெத்தவும் சிதறுவிப்பதை அடிக்கடி அனுபவத்திற்கண்டிருக்கிறோம். விநயத்தைப்பற்றிய குறைகுற்றங்களையும் குணக்குகளையும் பாராட்டாமல், அதின் இயற்கையானகுணங்களைமாத்திரம் குறிக்கவல்ல மனத்திண்மையும் பொறையுமுடையோர் சிலர் உண்டு. ஆனால் பெரும்பாலும் உலகம் குற்றம் குறைகளை அத்தனை சகிக்கும் தன்மையுள்ளதல்ல; அன்றியும் முக்கியமாய் மேலுக்குத் தோன்றுகிற நடத்தைகளைப் பார்த்து அதற்கேற்றபடியே மனுஷர் குணவிசேஷத்தை நிதானித்து, நிதானித்தவாறே சிலரைவிரும்பிச் சிலரை வெறுக்கும் தன்மை யுடையவர்களாகிறார்கள்.

மெய்ம்மையானவிநயத்தை வெளியிடுகிற வேறொருவிதமாவது, பிறர் அபிப்பிராயத்தை அநாதரிக்காதிருப்பதே. தன் மதவாதம் என்பது நன்றாக முதிர்ந்த அகங்காரமே எனச் சொல்லி யிருக்கின்றது. இக்குணத்தினது இழிந்த வடிவமே பிடிவாதமும் செருக்குமாம். ஆளுக்காள் அபிப்பிராயம் மாறுபடுவது மனிதர்களுடைய இயற்கை. அபிப்பிராயம் மாறுபடும்பொழுது மனக்குறையின்றி எவரும் அதைத்தாங்கிப் பொறுக்கக்கடவர். மனிதர் அடிபிடியாய்க் கடுஞ்சொற் சொல்லாமல் அவரவர்க்கு உவக்கும் தர்மங்களையும் மதங்களை

யும் பொறுமையாய் அனுசரித்துவரக்கூடும்; சொல்லும்சொற்களே அடிக்கும் அடிகள்போலாகி எளிதில் ஆறுக்காயம்வருத்தும் சமயங்களும் உண்டு. இவ்விஷயத்திற்குச் சார்பாக, சிறிதுகால முந்திச் சுவிசேஷசம்பந்த சமாஜத்தைச் சேர்ந்த பண்டிதர் ஒருவர் உவேல்ஸ் எல்லையில் மொழிந்த புத்தி புகட்டும் சிறுஉவமை ஒன்றை இங்கெடுத்துச்சொல்லுகிறோம்:— “மூடுபனி பரந்திருந்த ஒரு நாள் அதிகாலையில் நான் மலைக்குப் போகும்பொழுது, ஒரு மலைச்சார்பில் விகாரவடிவமைந்த ஜந்து ஏதோ ஒன்று செல்வது கண்டு அது ஒரு பூதமென்றிருந்தேன். நான் அதற்குக் கிட்டியபொழுது அது ஒரு மனிதனாயிருந்தது; அவனிடத்திற் சேர்ந்த பொழுது அவன் என் சகோதரனென்று கண்டேன்” என்றான்.

மனநேர்மை, அனுதாபம் முதலிய மனநற்குணங்களால் உற்பத்தியாகும் விநயமானது ஒருகுலத்திற்காவது பதவிக்காவது சுதந்திரமாய் உரியதல்ல. குருசிரேஷ்டனைப் போலவும் குலோத்துங்கனைப்போலவும், மரம்அறுத்து வேலைசெய்யும் கம்மாளனும் விநயமுள்ளவனாகலாம். கைப்பாடு படுவோனை ஒருவிதத்திலும் அப்பாடு நாகரிக மற்றவனாக்கமாட்டாது. பலதேசங்களில் பலதரத்தாரையும் சிறப்பிக்கும் நாகரிகமும் விநயமும், அக்குணங்கள் நமக்கும் சொந்தமாகக் கூடுமென நிதர்சனப்படுத்திக் காட்டுகின்றன. பின்னும் அதிகம் பண்பட்டு யாவரும் ஒன்றாய்க் கலந்து கொண்டாடிவந்தால், ஆண்மைக்குரிய இயற்கையான குணம் எதையும்போக்கடிக்காமலே அவைகளை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம். மிகஉயர்ந்தோர்முதல் இழிந்தோர்வரையும், திரண்ட தனவான்கள் முதல் திக்கற்ற ஏழைகள்வரையும் எக்குலத்தார்க்காயினும் எத்திறத்தார்க்காயினும் தெய்வமானது பெருமனதெனும் உயர்வரத்தை இல்லையென மறுக்கவில்லை. பெருமனதிற்கு அதிபதியாகாத பெரியமனிதன் எக்காலத்திலுமில்லை. பெருமனதானது பிரபுக்களின் பீதாம்பரத்துள் ளிருந்தும் தன்குணத்தைக் காட்டும்; பயிரிடு குடியானவனுடைய

தமான கோபுரம் ஒன்று கட்டினார்கள். அச்சகோதரர் இருவரும் பூததயை பச்சாத்தாபமுதலிய பலசுகுண சுகிர்தங்களுமுள்ளவர்களானதனால், அவர்களுடைய பிரக்கியாதி வெகுதூரம் எட்டியது. மெஸ். டிக்கின்ஸ் (Mr. Dickens) இவர்களைமனக்கண்ணால் கண்டே சீரியில் எனும் சகோதரர் லக்ஷணத்தை வர்ணித்தாரென்று சொல்லியிருக்கின்றது. அவர் வர்ணித்தது ஒருவிதத்திலும் கற்பனையல்லவென்பதை விளக்கும் திர்ஷ்டாந்தமாயுள்ள பலகதைகளுள் ஒன்றை இங்கெடுத்துக் கூறுவோம். மான்செஸ்திரில் மளிகைக் கடைக்காரன் ஒருவன் க்ராண்ட் சகோதரர்வகை வர்த்தகரைக் குறித்துப் பழிதூற்றும் பத்திரம் ஒன்று எழுதிப் பிரசித்தப்படுத்தினான். அதில் முக்கியமாய் மூத்தவனைக் கொடியதான ஒருவனை நிந்தைக்கு இலக்காக்கினான். அச்சிறு புஸ்தகம் இத்தன்மையதென்று எவரோசொல்லக்கேட்டு உவில்லியம் கிராண்ட், இப்படிப் பழிதூற்றியதைநினைந்து அவர் பச்சாத்தாபப்படும்காலம் வரும் என மொழிந்தார். இவ்வாறுமொழிந்தசெய்திகேட்டு, ஷைபழிச்சொற் புஸ்தகமெழுதிய கடைக்காரன் "ஆ! நான் எப்பொழுதேனும் தம்மிடத்திற் கடன்படுவேனென்று அவர் நினைந்திருக்கிறார் போலும். அப்படி வாராமற் புத்தியாய்நடக்க எனக்குத் தெரியும்" என்றுரைத்தான். வியாபாரவிர்த்தி செய்பவர்களுக்குத்தாம் எவரெவர்க்குக்கடன்படவேண்டிவருமோவென்று எப்பொழுதும் முற்படத்தெரிகிறதில்லை. கிரான்டைப் பழிதூற்றிய கடைக்காரன் கடன் இறுக்க அசக்தனாகிக் கடையடைக்கும்படி வந்துநேர்ந்தது. ஷைசகோதரர் இருவர் கையொப்பம் பெறாமல் அவன்யோக்கியதாபத்திரம் முடித்து மீளவும் வியாபாரம் தொடங்குவது அசாத்தியம். அவ்வர்த்தகரிடத்தில் உதவிபெற நாடிப்போவது வியர்த்தமென்று அவனுக்குத்தோன்றியது. ஆனால் குடும்பசம்ரக்ஷணைக்கு வழிவகையின்றி வெகுநெருக்கப்பட்டதனால் அவன் கட்டாயமாய் அவரைக்கண்டு விண்ணப்பம் செய்துகொள்ளும்படியாயிற்று. அவன் முன்புதான்

பழிதூற்றிய வர்த்தகரைப் போய்க்கண்டு தன் குறையைச் சொல்லி, யோக்கியதாபத்திரத்தை எடுத்துக்கொடுத்தான். கொடுக்கும்பொழுது, அவர் அதைவாங்கித் தீயில் போட்டு விடுவாரென்று அவன் மனம்பதைத்தது. ஆயினும் மெஸ். க்ராண்டு அப்படி அநியாயம் செய்யவில்லை. "நீஒருசமயத்தில் எங்களைப்பழிதூற்றிச் சிறுபுஸ்தகம் ஒன்று எழுதினவனல்லவா" என்றுசொல்லி, நங்கள் தொழிற்சாலைப்பெயரைக்கையொப்பமிட்டு, யோக்கியதாபத்திரத்தை முடித்துக்கொடுத்து, "யதார்த்தவாதியான வியாபாரியின் யோக்கியதாபத்திரத்திற்குக் கையொப்பமிட நாங்கள் ஒருபொழுதும் மறுப்பதில்லை, இது எங்கள் பிரமாணம். நீயதார்த்தவாதியல்லவென்று எங்கள் செவிக்கு ஒருபொழுதும் செய்தி எட்டினதில்லை" எனமொழிந்தார். அம்மொழிகேட்டு அந்தமனிதனுக்குக்கண்ணீர் அரும்பியது. அதுகண்டு, மெஸ். கிராண்ட்"ஆ, பழிமொழிப்புஸ்தகம் எழுதியதைநினைத்து பச்சாத்தாபப்படுவாய்என நான்முன் சொல்லியது வாஸ்தவமென்றுகண்டாயே. உனக்கு அச்சங்காட்ட நினைந்து நான் அப்படிச்சொன்னவனல்லன். என்றைக்காவது ஒருநாள் நீஎங்களுடைய சுபாவம் இத்தன்மையதென்றுதெளிய அறிந்து, முன் எங்களுக்கு அபகாரஞ்செய்யப் பதைத்ததைநினைந்து துக்கிப்பாயென்றெண்ணி அப்படிச்சொன்னேன்" என்றார். உடனே அம்மனிதன் ஐயோ அதைநினைக்க என்மனம் இப்போது பரிதபிக்கின்றது என அறிக்கைசெய்தான். பின்பு மெஸ். க்ராண்ட் "நன்று, நன்று, இப்பொழுது எங்களுடைய சுபாவம் இத்தன்மையதென்று உனக்கு நன்றாய்த்தெரிந்ததே! நல்லது நீ எப்படி நாள்கழித்து வருகிறாய்? இனி என்னசெய்யப்போகிறாய் என்றுகேட்டார். அதற்கு அவ் வேழைமனிதன் யோக்கிதாபத்திரம் பெற்றுக்கொண்டபிறகு திரவியம் கொடுத்து உதவச் சிலஉபகாரிகள் மனதிரங்கியிருப்பதாகச் சொன்னான். மெஸ். கிராண்ட, அதிருக்கட்டும், இப்பொழுது எப்படி நாள் தள்ளிக்கொண்டு வருகிறாய்?" என வினவியதற்கு அவன்,

"என்கையில் அரைக்காசுக்கும் வழியின்றி உள்ளதெல்லாம் கடன்காரருக்கு இறுத்துவிட்டபிறகு என் குடும்பசம்ரக்ஷணைக்குச்செல்லும் செலவைச்சுருக்கி, யோக்கியதாபத்திரம் வாங்கச் சிறிதுபணம் மிச்சம்பிடித்தேன்" என மறுமொழி பகர்ந்தான். அதுகேட்டு மெஸ். கிராண்ட் "சொல்லக்கேள் அப்பா! இதுஉனக்கு ஒருபொழுதும் ஏற்காது; உன்மனைவி மக்கள் இப்படி வருந்துவது சரியல்ல. என்னிடத்தில் அன்புகூர்ந்து இந்தப்பத்துப் பௌன் நோட்டை உன் மனைவிக்கு நான் கொடுத்ததென்று கொண்டுபோய்க் கொடு. இந்தா இந்தா, பிடி, அழாதே, இனி உனக்கு க்ஷேமம் உண்டாம்; திடன்கொள்ளு, 'ஆண்பிள்ளையைப்போல வேலைதொடங்கு, சமயம் இன்னம் தப்பிப்போகவில்லை, நீயும் சீக்கிரமேதலையெடுத்து எங்களுள் தலைமைப்பாடுள்ளவர்களுக்குள் ஒருவனுவாய்' என்று அவனைஉற்சாகப்படுத்தினர். அவர் இப்படித் தான் செய்த அபகாரத்திற்கு உபகாரஞ் செய்ததுகண்டு மனமடிவுற்ற அந்த மனிதன் விம்மல் அடக்கி நன்றி சொல்ல உன்னினன்; நா எழவில்லை. கையாற் கண்ணைப்பொத்திச் சிறுபிள்ளையைப்போல விம்மிஅழுதுகொண்டே அவ்வறையினின்று வெளிப்பட்டான்.

உண்மையான குலமகன் (Gentleman) என்னப்பட்டவன் உத்தமமான நிதர்சனங்களை மாதிரியாகக் கொண்டு உருவமைந்த பிரகிருதி யுள்ளவனேயாம். குலமகன் என்பது பழமைதொட்டு வழங்கிவரும் பெருமைப் பெயராம். இப்பெயரானது எத்திறத்தோர்க்கும் ஒரு உயர்ந்த பதவியாகவும் அதிகாரமாகவும் கொண்டாடப்படும். ரௌவலினில் ஸ்கொத்திய குலமக்கள் சேர்ந்த பட்டாளத்தை நோக்கி வயோதிகராகிய பிரான்சிய தளபதி "குலமகன் எப்பொழுதும் குலமகனே; ஆபத்தும் அபாயமும் மேலிடும்பொழுதெல்லாம் அவன் குலமகனென்று அவன் செய்கையா னிதரிசனப்படும்" எனமொழிந்தார். இப்பெருந்தன்மை ஒன்று உண்டானல், அதுவே அவர்க்கு ஒரு மேம்பாடா யிருக்கும். உதாரமதி

யுள்ளோர் எவரொவரும் அதற்குத் தற்செயலாய்ப் பணிந்து வணக்கம் செலுத்துவார். பட்டம் சூடிப்பதவிஉயர்ந்தவர்களுக்குத் தலைவணங்காதவர்களும் அத்தன்மையான சாதுக்களைவணங்கி உபசரிப்பார்கள். சாதுக்களுக்கு மாற்று உயர்வது நாகரிகத்தாலும் விநயத்தாலுமல்ல, அவர்கள் நன்மையால்,— அவர்கள் உடைமை உற்பத்திகளாலல்ல, அவர்கள் குணங்களால். "நேர்மையாக நடந்து, செய்வதை நியாயமானபடிசெய்து, உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி பேசுகிறவன்" எனச் சங்கீதாசிரியர் ஒருவர் சாதுலக்ஷணம் கூறுகிறார்.

சாதுக்கள் தம் பெருமையைத் தாம் அறியும் திறமையுடைமைக்காகவே மேலாகக் கொண்டாடப்படுகின்றனர். அவர்கள் தமது குணத்தை மதிப்பது அது மேலுக்குத் தோன்றுமளவு மாத்திரமேயல்ல; தன் மனச்சாட்சிக்கு மெய்ப்பட உள்ளதென்று தன் மனதுக்குத் தோன்றுமளவேயாம். அவர்களுக்குத் தன்மானமும் உண்டு, அம்முறையே பிறர்மானமும் உண்டு. தன்னளி அவர்கள் கண்ணுக்குத் திவ்விய குணமா யிருக்கும்: அதினின்று உற்பத்தியாவன விநயம், பொறை, தயை, அன்பு, இவைகளாம். எட்வார்ட் பித்ஸ்ஜிரல்ட் பிரபு (Lord Edward Fitzgerald) இந்தியரோடு கனடாவில் பிரயாணம் போகும்பொழுது, இந்தியர்களுடைய தலைவன் ஒருவன் சுமைதடை ஏதுமின்றிச் சுகமே வழிநடந்துபோக, அந்தப்பாவியின் மனைவி அவனுடைய வஸ்திர பூஷணாதிகள் வைத்துக்கட்டிய பெருஞ்சுமையை எடுத்துக்கொண்டு வருந்தித் தளர் நடையாய்ச் செல்வது கண்டு திகைத்து மனதுருகி, எட்வார்ட் பிரபு அவளை இளைப்பாறச் சொல்லித் தாம் அச்சுமையை வாங்கித் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனதாக ஒரு கதை சொல்லுவதுண்டு. பிரான்சு தேசத்தார் மெய்மையான சாதுக்களுக்குப் பிறவிக்குணமாயுள்ள விநயமென்று சொல்வார்களே, அதற்கு இது சிறந்ததிருஷ்டாந்தமாம்.

உண்மையான குல மகனுக்குப் பெருந்தன்மை பெறவேண்டுமென்ற நாட்டபுத்தி யுண்டு. அவன் எளிய செய்கைகளைக் கண்டிப்பாய்த் தவிர்த்து விடுவான். சொல்லிலும் செயலிலும் அவன் கொள்கிறநோக்கம் கண்ணியமானது. அவன் நழுவலான பேச்சுப் பெசுகிறதில்லை, நாபுரளுகிறதில்லை, மடிப்புச் செய்கிறதில்லை, பதிவிருக்கிறதில்லை; அவன் உண்மையும் யதார்த்தமும் நேர்மையு முள்ளவனா யிருப்பான். செய்வதை நேர்மையாய்ச் செய்வதே அவனுடையகொள்கையாம். அவன் ஆம் என்று சொல்லும்பொழுது அச்சொல்லே ஒரு பிரமாணம் ஆகின்றது: தகும் சமயத்தில் அவன் அல்ல எனும் பராக்கிரமச்சொல்லை அச்சமற்றுச் சொல்வான். சாது பரிதானம் வாங்க உடன்படான்; புல்லறிவுடையோரும் குணங்கெட்டவர்களும் மாத்திரமே வேண்டியவர்களுக்குத் தம்மைவிற்றுப்போடுவார்கள். நேர்மையுடையோனாகிய ஜோனஸ ஹான்வே (Gonas Hanway) ராணுவச் சேவகருக்குச் சாமக்கிரி சேகரித்துக் கொடுக்கும் வகுப்புத்தலைமை உத்தியோகம் நிர்வகித்துவருகையில், ஒப்பந்தக்காரன் அவருக்கு வெகுமதி கொடுக்கப்பார்த்த எவ்வகைப் பொருளையும் அவர் ஏற்க இணங்கவில்லை. செய்கடனை நெறிதவறிச் செய்யாவண்ணம் அவர் இவ்வாறு மறுத்தார். இவ்வகைச் சிறந்த ஒழுக்கத்தை உவெலிங்தன் டியூக் பட்டவர்த்தனருடைய (Duke of Wellington) சரித்திரத்திலும் ஓரிடத்திற் காணலாம். அஸ்ஸேயில் நடந்தயுத்தம் முடிந்த சிறிது காலத்திற்குள் ஒருநாள் காலையில் ஹைதிராபாத்நிஜாமின் பிரதமமந்திரியானவர், மஹாராஷ்டிர அரசருக்கும் நிஜாமிற்கும் ஏற்பட்ட சமாதான உடம்படிக்கையில் தம அதிபதிக்குக் குறித்திருக்கும் பிரதேசமும்சுதந்தரங்களும் எவையெனக் கேட்டு விவரம் அறியும்படிபட்டவர்த்தனரைக் காணப்போ யிருந்தார். இந்தவிவரம் அறிக்கைசெய்யும் உபகாரத்திற்காக மந்திரி தளபதிக்குப்பத்துலக்ஷம் ரூபாய்க்குமிஞ்ச வெகுமானந் தருவேனென்றுசொல்ல, சேனாதிபதிசிறிது நொடிப் பொழுது

அவர்முகத்தைப்பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்து, "அய்யா, நீர் எப்படிப்பட்ட ரகசியத்தையும் வெளியிடாத உத்தமனெனத் தோன்றுகிறதே?" என, மந்திரி "ஆம், அதற்கு ஐயமில்லை" என்றார். அச்சொற்கேட்டு அங்கிலேய ராணுவத்தலைவர் "ஆயின், நானும் அப்படித்தான்" எனப் புன்னகையோடு உத்தரம் சொல்லிச் சிரக்கம்பம் செய்து மந்திரிக்கு விடைகொடுத்தார். உவெலிங்தன் இந்தியாவில் எடுத்தகாரியங்கள் தவறாதெப்பொழுதும் நடந்தன. இந்த விதத்தில் திரவியம் சம்பாதிக்க அவருக்கு மெத்தவும் திறமை உண்டு; உண்டெனினும் அவருக்குச்சம்பாத்தியம் ஒருதுட்டும் இல்லை. தம்மைப்போன்றவர்களுக்குள் அவர் தரித்திரராகவே சீமைக்குத் திரும்பிப்போயினார். இந்த இயற்கை அவருக்கு மெத்தவும் கௌரமாய் முடிந்தது.

உத்தமராகிய அவருடைய பந்துவான உவெல்ஸ்லி மார்க்விஸ் (Marquis of Wellesley) பிரபுவும் இவ்வகைத்திறமையாலும் பெருந்தன்மையாலும் சிறப்புப்பெற்றிருக்கிறார். அவர் மைசூர்ச்சண்டையில் வெற்றி சிறந்தபொழுது ஒரு சமயத்தில், ஈஸ்திந்திய கம்பெனியின் அதிகார சபையார் அவருக்குப் பத்துலட்சம் ரூபாய் வெகுமானங் கொடுக்கப்போக, அவர் தமக்கு வேண்டுவதில்லையென்று ஒரு நிலையாய் நின்றார். அவர் வாய்ப்பிறப்பு இது:—"என் ஒழுக்கத்தின் சுதந்தரத்தையும் உத்தியோக பதவிக்குரிய மேம்பாட்டையும் சுட்டி எதும் சொல்வது ஆவசியகமல்ல. எனக்கு ஏற்காத இந்த உபகாரத்தை வேண்டாமெனமறுக்க என்னைத்தூண்டும் முகாந்தரங்கள் முக்கியமான இவைகளன்றி வேறும் உண்டு. நமது சேனைவகுப்பிலன்றி மற்றென்றிலும் எனக்குச் சிந்தனை இல்லை. அந்தப் போர்வீரருடைய பங்கைக் குறைவிப்பது என்மனதிற்கு மிகு மனத் துன்பமாம்" என்றார். வெகுமானம் வேண்டாமென்று மறுக்க அந்த மார்க்விஸ் செய்த நிர்ணயம் மாறு நின்றது.

இந்தியாவிற் சஞ்சரித்த காலத்தில் ஸ்ரீசார்லஸ் நேபியர் (Sir Charles Napier) என்பவரிடத்திலும் சுயநன்மைமறுத்தல் எனும் இம்மேலானகுணம் விளங்கியது. புஸ்லாகிய மன்னர்கள் அவர் பாதத்தண்டைவைக்க எத்தனித்த விலையேறப்பெற்ற காணிக்கை அனைத்தையும் அவர் தமக்கு வேண்டுவதில்லையென்று தள்ளிவிட்டார். "நான் சிந்துதேசத்திற்கு வந்தபின் எனக்குமனமிருந்தால் மூன்றுலட்சம் ரூபாய் வாங்க இடம் இருந்தது நிசம். ஆனால், கழுவ என்கையில் இன்னம் அழுக்கேறவில்லை. மீனியிலும் ஹைதராபாத்திலும் நடந்த இரண்டு யுத்தங்களிலும் நான் தரித்திருந்த எங்கள் அன்பான தந்தையினுடைய கத்திகறைப்படாதிருக்கின்றது" என அவர் மொழிந்தது உள்ளதுதான்.

செல்வம் அந்தஸ்து இவைகள் சாதுக்களுக்குரிய சகஜகுணங்களோடு விடாமல் சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்பதில்லை; ஏழைமனிதனும் உள்ளத்திலும் அன்றன்று ஒழுகும் ஒழுக்கத்திலும் உத்தமகுணம் உள்ளவனாயிருப்பினும் இருப்பான். சுத்த சாதுவிற்குரிய லக்ஷணங்களாகிய நேர்மை, உண்மை, நிதானம், விநயம், பொறுமை, தீரம், தன்மானம், தற்சகாயம் இவை அனைத்தும் அவனிடத்தில் ஒருங்கமையினும் அமையும். மனச்செல்வமிகுந்துள்ள வறிஞன் மனதின்கண் வறிஞனை செல்வனைக்காட்டிலும் எவ்விதத்திலும் மேலானவனேயாம். ஸெண்டு பௌல் என்பவருடைய வாய்மொழியை அனுசரித்துச் சொல்லில், முதல்வனுக்கு ஒன்றும் இல்லாதிருந்தும், அனைத்தும் உண்டு, மற்றவனுக்கோ எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லை. அவனுக்கு எந்த நல்வரத்திலும் ஆசை உண்டு, அச்சம் இல்லை; இவனுக்கு அவ்வாசை இல்லை, இவன் எதற்கும் அஞ்சுவான். தாழ்ந்தபுத்தி யுடையோரே வறிஞரெனப்படுவோர். உள்ளதெல்லாம் இழந்தும், தீரமும் மனமகிழ்ச்சியும் ஆசையும் தருமமுந் தன்மானமும் கைவிடாதிருப்பவன் எப்போதுஞ் செல்வனே. இத்தன்மை யுள்ளவனுக்குரிய சொத்தென இவ்வுலகத்தை மற்றொருவர் வசம் வைத்திருக்கின்

மனுபோரும்; அவன் எப்படிப்பட்ட சங்கடங்களைப்பற்றியும் கவலைப்படுகிற தன்மையுடையவ னல்லனாதலால், அவன் மேன்மக்கள்போலவே நேர்வழியில் நிலையாக நடந்து வருவான்.

தீரமும் சாத்விகமுமுள்ளவனை இழிவிற்இழிவான ஆடை உடுத்திருக்கவும் ஒவ்வொருசமயத்தில் காண்போம். பூர்வகாலத்ததாயினும் திவ்வியமான திர்ஷ்டாந்தம் ஒன்று இதற்கு இங்கெடுத்துச்சொல்வோம். முன்னொருகாலத்தில் அடிஜ்நதி அசுதியில் கரைபுரண்டு பெருகியபொழுது விரோனாவாரதி நடுக்கண்கட்டட உறுப்பு ஒன்றுதவிர மற்றெல்லாம் பிரவாகத்தில் உடைந்து எடுபட்டுப்போயிற்று. அந்த நடுக்கண்கட்டடத்தில் ஒருவீடு உண்டு. வாரதி *அஸ்திவாரம் நெகிழ்ந்து நிலையறுவது கண்டு அவ்வீட்டார் பலகணியில் நின்று ஆபத்திற்கு உதவும்படி வேண்டிக்கொண்டனர். அப்போது கிட்டநின்ற ஸ்பொல்விரினி கௌன்ட் பிரபுவானவர் (Count Spolveriui) "நிர்ப்பாக்கியரான இவர்களை அச்சமற்று இவ்வாபத்தினின்றும் எவன் ஒருவன் தப்புவிக்கிறானோ அவனுக்கு ப்ரெஞ்சு லூவிஸ் நாணயம் நூறு வெகுமானமீ கொடுப்பேன்" என வாக்குறுதி செய்தார். அதுகேட்டு அந்தக் கூட்டத்திலிருந்த வாலிபனாகிய பயிர்க்குடி ஒருவன் முன்னிட்டு வந்து சிற்றோடம் ஒன்று பிடித்து ஆற்றில் தள்ளி, அதில் ஏறிச்செலுத்திக்கொண்டு வாரதிக்கண்கட்டடத்திற்சேர்ந்து, அவ்வீட்டார் அனைவரையும் ஓடத்தில் ஏற்றிக்கொண்டு திருப்பி க்ஷேமமாய்க்கரையேற்றினான். அதன்பின், கௌண்ட்பிரபு, "தீரமுள்ள இளஞ்சிங்கமே, இதோ உன்பணத்தை ஏற்றுக்கொள்" என்றுசொல்ல, வாலிபன் "வேண்டாம், நான் என்பிராணனை விக்கிரயம் செய்வதில்லை, அந்தப்பணத்தை இவ்வேழைக்குடும்பத்திற்குக்கொடுங்கள். அது இவர்களுக்கு மிகவும் உதவியாகும்" என மறுமொழிபகர்ந்தான். அவன் பயிர்க்குடியின் ஆடை உடுத்திருந்தும், மேன்மக்கட்

குரிய மெய்யானகுணம் அவனிடத்தில் குடிகொண்டு மேற்
சொல்லியவார்த்தைகளைப்பேசியது.

சிறிதுகாலத்திற்குமுன் (1866௵ ஜனவரி௴ 11௳) மணற
களம் தட்டிப்பொறுத்த நிலக்கரிக்கலம் ஒன்றின் கடலோடிக
ளைத்தப்புவிக்க டீல் ஓடக்காரர்சிலர் செய்தவீரமும் மேற்
குறித்த திருஷ்டாந்தத்திற் குறைந்ததன்று. வடகீழ்த்திசையி
னின்று சடிதியில் புயலடித்து நங்கூரம்போட்டுநின்ற மரக்க
லங்கள்சில நங்கூரவடம் அறுந்து ஓடிவிட்டன. ஒருகலம்
கரைக்கு வெகுதொலையில் தரைதட்டிநிற்க, கடல் அலைபுர
ண்டு அதை மூடிக்கொள்ள எத்தனித்தது. கலம் தப்பிக்கொ
ள்ளுமென்றெண்ணச் சிறிதும் இடமில்லாதிருந்தது; காற்று
அத்தனை உக்கிரமாயடித்துக் கடலலைகள் பிரசண்டகதியா
ய்ப் புரண்டகரையில் நின்று இந்த விபத்தைக்கண்ட சிற்றோ
டக்காரர் உயிரைப்பொருள்செய்யாமல் கடலில் இறங்கி மர
க்கலத்தையாவது கடலோடிகளையாவது தப்புவிக்கும்படி
அவர்களுக்கு ஆசைபுகட்டுவது ஒன்றும் இல்லை. பிரதியுப
காரம் ஒருதுட்டாவது கிடைக்குமென்றெதிர்நோக்க இடம்
இல்லாதிருந்தது. ஆனால், பிராணகண்டம் நெருங்கிய அந்த
நிமிஷத்தில் டீல்சிற்றோடக்காரருக்கு அஞ்சாத்திறம் இல்லா
தொழிந்துபோகவில்லை. கப்பல்தரைதட்டிப் பொறுக்கவும்
கரைநெடுகக்கூடிநின்ற பலபேர்களுள் ஒருவனான சைமன்
பிரீச்சார்ட் (Simon Pritchard) என்பவன் மேலங்கியைக்
களைந்து வீசிவிட்டு "என்னுடன் வந்து இந்தக்கடலோடிகளை
இரட்சிக்க எத்தனிப்பதற்கு இஷ்டமுள்ளவர்யாவர்" என்று
கூவிக்கேட்க, அந்தக்ஷணமே "நான்வருகிறேன், நான்வருகி
றேன்" என்று இருபதுபெயர்பாய்ந்து முற்பட்டனர். ஆ
னால் அத்தனைபெயர்வேண்டுவதில்லை. ஆகக்கூடி ஏழுபெயர்
வேண்டும். அவர்கள் தட்டையோடம் ஒன்றை விரைவில் அலை
யதிர்கடலில் இறக்கி அதிற்பாய்ந்து, கரையில் பார்த்துக்
கொண்டுநின்றோர் எக்களித்தார்ப்பரிக்க, பேரலையை ஊடறு
த்து வேகமாய்ச் சென்றார்கள். கொந்தளிக்கும் அந்தக்கட

வில் ஓடம்தப்பி மீண்டுவந்தது அற்புதமே; ஆனாலும் வீரசூரராகிய அவர்கள் புயபலத்தால் ஓடம் வேகமாய்ப்பறந்து சில நிமிஷத்திற்குள் களம்தட்டியகலத்தண்டைசேர்ந்து, அதைத் திரைமுகத்திற்பிடித்தார்கள். சிற்றோடம் கரையினின்றுபுறப்பட்டுக் கால்மணிநேரம் ஆகுமுன் நிலக்கரிக்கலத்தைச்சேர்ந்த கடலோடிகள் ஆறுபெயரும் உவால்மர்கடற்கரையில்க்ஷேமமாய் ஏற்றிக்கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டனர். டீல்ஓடக்காரர் எப்பொழுதும் வீர்தீரரென்று உலகறியப்பெற்றவர்கள்தாம். ஆனால் இந்தச் சமயத்தில் அவர்களுக்கு இருந்த சலியாத்திரத்தையும் தம் உயிரையும் பெரிதாகக்கொள்ளாத வீரத்தையும் விளக்கிய திர்ஷ்டாந்தத்திலும் மிஞ்சின திர்ஷ்டாந்தம் எடுத்துக்காட்டுவது அசாத்தியமேயாம்; இத்தனை மேலான திர்ஷ்டாந்தத்தை உள்ளம் உவந்து இங் குறிக்கை செய்தோம்.

மெஸ். தர்ன்புல் (Mr. Turnbull) ஓஸ்திரியாவைப்பற்றி எழுதிய கிரந்தத்தில், அங்குள்ள ராஜபிரபுக்களின் குணநலத்தாலேயே அத்தேசதுரைத்தனத்தார்க்குப் பிரஜைகளின் மீது பிடிமானம் உண்டான வகையை விளக்கும் திர்ஷ்டாந்தமாக, காலஞ்சென்ற பிரான்ஸிஸ் சக்கரவர்த்தி (Emperor Fraucis) யைக்குறித்து ஒருகதைசொல்லியிருக்கிறார். அதாவது: — வியன்னாபுரியில் வாந்திபேதி உக்கிரமாய்க் குடிகளை வருத்துங்காலத்தில் ஒருநாள் சக்கரவர்த்தி சேனாதிபதி ஒருவருடன் நகரத்திலும் அதன் பேட்டைகளிலும் வீதிவிலாசம் வரும்பொழுது, அழுவார் ஒருவருமின்றிப் பிரேதம் ஒன்று வண்டியில் வைத்திழுத்துக்கொண்டு போகப்பட்டது. அந்தப் புதுமையானகாட்சியைக் கண்டு சக்கரவர்த்தி இதன் நிமித்தம் யாதென்று விசாரித்தார். இறந்தவன் ஏழை; அவன் வாந்திபேதி கண்டிறந்தான்; பிரேதத்தோடு மசானத்திற்குப் போவது பிராணாபாயமென்று பந்துஜனங்கள் போகத்துணியவில்லையென்று சொன்னார்கள். அதுகேட்டுப் பிரான்ஸிஸ் சக்கரவர்த்தி "அப்படியாயின் அவர்களுக்குப்பதில் நாம்போ

வோம்; ஏழையாயினும் நமது பிரஜைகளில் எவனும் தகுந்த மரியாதையோ டல்லாமல் மயானத்துக்குச் செல்வது தகுதியன்று" எனமொழிந்து தொலையிலுள்ள மசானத்திற்குத் தான் பிரேதத்தின் பின்னே போய் வெறுந்தலையாய் நின்று நடக்கவேண்டிய கருமங்களனைத்தும் வணக்கமாய்ச் செய்வித்தார் என்று சொல்லுகிறார்.

மேன்மக்களுடைய லக்ஷணங்களை விளக்கும் இத்திருஷ்டாந்தம் மிகச்சிறந்ததே யாயினும், இதைப்போலச் சிறந்ததான மற்றொன்றை இதற்கு இணையாக எடுத்துக்காட்டுவோம். அது பாரீஸ் நகரத்தில் அங்கிலேய ராணுவ மரக்கலச் சேவகர் இருவரைக்குறித்துச் சில வருஷத்திற்கு முன் காலைப்பத்திரிகை ஒன்றிற் பின்வருமாறு சொல்லியிருக்கின்றது. "ஒரு பிரேதம் வைத்திருக்கும் பெட்டியை ஏற்றிக்கொண்டு ஒருவண்டி ஒருநாள் மாந்துமார்த்தர் மசானத்திற்குப்போக வழிகொண்டு கிலிச்சி ரூ என்னுங் குன்றின்மேல் ஏறியது. அதன்பின்னே ஒருபிராணியும் போகவில்லை. இறந்தவன் நாய் வளர்த்திருப்பானாகில் அதுவாவது போயிருக்கும்; அந்த நாயும் போகவில்லை. அன்று மழைநாள், மிகவும் இருண்டு பயங்கரமாயிருந்தது. வழிச்செல்வோர் அந்தப்பிரேதத்தைக் கண்டு வழக்கப்படி தலைப்பாகையை எடுத்து மரியாதைசெய்து விட்டுப்போயினரேயொழிய ஒருவரும் அதைப் பின்தொடரவில்லை. கடைசியில் ஸ்பானியாவிற்குப் போகும்மார்க்கத்தில் பாரீஸில் இறங்கின அங்கிலேயப் போர்க்கப்பற் சேவகர் இருவர் வழியில் எதிர்ப்பட்டார்கள். அவர்களுடைய கம்பளச் சட்டைக்குள்ளிருந்து உண்மையான இரக்கமொன்று எழுந்து பேசியது. ஒருவன் மற்றவனைப்பார்த்து, ஐயோ ஆருமற்றபாவி! இவனைத்தொடர்வார் எவருமில்லை; நாமிருவரும் போவோம்! எனச்சொல்ல, இரண்டுபெயருங் குல்லாவை எடுத்து வெறுந்தலையாய் அந்த அநாத பிரேதத்தின்பின்னே மசானத்திற்குச் சென்றார்கள்."

எல்லாவற்றிலும் மேலாக, சாது சத்தியவந்தனு யிருப்பான். சத்தியமானது உயிர் வாழ்க்கைக்கு முக்கியமான தென்றும், மனிதர் வியாபாரங்களில் நேர்மைக்கு உயிர் நிலையென்றும் அவன் அறிகிறான். மேன்மக்களுக்கு சத்தியத்தினுலேயே காரியசித்தி உண்டாகின்றதென செஸ்தர்பீல்ட் பிரபு (Lord Chesterfield) கூறினர். உவெலிங்தன்டியூக் பட்டவர்த்தனர் (Duke of Wellington)தீபகற்பத்தில் கெல்லர்மன் (Kellerman)தளபதிக்கு எதிரியானபொழுது. வாக்குப்பிசகிய கைதிகளைப்பற்றிய விஷயத்தில் தளபதிக்குக் கடிதமெழுதி, அங்கிலேய ராணுவ உத்தியோகஸ்தர் முக்கியமாய்ப் பாராட்டுவது தைரியம், இரண்டாவது சத்தியமென அறிக்கை செய்தார். அவர் கூறியதாவது :—"அங்கிலேய ராணுவ உத்தியோகஸ்தர்கள் விலகுவதில்லையென்று தங்கள்மனத்தைக் காக்கும் வாக்குக் கொடுத்திருந்தார்களானுல், அவர்கள் அதை மீறார். இதற்கு ஐயமில்லை. என்சொல்லை நம்பும்; அவர்கள் வாக்கு உறுதியானதென்று கொள்ளும் ; அங்கிலேயராணுவ உத்தியோகஸ்தர்வாக்கு காவற்சேவகர் விழிப்பினும் அதிகஉறுதியானது" என்று சொல்லியிருக்கிறார்.

உண்மையான தைரியமும் சாத்விகமும் ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும். தீரன்உதாரமும் பொறுமையுமுள்ளவன், அவன் ஒருபொழுதும் பிறர்பிழை பொறாதிருப்பதுமில்லை, பிறருக்குக் குரூரஞ்செய்வதுமில்லை. "அவர் ஒருபொழுதும் அபாயத்திற்கு அஞ்சிப் புறங்காட்டியதில்லை. இப்படி இருந்தும் அவர் நெஞ்சோ இளநெஞ்சு. ஒரு கொசுவையானுலுந் துடைத்து விலக்க அவர்மனம் பொறாது" என ஸ்ரீஜான் பிராங்க்லின் (Sir John Franklin) என்பவரைக் குறித்து அவர் இஷ்டட்டர் பாரி (Porry) சொல்லியது முற்றும் ஏற்கும். மேன் மக்கட்குரிய நற்குணங்கள் ஸ்பாணியாவில் எஸ்போடன் என்னும் இடத்தில் நடந்த குதிரை ராணுவவீரர் சண்டையில் பிரான்சிய உத்தியோகஸ்தர் ஒருவரிடத்தில் விளங்கியது. ஸ்ரீபெல்த்தன் ஹார்வி (Sir Felton Harvey) யை வெட்டக்

கத்தி ஓங்கின அவர் தம் மாற்றானுக்கு ஒருகை இல்லையென்று கண்டு அந்தக்ஷணமே வெட்டுவதை நிறுத்தி ஓங்கின கத்தியை இறக்கி ஸ்ரீபெல்த்தனுக்கு முன்பட்டு ராணுவமுறைப்படி உபசரித்துச்சென்றார். அந்தத் தீபகற்ப யுத்தத்திலேயே நே (Ney) என்னுந் தளபதி செய்த பெருந்தன்மையும் சாத்விகமும் விளங்கும் ஒரு செய்கையை இதனுடன் பின்னும் ஓர் உதாரணமாய் எடுத்துக் காட்டலாம். அப்பொழுது சார்லஸ் நேப்பியர் (Charles Nepier) பிராணபாயமான காயப்பட்டுக் கொரனுவிற் சிறைப்பட்டார். அவர் இறந்ததும் இறவாதிருப்பதுஞ் சீமையில் அவர் பந்துக்களுக்குத் தெரியாது. அவர் கதியை அறியும்படி இங்கிலாந்தி னின்று விசேஷ தூதன் ஒருவன் ஒரு படைக்கப்பலுடன் வந்தான். க்லௌத் பரன்பிரபு (Baron Clouet) துவஜத்தை வாங்கித் தூதுவந்திருப்பதை நே சேனாபதிக்குத் தெரிவித்தார். அதுகேட்டுச் சேனாதிபதி "வந்தவர்களைக் கைதி சிறைச்சாலையில் இருந்து கண்டு தன்க்ஷேமத்தையுந் தனக்கு நடந்துவரும் உபசாரத்தையும் அவர்களுக்குச் சொல்லட்டும்" என்று ஆக்கியாபிக்க, க்லௌத் தாமதித்து நின்றார். நே குறுநகையோடு "பின்னும் என்ன வேண்டும்?" என்று வினவ, "விதவையாகிய அவர்தாய்க்குப் பருவம் முதிர்ந்து கண்கெட்டுப் போயிற்று" என க்லௌத் அறிக்கை செய்ய, நே "அவருக்குத் தாயார் இருக்கிறாரா? ஆனால் அவர் தாமே போய்த் தாயாரைக் கண்டு தாம் பிழைத்திருப்பதாகச் சொல்லட்டும்" என்று உத்தரவு கொடுத்தார். அக்காலத்தில் அவ்விருதேசத்தாரும் கைதிகளைக் கொடுத்துமாறக் கட்டளை இல்லை. வாலிபராகிய ராணுவ உத்தியோகஸ்தரைச் சிறைநீக்கியது பற்றி நப்போலியன் சக்கரவர்த்திக்குத் தம்மில் வெறுப்புண்டாமென்று அவருக்குத்தெரியும்; ஆனால் சிந்தை கசிந்து செய்த அந்த உபகாரத்தை நப்போலியன் மெச்சினார்.

பூர்வகாலத்து வீரர்களுடைய செயல் இப்பொழுது வழங்காதொழிந்துபோனதைப்பற்றி உண்டாம் பிரலாபத்தைநாம்

அப்போதப்போது கேட்டுக்கொண்டிருந்தாலும், சரித்திரத்தில் ஒப்புயர்வு இல்லாதவீரமும் சாத்விகமும் சுத்தவீரர்க்கு உரிய சுயநன்மை பாராட்டாமையும் விளங்கும் செய்கைகளை இப்பொழுது நமதுகாலத்தார் கண்டிருக்கிறார்கள். சென்ற சிலவருஷகாலமாக நடந்தவைகளால் இத்தேசத்தாரும் பிறதேசத்தாரும் இன்னம் சீரழியாதிருக்கிறார்களென்று தெரிந்திருக்கிறது. ஸிபாஸ்தபூலின் கடுங்குளிருள்ள சமபூமியான மேட்டில், பன்னிரண்டுமோர்ச்சம் முற்றுகைசெய்த மண் இற்று உதிரும் அபாயமுள்ள அகழில் நாலுவகுப்பு மனிதரும் முன்னோரால் தமக்குச்சுதந்தரமாக வரப்பெற்ற மேலான குறிக்குத் தாம் பாத்திரரென்று திர்ஷ்டாந்த பூர்வமாய்க் காட்டினார்கள். ஆனால், அங்கிலேயருடைய திறமைகள் ஒளிக்கொளியாகத் துலங்கியது இவ்விந்தியாவில் மஹா பிராணசங்கடம் சேர்ந்த சமயத்திலேயே. சிறைப்பட்டிருக்கும் ஸ்திரீகளையும் சிறுவர் சிறுமியரையும் சிறைமீட்கும் ஆசைப்பெருக்கம் தாண்டி ஏவியராணுவ அதிகாரிகளையும் சேவகரையும் நீல்தளபதி (Neill) கான்புரிக்கும், ஹவிலாக் தளபதி (Havelock) லக்ஷ்மணபுரிக்கும் நடத்திக்கொண்டுபோன பராக்கிரமத்திற்குப் பூர்வகாலத்து வீரசூரர்களுடைய அருந்தொழிலனைத்தும் சமானமாகா. ஊத்திராமுக்கு (Outram) ஹவிலாக் கீழ்த்தரமான உத்தியோகஸ்தராயிருந்தும் ஊத்திராம் அதைப்பாராட்டாமல் சேனாவீரர் லக்ஷ்மணபுரியைத்தாக்கும் முயற்சிக்கு முதற்பாதமாகப்போகும் கௌரவத்தை ஊத்திராமுக்கு வலிய மனம்பொருந்திவிட்டுவிட்டது ஸிட்னி (Sydney) என்பவருக்குப் பாத்திரமான லக்ஷணமாயிருந்தது. இச்செய்கை ஒன்றுமாத்திரமே "இந்தியாவின்பேயார்ட்" என அவருக்குக் கொடுத்திருக்கின்ற பெயர் அவர்க்குத்தகுமென்று சாதிக்கின்றது. தைரியமும் சாத்விகமுமுள்ள உத்தமராகிய ஹென்ரி லாரென்ஸ் (Henry Lawrence) என்பவர் மரணம்சேரும்பொழுது, "என்னைக்குறித்துயாதொரு பெருமையும் பாராட்டவேண்டாம்; ராணுவசேவகரோடு

என்னை அடக்கம் செய்யுங்கள்'' என இறக்குமுன் வாய்விட்டுக்கூறினார். லக்ஷ்மணபுரியில் முற்றுகைசெய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யவும், அங்கிருந்து பொழுதுபடுமுன் கான்புரிக்கு ஸ்திரீகளும் வாலிபருமாகிய நெடுநிரைப்பரிவாரத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும் ஸ்ரீகாலின் கம்பெலுக்கு (Sir Colin Campbell) இருந்த ஆவலும் விசாரமும், அவரைவெல்லும் திறமில்லாதசத்துருக்கள் பலவாறுதாக்க வகைபார்த்தும், அவர் விக்கினமின்றிக் கான்புரிசேர்ந்ததும், அலகபாத்திற்குப் போகும் மார்க்கத்தில் அவ்வரிய அடைக்கலப்பொருளை நிர்விக்கினமாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கிறவரையில் அவர் ஒருபொழுதும் விசாரமற்றிராமல் அபாயகரமான வாரிதி வழியாய் அவர்களைப்பத்திரமாய் நடத்திக்கொண்டுபோனதும், அதன்பின் குவாலியர் கண்டின்ஜென்ட் பட்டாளத்தின் மேல் இடியேறுபோலத் திடுக்கெனப்போய் விழுந்ததுமாகிய இவைகள் அங்கிலேயர்களால் நமக்குமெத்தவும் பெருமை உண்டென்று எக்களிப்பு உண்டாக்கி, அதி உத்தமமும் சுத்தமுமான வீரரசம் இக்காலத்தார்க்குள் இன்னம் அழியாது பலமாயிருக்கின்றது என நம்மனதைத் தேறும்படி செய்கின்றன.

சாதாரணமான சேவகரும் ஆபத்து விபத்து உண்டான சமயத்தில் மேன்மக்களென ஐயந் திரிபற விளங்குவார்கள் ஆக்கிராவில் மாற்றானுடன் நெருங்கிச் சண்டையிட்டபொழுது திரளானபெயர்கள் பரிதாபமாய் வெந்தும் வேறுவிதமாக ஊறுபட்டும் வருந்த, அவர்களைக் கோட்டைக்குள் கொண்டுபோய்ச் சேர்த்து அங்குள்ள துரைசானிகள் உள்ளக்கனிவோடு காயங்கட்டி உபசரித்தார்கள்; வீரத்தன்மையுள்ள கொடியராகிய ராணுவ சேவகரும் சிறுபாலரைப்போலச் சாதுவாயிருந்தனர். துரைசானிகள் ஊறுபட்டவர்களைப் பலவாரம் உபசரித்து வரும்பொழுது, அம்மெல்லியாருள் அதிக விநயமுள்ளவர்கள் செவி அதிரத்தக்கசொல் ஒன்றையும் அங்குள்ள சேவகன் ஒருவனும் ஒருபொழுதும் சொன்னதில்லை.

ஆபத்தெல்லாந் தீர்ந்தபின், அதாவது பிராணபாயமான காய
ம்பட்டவர்கள் இறந்து, வியாதிஸ்தரிலும் ஊறுபட்டவர்களி
லுந் தப்பிப் பிழைத்தவர்கள் செய்ந்நன்றி மறவாதிருப்பதை
த்திருஷ்டாந்த பூர்வமாய்க் காட்டத்தகும் அளவிற்குச் சௌ
ஸ்தமடைந்தபொழுது, தங்களை உபசரித்த மாதரையும் ஆஸ்
கிராவிலுள் முக்கியமானவர்களையும் தாஞ் என்னும் அரண்
மனையின் சிங்காரவனத்தில் விருந்துண்ண வரவழைத்து,
புஷ்பாலங்காரஞ்செய்து கீதவாத்தியம் முழங்கும் அவ்விட
த்திலே ராணுவசேவகத்தில் அநுபவம் முதிர்ந்த அவ்வீரர்
கள் அங்கமெல்லாம் காயவடுத்தோன்றக் கைகால் ஊனப்
பட்டிருந்தும் எழுந்து நின்று, மிகுந்த ஆபத்துநேர்ந்தகால
த்தில் தமக்கு உண்டியுடைகொடுத்துத் தங்குறைதீர்த்த தத்
தேசத்துச் சாதுக்களாகிய ஸ்திரீகளுக்கு நன்றிசொன்னார்
கள். ஸ்குத்தேரி வைத்திய சாலைகளிலும் காயம்பட்டவர்
களும் பிணியுற்றவர்களும் பலர் தம்மை ஆதரித்த பட்சமு
ள்ள அங்கிலேயஸ்திரீகளை வாழ்த்தினார்கள்; வேதனையால்
நித்திரையின்றி வருந்திய அவர்கள் இராக்காலவில் தங்கள்
தலையணையில் ப்லாரென்ஸ் நைட்டிங்கேலின் நிழல்விழ அதை
க்கண்டு வாழ்த்தியதை நினைப்பதைப் பார்க்கிலும் சிறந்தது
வேறில்லை.

1852-ம் வருஷம் பெப்ருவரிமாசம் 27உ ஆப்பிரிக்கா
தேசத்துக்கடலில் பெர்க்கென் ஹெட் எனும் உருசேதப்ப
ட்ட வரலாறுகளில், சாமானிய மனிதருக்கு இப்பத்தொன்
பதாம் நூற்றாண்டில் இருக்கும் ஆண்மைக்கு மறவாது நெ
ஞ்சகத்தில் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளத் தகும் பின்
னும் ஒரு திருஷ்டாந்தம் விளங்குகின்றது. இது எக்காலத்
தோரும் தமக்குப் பெருமையென்று கொண்டாடத்தக்கது.
ஆப்பிரிக்காகண்டத்துக் கரையடுத்து ஓடிய அந்த ஆவிக்கல
த்தில் ஏறிய புருஷர் 472-பெயர், ஸ்திரீகளும் பாலிய
ரும் 166-பெயர். அந்தப் புருஷர் அப்பொழுது நன்னம்பி
க்கை முனைநாட்டில் சேவகஞ்செய்த சில பட்டாளத்தார்.

அவர்கள் முக்கியமாய் ராணுவ சேவகத்துற்சேர்ந்த அப்பொழுது சொற்பகாலந்தான் ஆயிற்று. பாதிராத்திரி ஆ இரண்டுமணியளவில் கீழ்த்தட்டில் எல்லாரும் நித்திரையாயிருக்கையில், கடலடியில் மறைந்திருந்த பார்தாக்கிக் கலத்தின் அடியில் துவாரம் உண்டாகி அது கடலில் முழுகிப் போமென்று அச்சம் பிறந்தது. வேகமாய்ப் பறைமுழக்க யுத்தவீரர் ராணுவசிகைக்குக் கட்டுமுறைமையாய் ஆயுதபாணிகளாகக் கலத்தின்மேற்றட்டிற் சேர்ந்தார்கள். ஸ்திரீகளையும் சிறுவர்களையும் தப்புவிக்கும்படி கட்டளைபிறந்தது. அகதிகளாகிய ஸ்திரீகளும் சிறுவர்களும் அறையினின்று மேலே கொண்டுபோய் வாய்பேசாமல் சிற்றோடங்களில் ஏற்றப்பட்டார்கள். அவர்களிற் பெரும்பாலார் நித்திரைசெய்யும்பொழுது உடுத்த உடுப்போடிருந்தனர். சிற்றோடம் அனைத்தும் அவர்களை ஏற்றிக்கொண்டு கப்பற் பக்கத்தினின்று விலகியதன்மேல், மாலுமி "நீந்தமாட்டுவோர் எல்லோரும் கடலிற்பாய்ந்து சிற்றோடங்களைத் தொடர்ந்து நீந்திப்போங்கள்" எனச் சிந்தனையற்றுக் குரலெழுப்பிச் சொன்னார். அதுகேட்டு 91 - வது ஹைலாந்தர் பட்டாளத்தைச்சேர்ந்த கப்தன் ரைட் "கூடாது, அப்படிச்செய்தால், ஸ்திரீகளோடு சிற்றோடங்கள் முழுகிப்போகவேண்டிவரும்" எனத் தடுத்துச் சொன்னார். தீரராகிய ராணுவசேவகர் நிலைபெயராது நின்றார்கள். சிற்றோடம் ஒன்றும் மிகுந்திருக்கவில்லை. அந்தக் கண்டத்தினின்றும் தப்பிப் பிழைக்கலாகுமென்று எண்ண இடமே இல்லாதிருந்தது; இந்த அவஸ்தையிலும் எவர் மனமும் ஏங்கித் திகைக்கவில்லை. "அந்தப் பிராணசங்கடமான வேளையில் ஒருவனும் செய்கடன் முடிக்கப் பின்னிடவில்லை. "உருமுழுகி மறைந்துபோந்தனையும் அவர்கள் ஒரு சொல்லாவது குறை கூறவுமில்லை, கூச்சலிடவுமில்லை" என அந்தக்கண்டம் தப்பிப்பிழைத்த கப்தன் ரைட் சொன்னார். மரக்கலம் ஆழ்கடலில் மூழ்கியது; அலைக்குள் மறையும்போது அந்த வீரர்கணம் எக்களிப்பாய்த் அப்பாக்கிப்

பிரயோகம்செய்து அகாதத்தில் அமிழ்த்தது. சாத்விகரும் வீரருமானவர்களுக்கு மகிமையும் கனமும் உண்டாகக்கடவன். இத்தகைமையோர் செய்துகாட்டிய நிதர்சனத்திற்கு ஒருபொழுதும் அழிவு இல்லை. அது அவர்களைப்பற்றிய ஞாபகத்தைப்போல் என்றும் அழியாதிருக்கும்.

மேன்மக்களைப் பகுத்தறியும் குறிகள் பலவுள. ஆயினும் அவற்றுள் ஒருபொழுதும் தவறாப் பிரமாணம் ஒன்று உண்டு. அதாவது ஒருவன் தன் கீழ்ப்பட்டவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதும், பெண்சாதி பிள்ளைகளை அவன் உபசரித்தோ அபசரித்தோ நடத்துவதும், அதிகாரி தன் கீழ் உத்தியோகஸ்தரையும், யஜமானன் வேலைக்காரரையும், உபாத்தியாயன் மாணாக்கரையும், எந்தெந்தப்பதவியி லிருப்பவனும் தனக்கு இளைத்தவர்களையும் பரிபாலிப்பதுமாகிய இவைகளில் புத்திபூர்வமாகவும் பொறுமையாகவும் பட்சமாகவும் அதிகாரம் செலுத்திவருவதே சாதுக்களின் குறியை மயக்கமறச் சோதித்துத் தெளியும் பிரமாணமென்று எண்ணத்தகும். லேமொத்தி (La Motte) என்பவன் ஒருநாள் கும்புகூடிய ஜனத்துக்குள் செல்லும்பொழுது ஓரிளைஞனுடைய பாதத்தைத் தற்செயலாய் மிதிக்க, அவ்விளைஞன் அந்தக்ஷணமே அவன் முகத்தில் அறைந்தான். அறையுண்ட லேமொத்தி, "ஐயோ, அப்பா, நான் கண்ணில்லாத அந்தகனென்று உனக்குத் தெரிந்தால் அப்பொழுது இந்த அபசாரம் செய்ததற்காக நீ தவறாமல் துக்கிப்பாய்" என்றான். எதிர்க்க வல்லமையில்லாதவர்களை வாயடித்து அதட்டுகிறவன் சாதுக்களைப் போல நடிப்பவனாயிருந்தாலும் இருக்கலாம், ஆயினும் சாதுவாகமாட்டான். மெலியார்மீதும் அகதிகள்மீதும் கொடுங்கோல் செலுத்துவோன் பயங்காளியாவானேதவிர ஆண்மையுள்ளவனாகான். கொடுங்கோல் மன்னவன் அகம்புறமாகப்பெயர்த்த அடிமையேயன்றி மற்றப்படியல்ல. மனோநேர்மையுள்ளவனுக்குப் பலமும், தான் பலசாலியென்ற துணிவும் இருக்குமாயின், அது அவனுடைய குணங்களுக்கு ஒரு

மேன்மை உண்டாக்கும். ஏனெனில், அவனே அதை Fulle அறிந்து மிக்க சாவதானத்தோடு பிரயோகிப்பான். "இராட்சதனுடைத்த வலிமை இருப்பது மேன்மைதான்; ஆயினும் அந்த வலிமையை இராட்சதனைப்போலப் பிரயோகிப்பது கொடுமையாம்." என முன்னோர் மொழிந்திருக்கின்றனர்.

சற்குணம் மேன்மக்களுடைய யோக்கியதைக்கு உத்தம பிரமாணம் என்பதுமெய்யே. தன்னில் இழிந்தோர், தன்னைச் சார்ந்தோர், தனக்கு ஒப்பாவோர் ஆகிய பிறருடையமனதை வருத்தலாகாதென்று நினைவில் இருத்திக்கொள்ளும் இயற்கையும், அவர்கள் மானத்தை அபிமானிக்கும் இயல்பும், சத்துசாதுவின் ஒழுக்கம் அனைத்திலும் வியாபித்திருக்கும். அவன் பிறர்சொல்லுக்கு அல்லது செயலுக்கு அநீதியான அர்த்தம்பண்ணி மாபாதகனாவதிலும், பிறரால் தனக்கு உண்டாகும் அற்பமான அபகாரத்தைச் சகித்துக்கொள்வான். அவன் தன்னைப்போல் அத்தனைபேறு பெறாதவர்களுடைய அசக்தியையும் குறை குற்றங்களையும் பிழைகளையும்பொறுத்துக்கொள்வான். தனக்கு உதவும் விலங்கு ஜாதிக்கும் அவன் மனதிரங்குவான். அவன் தன்பாக்கியத்தையும் பலத்தையும் யோக்கியதையையும் குறித்து வீம்பு பாராட்டான். கரும்ம் சித்தித்ததென்று அவன் மனம் பூரிப்பதுமில்லை, சிதறியதென்று மெத்தவும் குன்றிப்போவதுமில்லை. அவன் தன் அபிப்பிராயங்களைப் பிறருக்கு வலிந்து சொல்லான், ஆனால் சமயத்தில் தன் மனக்கருத்தை ஒளிக்காமல் தாராளமாய் எடுத்துரைப்பான். அவன் கைம்மாறு ஒன்றை எதிர்பார்த்து ஒருவர்க்கு உபகாரம் செய்யான். "அவரிடத்தில் ஏதாவது உபகாரம் பெற்றாலும் பெறலாம். இக்காளில் இம்மாத்திரம் சொல்வது அதிகமே" என ஒருசமயத்தில் ஸ்ரீ உவால்த்தர் ஸ்காட் (Sir Walter Scott) லோதியன் பிரபுவைப்பற்றி மொழிந்தார்.

அன்றன்று நடக்கேறுகின்ற லௌகிக வியாபாரங்களில் தன்னை மறந்து, பிறனைத் தனக்கு மேலென்று மயக்குகொள்

துவின் குணமெனச் சாத்தம்பிரபு (Lord Chatham)
சொல்லியிருக்கிறார். "தன்குறைநீர் வுள்ளார் தளர்ந்து பிறர்
க்குறூஉம், வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்" என்றபடி
உதாரமதியுள்ளவர்களுக்கு முக்கியமாய் பிறர்சுகத்தைப்போ
ற்றுமாசையே அதிகமென்பதற்கு ஆண்மையிற்சிறந்த ஸ்ரீ ரால்
ப் அபர்க்ராம்பி (Sir Ralph Abercromby) என்பவரைக் குறி
த்துச்சொல்லிய கதை ஒன்றைத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்
காட்டுவோம். அபுகிர் யுத்தத்தில் பிராணபாயமான காயம்
பட்டபொழுது பௌதிராயந்து மரக்கலத்தில் அவரை ஒரு
சிவிகையில் வைத்துக்கொண்டுபோய், நோக்காட்டைத் தணி
·க அவர் தலையின்கீழ் இராணுவ சேவகன் ஒருவனுடைய
ளியை அணையாக வைத்தார்கள். அது அவருக்கு மிக
கமாயிருந்தது. தலையின்கீழ் வைத்திருக்கும் அணை என்
று அவர்கேட்க, "அது மற்றொன்றுமல்ல, ஒரு போ
கன் கம்பளி" என்று உத்தரம் சொன்னார்கள். அது
துவர் எழுந்திருக்க உன்னிப் பாதி எழுந்து "அது
பளி" என வினவ, "அது ஒரு சேவகன் கம்பளி
று அவர்கள் மறுபடி சொல்லக்கேட்டு, அவர் "இந்
க்கு உடையன் பெயர் அறியவிரும்புகிறேன் என
ட்க, அது சஉ-வது பட்டாளத்து டங்கன்ராயு
ரி, என மறுமொழிபிறந்தது. "அப்படியானால்
ரியே டங்கன்ராயிடத்தில் அவன் கம்பளியைச்
ங்கள் எனக் கட்டாயமாய்த்திடம் செய்தார்.
ப்படும் சமயத்திலும் அதைச்சிறிது ஆற
கூட இராணுவ சேவகனுடைய கம்பளி
பர் மனங்கொள்ளவில்லை. ஐத்பென்
வாயில் இருக்கும்பொழுது வலிட்
னீர்க்கிண்ணத்தை அவர் கா
னுக்குக்கொடுத்ததைப்போல்
வழியில் உத்தமமேயாம்.

சொற்சித்திரத்தாற்சிறந்த புராதனராகிய புலவர் (
ஸ்ரீப்ரான்ஸிஸ் ட்ரேக்(Sir Francis Drake)எனும் மஹா க
ப்பற் சேனாதிபதியின் குணம் குறிகளை விவரித்தெழுதிய
சமயத்தில் முயற்சியைக்கைவிடாத மேன்மக்களுடைய குண
ங்களைப் பின்வருமாறு சுருக்கித் தொகுத்திருக்கிறார்:—அதா
வது, "ஒழுக்கத்திற் புனிதர், வியவகாரத்தில் நீதியுடைய
வர், சொற்றவறாதவர், தங்கீழ்ப்பட்டோரிடத்தில் தாட்சிணி
யமுடையவர்; சோம்புத்தன்மையை மற்றெதிலும் அதிக
மாய் வெறுப்பவர்; விசேஷமாய், முக்கியமான காரியங்க
ளில் பிறர் எத்தனை நம்பத்தக்கவர்களும் சமர்த்தருமா யிரு
ப்பினும் அவர்களுடைய அவதானத்தை ஒருபொழுதும் நம்
பியிராதவர், அபாயத்தை எப்பொழுதும் அவமதித்து, எவ்
கைக் கஷ்டத்திற்கும் பின்னிடாமல், தீரம் சமர்த்து
ற்சி செய்யவேண்டிய எந்தக் கருமத்திலும் துணைவ
ராலும்சரி தாம் கண்ணும் கருத்துமா யிருப்பவர்'
மொழிந்திருக்கிறார். இப்படிப்பட்ட மேலான குண
வர்களே மேன்மக்களாவார்கள்.

முற்றிற்று.

இடிவொன்று மழைபெய்து அவர்கள் பலகைக
எழுதிவைத்த கணக்குகளை யெல்லாம் கலைத்து
வதுமல்லாமல் அவர்களையும் அங்கிருக்கவொட்
மல் அப்புறம் ஓடிப்போம்படி செய்வதுமுண்டு

இப்படியிருக்க மழைக்காலமும் குளிர்காலமு
வந்துவிடும். அப்போது அவர்கள் எங்கே கூ
கல்வி கற்பார்கள்; குளிரிலும் காற்றிலும் அந்
திறந்தவெளியி லிருக்கக்கூடுமோ? இவ்வளவுகா
தில் அவர்களின் கூட்டமும் அதிகமாகி விட்ட
யால், சாதாரணமான சிறுவீட்டறை யொன்
அவர்கள் வகுப்புக்குப் போதுமானதா யிருக்க
லை. ஆனதுபற்றி அவர்கள் அதற்காகச் சற்றுச்
தனைகொண்டு, தாம் ஏதோ தொற்பவேலை செ
சிறிதளவு வாரக்கூலி சம்பாதிக்கின்ற வாலிப
ராயினும், தாம் கூடிப்படிப்பதற்கு எப்படிய
து வருந்திப் பெரியவீடொன்று குடிக்கூலிக்கு
ங்கிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தார்
அதைப்பற்றி விசாரிக்கையில், ஒவ்வொரு சம
திலே விஷபேதி காண்கின்றவர்களுக்கு வை
யசாலையாக வழங்கிவந்த ஒரு கட்டடம் கு
கூலிக்குக் கிடைத்தது. அது விஷபேதிகண்ட
கள் தங்குமிடமாதலின் அந்தநோய் இன்னும்
கேயாவது பதுங்கிக்கொண் டிருக்குமோவென
யந்து எவரும் அவ்விடத்துக்குக் குடிவருவதி
கூடிக்கற்பதிலுள்ள களிப்பினால் இம்மாணாக்க
அதற்காகச் சிறிதும் அச்சங்கொள்ளாமல், த
எப்படியாயினும் இடமகப்பட்டாற் போதுமெ
வாரத்திற்கு இவ்வளவெனக் குடிக்கூலி யேற்
டுத்து, அந்த விஷபேதி வீட்டைவாங்கி, அ
டில் நாற்காலிகளும் பலகைகளும் அமைத்துத்
களேற்றிக்கொண்டு அவ்விடத்திலேயே ப
படிக்கப் புகுந்தனர். வெகு சீக்கிரத்திலேயே

முகவுரை.

ன்முயற்சி யெனும் இப்புத்தகம் எழுதத் துவக்கு
ற்குக் காரண மின்னதென்று இந் நூலாசிரியரா
ஸ்மைல்ஸ் சொன்ன வரலாறுகளை இங்கு
வாறு சுருக்கிச் சொல்லுவோம்.

இப்புத்தகம் எழுதத் துவக்கப் பதினைந்து வரு
களுக்கு முன்னே இங்கிலாந்துதேசத்தின் வட
த்திலே ஒரு நகரத்தில், மாலைவேளைகளில் ஒரு
ராடொருவர் கூடிக்கற்று விருத்தியடைய வே
டுமெனக் கருதி ஒரு சங்கமாய்ச் சேர்ந்த சில
ளைகள் தம்முன்னர் ஒரு உபந்நியாசம் செய்யும்
இந் நூலாசிரியரை வருந்தி வேண்டிக்கொண்
ர். அதன் வரலாறென்னவெனின்:—

ரைப்பிள்ளைகள் சிலர் அவரவர்க்குத் தெரிந்த
ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு கல்வி
தேர்ச்சி பெறும்பொருட்டு மாலைவேளைகளில்
டம் கூட வேண்டுமெனத் தீர்மானித்தனர்.
லே அவர்களுள் ஒருவன் வசிக்குமிடமான
குடிசையில் எல்லோருங் கூடவேண்டுமென்
ற்பாடாயிற்று. அப்படியே நடந்துவருகையில்
பிள்ளைகளும் சிலர் அவர்களுடன் கூட்டுக்கல்
க்கும்படி வந்துகூட, அவ்வீட்டறை அத்தனை
ம் கூடிக் கற்பதற்குப் போதாமற்போயிற்று.
ல் கோடைகாலம் வந்தவுடனே அக்குடிசை
வெளிப்புறத்திலுள்ள தோட்டத்தில் சிறிது
ம் வளைத்துக்கொண்டு வெளியான அவ்விடத்
யே பாடம்படிக்கலானார்கள். ஆகாயம் மாசு
வற்று நிர்மலமா யிருந்த கோடை கால
வேளைகளில் அச்சிறுவர்கள் அங்கே இரா
நடுநேரமளவும் கூடிக் குலாவிக்கொண்டிருப்
ர்; அப்படியிருக்க ஒவ்வொரு சமயங்களில்